திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 1] விகாரி சித்திரை - 1959 மே [மணி 8

ஆலயங்கள்

நமது நாடு பழங்காலத்திலிருந்து பண்பு மிகுந்த நாடாகவே திகழ்ந்து வருகிறது. கிரேக்க, எகிப்திய, ரோம் மத்தியதரைக்கடலைச் சார்ந்த நாடுகள் ஒருகாலத்தில் நாகரீகத்தில் உன்னத நிலையை யடைந்திருந்தபோதிலும் நாளடைவில் அவற்றின் பண்பாடுகள் மாறுதலடைந்து விட்டன. உலக வரலாற்றிலேயே நமது நாட்டுக் கலைகளும் பண்புகளும் நிலைபெற்று விளங்குவதற்கு முக்கிய காரணம் நமது நாகரீகம். ஆன்மநேய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் நிலையில்லாத உடல் வளர்ச்சியையும் உலக முன்னேற்றத்தையும் விட நிலையான உயிருக்கு உறுதி தேடுவதே உண்மையான குறிக்கோளாக அமையவேண்டும். அதற்குத் தெய்வ பக்தி இன்றியமையாதது என்ற உணர்வேயாகும்.

இவ்வுலக இன்பத்துக்குப் பொருட்செல்வம் எவ்வளவு அவசியமோ அதே போல் இவ்வுடலைவிட்டுச் செல்லும் உயிருக்கு நிலைத்த பேரின்பம் எய்துவதற்கு இறைவழிபாடும் அன்போடியைந்த அருள் வாழ்க்கையும் அவசியம் என்ற உண்மை நம் நாட்டில் தொன்று தொட்டு மக்கள் வாழ்க்கையில் வேரூன்றியிருப்பது நமது சமயத்தின் தனிச் சிறப்பை நன்கு விளக்கக் காண்கிறோம்.

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை யருளில்லார்க்கு
அவ்வுலகமில்லாகி யாங்கு' —என்பது குறள்

நமது சமயத்தில் உயர்ந்தோர் எனப்படுவோர் உள்ளத்துறவுடைய பெரியோர்களே. தான் என்ற ஆணவ முனைப்பை அறவே யொழித்து எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதேயல்லாமல் வேறொன்றறியாதவராய்த் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்ப் புகழுடன் வாழ்பவரே உயர்ந்தோர் என்பது

'யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்'

என்ற குறளால் அறியலாம்.

நமது சமயத்தைப் பாதுகாக்க உதவிய நிலையங்களுள் திருக்கோயில்களே

மிகச் சிறந்த கருவிகளாய் விளங்குகின்றன. பண்டைக்காலத்தில் அரசர்கள் ஆலயங்களைக் கட்டினபோது மக்களும் பூரண அன்புடனும் ஆர்வத்துடனும் ஒத்துழைத்தனர். ஆலயங்களில் பூசைகள் வழுவாமல் நடைபெற பல தானசாசனங்கள் மதிற் சுவரிலேயே கல்வெட்டுக்களில் பொறித்து வைத்தனர். தானம் விடப் பட்டச் சொத்துக்களின் விபரங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நமது நாட்டு வரலாறு புதைபொருட்கள் மூலமும் சிலாசாசனங்களின் மூலமும் ஓரளவு விளங்குகிறது. ஏனைய நாடுகளைப்போல நம் நாட்டு வரலாறு தொடர்ச்சியாக எழுதப்படவில்லை. ஆலயங்களில் காணப்படும் கல்வெட்டுக்களின் மூலம் நம்நாட்டுச் சரித்திர, அரசியல், சமூக சமய, பொருளாதாரச் செய்திகள் புலனுகின்றன. சில செய்திகள் செப்புப்பட்டயங்களிலும் அமைக்கப் பெற்றுள்ளன. நாடெங்கும் காணப் படும் எழுத்துக்களிலிருந்து தமிழ் மொழியின் தொன்மை நன்கு விளங்குகின்றது.

அரசியல் துறையில் சில யுத்தங்களைப் பற்றியும் தென்னுற்காடு மாவட்டம் திருவேந்திபுரம் ஆலயத்திலுள்ள கல்வெட்டில் காண்கிறோம். திருக்கோயில்களையும் அவைகளின் சொத்துக்களையும் பாதுகாக்க இராணுவப்படை யமைத்ததாகச் சங்கரமநல்லூர் (கோயம்புத்தூர் மாவட்டம்), திருவாலீச்சுரம் (திருநெல்வேலி மாவட்டம்) பெருங்குளம் கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்து தெரிகிறது. ஆலய நிர்வாகத்தைப்பற்றியனவும் நிர்வாகத்தில் வழுவினருக்கு விதிக்கப் பட்ட அரசதண்டனை பற்றியனவும் சில கல்வெட்டுக்கள் உள்ளன. உபரி வருமானத்தை மற்றொரு வசதிக் குறைவுள்ள கோயிலுக்குக் கொடுத்த வரலாறும் காணப்படுகிறது. திருக்கண்ணபுரத்தைச் சேர்ந்த இராமனதீச்சுரம் கோயில் பழுதடைந்து வருமானம் குறைந்தபோது சிதம்பரம் தீக்ஷதர்களை யணுகியதாகவும் சிதம்பரம் கோயிலைச் சேர்ந்த சில ஆலய நிர்வாகிகள் மூலம் உபரி வருமானத்திலிருந்து உதவி செய்யுமாறு ஏற்பாடு செய்ததாகத்தெரிகிறது. மூன்றும் இராஜ ராஜ சோழன் காலத்தில் கோயில் பணத்தைக் கையாடல் செய்து சிவத் துரோகம் செய்த சில கணக்கர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்ததாகத் திருநாகேச்சுரம் கல்வெட்டில் காணப்படுகிறது. நாட்டியம் சங்கீதம் முதலிய கலைகளுக்கு மான்யம் ஏற்படுத்தியதாகச் சில கல்வெட்டுக்களில் காண்கிறோம்.

திருவிடைவாயிலில் கோயில் மதிலில் திருஞானசம்பந்தர் தேவாரக் கல்வெட்டு அகப்பட்டதுபோல குடுமியாமலை, சிதம்பரம் கோயில்களில் சில சங்கீத நாட்டியப் பதிகங்கள் காணப்படுகின்றன.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் அவதரித்து சமய வளர்ச்சிக்குரிய திருமுறைகள் திவ்வியப்பிரபந்தங்கள் பாடியருளியபின்னர் திருக்கோயில்கள் மிகவும் நன்றுகப் பராமரிக்கப்பெற்றன. பல கோயில்களில் அவர்களுடைய உருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

இப்போது பாடல்பெற்ற சிவன் கோயில்களிலும் முருகன் ஆலயங்களிலும் மங்களாசாசனம் பெற்ற வைணவத் திருப்பதிகளிலும் தலப்பதிகங்களும் பிரபந்தங்களும் சலவைக்கல்லிலும் செப்பேடுகளிலும் பொறிக்கப் பெற்று வருகின்றன. வந்து வழிபடும் மக்களுக்குப் பயன்படுவதுடன் பாடபேதங்கள் ஏற்படாதவாறு பாதுகாக்கவும் இச்சாஸனங்கள் உபயோகப்படும். மற்ற ஆயலங்களிலும் வழிபாட்டுக்குரிய பாடல்கள் கல்வெட்டுக்களில் அமைக்கப்பெறுகின்றன,

ஆத்மீகத்துறையில் மிக்க உயர்ந்த நிலையை எய்தியுள்ள நம்நாட்டுத் திருக்கோயில் நாகரீகம் உலகத்திலுள்ள நாடுகளிலும் பரவியிருப்பதைக் காண்கிறோம். சமீபத்தில் சென்னை கவர்னர் மாளிகையில் ஒரு கண்காட்சியமைத்துச் சொற்பொழிவு நிகழ்த்திய பிக்கு சமன்லால் என்ற சமயப் பிரசாரகர் உலகத்தில் பல நாடுகளுக்குச் சென்று சேகரித்த புகைப் படங்களையும் நிழற்படங்களையும் காட்டி நம் நாட்டுத் திருக்கோயில்களையும் திருவுருவங்களையும் நினைப்பூட்டும் வகையில் இதர நாடுகளிலிருக்கும் ஆலயங்களையும் நிலையங்களையும் பற்றி விவரமாய் விளக்கினார். பர்மா, சீனா, ஜப்பான், இந்தோசைனா, மெக்ஸிகோ, கொலம்பியா, காடிமாலா, பெரு முதலிய தென் அமெரிக்கா நாடுகளில் இருக்கும் கோயில்களையும் உருவங்களையும் நம்நாட்டுக் கோயில்களையும் உருவங்களையும் போன்றே அமைத்திருக்கிறார்கள். யானையேயில்லாத தென் அமெரிக்கா நாடுகளில் யானை உருவங்கள் கோயில்களில் காணப்படுகின்றனவாம். யுத்தத்திற்குரிய தெய்வமாக சிவபெருமான் உருவம் வணங்கப்பெறுகிறதாம். சில கோயில்களில் பஞ்சபூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, வானம் முதலியவை உருவங்களாக அமைக்கப்பெற்று வணங்கப்படுகின்றனவாம். விஷ்ணு ஆலயங்களுமிருக்கின்றனவாம்.

நம் நாட்டு ஆலயங்கள் அன்றுபோல் இன்றும் பக்திக்கு நிலைக்களன்களாகவும் ஓவியம் சிற்பம் முதலிய கலைகளுக்குக் கூடங்களாகவும் இசைநாடகம் முதலிய கலை அரங்குகளாகவும் விளங்குகின்றன.

சமயப் பிரசாரத்தின் மூலம் பிற மதத்தினரை நம்மதத்துக்கு மாற்ற வேண்டுமென்பது நமது சமயத்தின் குறிக்கோள் அல்ல. எக்கோலங் கொண்டாலும் எந்நிலையில் நின்றாலும் இறை உயிர்தனை யுண்மைகளை யுணர்ந்து இறைவனிடமும் இறையம்சமாகிய உயிர்களிடமும் அன்பு பூண்டு ஒழுகும் நன்மக்கள் யாவரும் இறைவன் திருவடி யெய்துவர் என்பது யாவரும் ஒப்பமுடிந்ததாகும். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' 'அன்பே சிவம்' 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' 'மக்கள் சேவையே மாதவ சேவை' என்ற அடிப்படையில் விளங்குவது நம் சமயம். நம் திருக்கோயில்களே மௌனப்பிரசார நிலையங்களாக உள்ளன. நம் நாட்டு மன்னர் வாழ்ந்த அரண்மனைகள் சிதைந்துபோயின. ஆனால் அவர்கள் கட்டிய திருக்கோயில்கள் நிலைபெற்றிருக்கின்றன. நம் கோயில்கள் அறம் கூறவைகளாவும் (நீதிமன்றங்கள்) ஊராட்சி மன்றங்களாகவும் (வாரியத்தார் கூட்ட மண்டபம்) விளங்கின வரலாறு சில கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

'இலங்கு முயிரனைத்தும் ஈசன்கோயில்'

'பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிற்கின்ற பரிபூரணானந்தமே' அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆநந்தபூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது அதுவே கடவுள் என்ற உண்மையைத் திரு வி. கலியாண சுந்தரனார் பாடலில் காணலாம்.

'கரும்பனு கப்புனல்
கொழிக்குங் காலருவிகோயில்
கரைமணலும் கலங்காத
பூங்காற்றும் கோயில்
அரும்புமலர் காய்கனிகள்
அளிஇனிமைகோயில்
ஆடுமயில் கூவுகுயில் அறை
சுரும்பு கோயில்
விரும்புநடை கலைமானும்
மெல்லானுங் கோயில்
வீரமுகம் காதல் விழி
ஈரமனங் கோயில்
அரும்பிறவிப் பயனடைந்த
அருட்குரவன் கோயில்
அகிலமெலாம் நிர்கோயில்
அருட்சோதி யரசே'

சைவம்

திரு K. வச்சிரவேலு முதலியார், B.A., L.T.,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பத்தாம் சூத்திரம்

பிறப்பு நிலையில் உயிரின் அறிவு செயல்கள் நிகழும்போது முதல்வனும் உடனாகி நின்றே அவ்வாறு நிகழுமாறு பணித்து வருகின்றான்; இதனை 'நாம் எழுதும்போது பேனாவும் கையும் உடனாகி நிற்றலை' உவமையாகக் கொண்டு உணரலாம். இங்ஙனம், முதல்வன் உடனிற்பினும், உயிர் யான் எனது என்னும் செருக்கோடு முயலும்போது அவன் தன் இருப்பைச் சிறிதும் அவ்வுயிர்க்குக்காட்டாது, தான் பின் நின்று, அதன் வழியிலே அதனைச் செல்லுமாறு ஏவி விடுகின்றான். அதனால், உயிர் முதல்வன் உபகாரத்தை மறந்து செய்யும் செயல்களுக்குத்தானே பொறுப்பு ஆதலின், இருவினை அதைப் பற்றுகின்றது.

இங்ஙனம், முதல்வன் தான் எனத் தன்னைக் காட்டாது உயிரின் செயலில் மறைந்து வந்தாற்போல, முதல்வனிருப்பை உணரும் வீட்டு நிலையில், ஆன்மாத்தான் என ஒரு முதல் காணப்படாதபடி எல்லாம் முதல்வன செயலே என்னும்படி அவன் வியாபகத்தில் அடங்கி ஒன்றாகி, அவன் அருளால் அல்லது ஒன்றையும் அறிதலோ செய்தலோ இன்றி அருள் வழி நிற்றல்வேண்டும். இங்ஙனம் முதல்வனோடு ஒன்றுதலால் இயற்கை மலம் எனப்படும் ஆணவத்தின் வாதனை பற்றறக் கழியும்; அருள்வழி நிற்றலால் அருளே காட்சிப்பட்டு உலகம் காட்சிப்படாது; அதாவது மாயையின் செயல் பற்றறக் கழியும்; ஆதலினால், இருவினைகளும் ஆன்மாவைப் பற்ற மாட்டா; எல்லாம் முதலவன் செயலேயாய் முடியும்.

இச்சூத்திரத்தால் குறிக்கப்படும் மெய்யுணர்வுநிலை அருணிலை எனப்படும். இதுவே மேலே இராப்பகலற்ற நிலை எனப்படும் நான்காம் நிலை.

இச்சூத்திரப் பொருள் "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச் — சார்தரா சார்தருநோய்" என்னும் அருமைத் திருக்குறளின் அனுபவ விரிவுரையாக அமைதல் கருதத்தக்கது.

பதினொன்றாம் சூத்திரம்

கண் பொருள்களைக் காணும் இயல்பு உள்ளது; ஆயினும், உயிரின் அறிவு உடனிருந்து செலுத்திக் காட்டினால் அன்றி அதற்குக் காட்சி நிகழாது. ஆதலினால் பொருள்களைக் கண் காணும்போது உயிரின் உதவியைக் கொண்டே காணும்.

இவ்வாறே, உயிர் பொருள்களை அறிந்து அவற்றில் அழுந்தி நின்று அநுபவிக்கும் இயல்பு உள்ளது; ஆயினும், முதல்வன் திருவருள் உடன் கலந்து செலுத்திப் பொருள்களைக் காட்டினால் அன்றி அது பொருள்களைக் காணாது.

மேலும் கண் பொருள்களைக் காணும் போது உயிரின் அறிவு அதற்குப் பொருள்களைக் காட்டித் தானும் காணும்; உயிரின் அறிவுக்குக் காட்சி இல்லையென்றால் கண்ணிற்கும் காட்சி இல்லை தான். இவ்வாறே உயிர் பொருள்களை அறிந்து அனுபவிக்கும் போது, உயிர்க்கு அவ்வனுபவம் நிகழ்தற்பொருட்டு முதல்வன் அவ்வுயிர்க்குப் பொருள்களைக் காட்டித் தானும் அவற்றில் அழுந்தாது காண்பன். இவ்வுபகாரம் முதல்வனால் எல்லாவுயிர்களுக்கும் பிறப்பு வீடு என்னும் இரு நிலைகளிலும் எஞ்ஞான்றும் செய்யப்படுகின்றது. பிறப்பு நிலையில் உயிர்கள் அசத்தாகிய உலகப்பொருள்களைத் தம் அறிவிச்சை செயல்களால் பற்றி விடயித்து இன்ப துன்ப மயக்கம் என்னும் மூவகை வேதனைப் படும்; வீட்டு நிலையில் முதல்வனையே தம் அறிவு இச்சை செயல்களுக்கு விடயமாகப்

பற்றி அழுத்திப் பேரின்பம் துய்க்கும். தாய்ப் பால் அருந்தும் குழவிக்குத் தாய் அதனை எடுத்து அணைத்துத் தன்னிடம் சுரக்கும் பாலை உண்ணக் கொடுத்து உபசரிப்பது போலவே, வீட்டு நிலையில் முதல்வன் உயிர் களுக்கு உபசரிக்கின்றான். இக்கருத்தை மாணிக்கவாசகர், "**தாயாய் முலையைத்தரு வானே**" என அருளிச் செய்துள்ளார்.

இவ்வாறு பிறப்பு வீடு இரண் டினும் முதல்வன் செய்யும் உபகாரத்தைச் சிவஞானத்தாற் சிவனைக் காணும் சிவஞானி கள் முன் சூத்திரங்களாற் கூறியபடி கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து உணர்வர். அவ்வாறு முதல்வன் உபகாரத்தை உண்மையாக உணர்ந்த மெய்யுணர்வின் பயனாக அவர்க ளுக்கு இடையறுப் பேரன்பு கரைகடந்து எழும்; அந்நிலையில், அவ்வன்பே இன்பமாய்ச் சிவம் வெளிப்பட அதன் கண் அழுந்தி அன்பே சிவமாய் அமர்ந்திருப்பார்.

இதுவே பரமுத்தி நிலையில் ஆன்மாச் சிவமாந்தன்மைப் பேரா இயற்கை பெற்று வாழும் நிலை. இது சுத்தத்தின் கண் நிகழும் ஆதீத நிலை எனவும், இன்புறு நிலை எனவும் கூறப்படும்.

பன்னிரண்டாம் சூத்திரம்

இன்புறு நிலையைத் தலைப்பட்ட பெரு மக்கள், முதல்வன் திருவருளால் உந்தப்பட் டும், அன்றிப் பிராரத்த வாதனை காரணமாக வும், சிற்சில சமயங்களில் அதீத நிலையின் நீங்கி உலக முகப்படுவர். அந்நிலையில் மல வாதனை காரணமாக "யான் எனது" என் னும் செருக்குத் தம் உணர்வில் தோன்றாத படி ஞான நீரால் வாதனை மாசு கழுவுவர்; தம்மோடு ஒத்த மெய்யன்பரொடு கூடி நிற்பர்; திருக்கோயில்களில் உள்ள திருவுருவங்களை யும் திருவேடத்தையும் சிவன் எனவே தெளி யக் கண்டு தொழா நிற்பர்.

இச்சூத்திரம் அணைந்தோர் தன்மை எனப்படும் சீவன் முத்தர் இயல்பு கூறுவது. இவ்வியல்பைத் திருஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகளில் காணலாம்.

சிவஞான போதம் தலையான நூலாதல் பற்றி அதன் பொருணிலைபற்றி இதுகாறும் கூறப்பட்டது.

(4) **சிவஞான சித்தியார்**: இது சிவஞான போதத்தின் வழி நூல். மெய்கண்டதேவர் மாணக்கர் பல்லோருள்ளும் சிறந்த அரு ணந்திசிவனார் அருளிச் செய்தது; பரபக்கம் சுபக்கம் என்னும் இரு பெரும் பகுதிகளை உடையது. பரபக்கம் 301 திருவிருத்தங் களால் ஆயது; சிவஞான போத அவையடக் கத்தின் பின் பகுதி "தம்மை—உணரார் உணரார்; உடங்கியைந்து தம்மிற்-புணராமை கேளாம்புறன்" என்பது. இப்பகுதியின் விரிவுதான் பரபக்கம்.

பரபக்கத்தில் பின்வரும் சமயங்களின் கொள்கைகளும் அவற்றின் மறுப்பும் முறைப் பட வைத்துக் கூறப்பட்டுள்ளன. அவை (1) உலகாயதம், (2) சௌத்திராந்திகம், யோகாசாரம், மாத்துமிகம், வைபாடிகம் என நால்வகைப்படும் பௌத்தம், (3) நிகண்ட வாதம், ஆசீவகம் என இருவகைப்படும் சம ணம், (4) பட்டாசாரியன் மதம், பிரபாகரன் மதம் என இருவகைப்படும் மீமாஞ்சை, (5) சத்தப் பிரமவாதம், கிரீடாப் பிரமவாதம், பாற்கரிய வாதம், மாயாவாதம் என நால் வகைப்படும் ஏகான்ம வாதம், (6) சாங்கியம், (7) பாஞ்சராத்திரம் என்பவை.

சுபக்கம் 328 திருவிருத்தங்களை உடை யது. இதன் பொருணிலை சிவஞான போதத்தின் பொருணிலையே ஆகும். இது சிவஞான போதப் பொருளையே விரித்துத் தடைவிடைகளுடன் நிறுவுகின்றது. இந் நூலால் விளையக்கூடிய அனுபவப் பயனைத் திருவுளங்கொண்டு, தருமையாதீன முதற் பரமாசாரிய சுவாமிகள் குருஞான சம்பந்தர்,

"பாரில்உள்ள நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதி போதும்,"

என்றருளிச் செய்துள்ளார்.

திராவிட மாபாடிய கருத்தா சிவஞான சுவாமிகள் "சிவஞானசித்தி சிவாகமாத்தங் களுக்கெல்லாம் உரையாணி எனச் செய்யப் பட்டு நிலவுவது" எனக் கூறியுள்ளார்.

"அறியாமை அறிவகற்றி அறிவின் உள்ளே
அறிவுதனை அருளினால் அறியாதே அறிந்து,
குறியாதே குறித்தந்தக் கரணங்க ளோடும்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யாயின்"

என இதன் சுபக்கத்தில் வரும் பாதி விருத்தம் (எட்டாம் சூத்திரம் முப்பதாஞ் சூத்திரத்தின் முற்பகுதி) பாச நீக்கமும் தெளியும் நிலையும் இனிது விளக்கி, உலகச்சார்பு நீங்குதற்குரிய வழியைத் துலக்குகிறது.

(5) **இருபாவிருபஃது:** இதுவும் அருணந்தி சிவனரால் அருளிச் செய்யப்பட்டது. வெண்பா ஆசிரியப்பா என்னும் இருவகைப் பாக்களால் அந்தாதித்தொடை அமையப் பாடப்பட்டது; இருபது செய்யுட்களாலாயது. மெய்கண்ட தேவரை எதிர்முகமாக்கி வினவும் முகத்தால் சித்தாந்த அதிநுட்ப உண்மைகளையும் சிவானுபவத்தையும்தெளிவு படுத்துவது.

(6) **உண்மை விளக்கம்:** இது மெய்கண்ட தேவர் மாணக்கர் திருவதிகை மனவாசகங்கடந்த தேவரால் அருளிச் செய்யப்பட்டது; 53 வெண்பாக்களால் ஆயது; முப்பத்தாறு தத்துவம், ஆணவம், இருவினை, உயிர், இறைவன், இறைவன் திருநடனம், ஐந்தெழுத்தருள் நிலை, பரமுத்தி நிலை, அணைந்தோர் தன்மை என்பனவற்றைச் சுருங்கல் விளங்கல் என்னும் அழகுபடத் தொகுத்துக் கூறுவது. மெய்கண்ட தேவரை மாணக்கர் வினவ, அவர் விடை கூறி வருவதுபோல வைத்து ஆக்கப்பட்டது. இந்நூல் 'மெய்கண்ட சந்தான அனுபவத்திரட்டு' எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது. சைவ சாத்திரங்களைக் கற்று உணர விரும்புவோர் இதனையே முதற்கண் ஓதி உணர்தல்வேண்டும்.

சிவஞான போதம் முதலிய நான்கு நூல்களும் 13-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் இயற்றப்பட்டனவாதல் வேண்டும்.

மெய்கண்ட தேவர் மாணக்கருள் தலைசிறந்தவர் அருணந்திசிவனர் என்பது மேலே கூறப்பட்டது. அவர் மாணக்கர் பலருள்ளும் சிறந்தவர் கடந்தை மறைஞான சம்பந்தர் ஆவார். இவர் நூல் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லை. இனி, இவர் தம் மாணக்கர் பல்லோருள்ளும் தலை சிறந்தவர் கொற்றவன்குடி உமாபதி சிவனர் ஆவர். இவரே மெய்கண்ட நூல்களுள் எஞ்சியுள்ள எட்டு நூல்களையும் அருளிச் செய்தவர். இவருடைய காலம் 13-ஆம் நூற்றுண்டின் இறுதியும் 14-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியும ஆகும்.

(தொடரும்)

ஜீர்ணேத்தாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக அறிக்கை

தியாகராஜசுவாமி தேவஸ்தானம், திருவாய்மூர், நாகப்பட்டினம் தாலூகா.

சைவ சமய ஆசாரியர்களுள் ஸ்ரீ சம்பந்தர், அப்பர் முதலியவர்களால் பாடல்பெற்றதும், சப்தவிடங்க ஸ்தலங்களுள் ஒன்றுன திருவாய்மூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபாலின் நன்மொழியம்மை சமேத ஸ்ரீ வாய்மூர்நாத ஸ்வாமிக்கும், ஸ்ரீ நீலோத் பாலாம்பிகா சமேத ஸ்ரீ நீல விடங்க தியாகராஜ ஸ்வாமிக்கும், சமய குரவர்களுக்கும் மற்ற பரிவாரங்களுக்கும் நாளது விகாரி வருஷம் வைகாசி மாதம் 18வ (1-6-59) திங்கட்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் உதயாதி 2¼ நாழிகைக்குள் விருடப லெக்னத்தில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறபடியால் பக்த ஜனங்கள் அனைவரும் வந்து ஸ்ரீ சிவ பெருமானை தெரிசித்து பேரானந்தப் பெருவாழ்வு அடையும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகிறேம்.

எஸ். வி. ஆர். சுப்பையாத்தேவர்
தர்மகர்த்தா

பி. பி. சந்திரசேகரன் செட்டியார்
நிர்வாக தர்மகர்த்தா

கே. இரெத்தினசபாபதி முதலியார்
தர்மகர்த்தா

எஸ். மகாலிங்கம், பி.எஸ்ஸி.,
நிர்வாக அதிகாரி

ஆழ்வார்கள் பாடிய திருக்கோயில்கள்

(மலைநாடு)

(மஹாவித்வான் காஞ்சீபுரம் P. B. அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய திருவித்துவக்கோட்டைப் பாடியருளின குலசேகராழ்வார் தமது பதிகத்தில் உபகரித்தருளிய விசேஷார்த்தங்களின் தொடர்ச்சி. மூன்றாவது பாட்டு முதலாக.

3. மீனோக்கு நீள்வயல் சூழென்று தொடங்கும் மூன்றும் பாட்டில் "தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன் கோல்நோக்கி வாழுங் குடிபோன்றிருந்தேன்" என்று அரசன் கோல்நோக்கி வாழுங்குடியைத் தமக்கு உவமை கூறினராழ்வார். குடிமக்களைப் பாதுகாப்பதற்கென்றே தனி மாலையிட்டிருப்பவனான தலைவன் தனது கடமையைச் செய்யாத போழ்து அரசனை எதிரிடுதல் முறைமையன்று. அரசனது அருள் எப்படியாவது தங்கள்மீது பெருகி வருமபடி வேண்டிக் கொள்ளுதலே யன்றி வேறு எதுவும் செய்யலாவதில்லை. அவ்வாறே ஆழ்வார் தம் போன்றவர்களைக் கடாக்ஷிப்பதற்கென்றே திருநாட்டைவிட்டுத் திருவித்துவக்கோட்டிலே வந்து தங்கி யிருக்கின்ற பெருமான் தன்னுடைய வருகையின பயனைத் தான் பெறுவிடினும் 'இவன் கடாக்ஷித்திலனாகில் வேறொருவனைப் பார்ப்போம்' என்று வேறொருவனிடம் போக வழி தேடுதல் உண்மையடியானுக்கு உரியதன்று என்பது இங்குக் காட்டிற்றாகின்றது. உபமானம கூறுகின்ற பின்னடிகளில் "தான் நோக்காது எத்துயரம் செய்திடினும்" என்றதற்கு ஏற்ப உபமேயம் கூறுகின்ற முன்னடிகளில் எம்பெருமான் துயரம் செய்தலைக் கூறியிருத்தல் வேண்டும். நோக்காமை மட்டுமே கூறப்பட்டிருப்பினும் அதுவே துயரஞ் செய்தலாகக் குறிக்கப்பட்டதென்று கொள்க. எம்பெருமானது கடைக்கண்ணோக்கு தங்கள்மீது பெருகாமலிருப்பதற்கு மேற்பட வேறொரு துயரமும்வேணுமோ அடியார்களுக்கு? இங்கு, "வான்நோக்கி வாழுமுலகெலாம், மன்னவன் கோல் நோக்கி வாழுங்குடி" என்ற திருக்குறளும், "கோல் நோக்கி வாழுங் குடியெல்லாம் தாய்முலையின் பால்நோக்கி வாழுங்குழவிகள்—வானத் துளி நோக்கி வாழுமுலகம்" என்ற நான்மணிக்கடிகையுமறியத்தக்கன.

இந்த மூன்றாவது பாட்டில் வித்துவக்கோட்டுத் திருப்பதிக்கு "மீன் நோக்கும் நீள் வயல்சூழ்" என்று அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது. வயல்களானவை மீன்களால் நோக்கப்பட்டிருப்பதாக மூலமுள்ளது. மீன்கள் விரும்பி வாழுமிடமான வயல்களாலே சூழப்பட்டதென்று நம் போல்வார் பொருளெழுதிவிடக்கூடும். வியாக்கியான சக்ரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை 'கடலில் வாழ்கின்ற மீன்கள் இக்கடல் வற்றிப்போனால் நாம் திருவித்துவக் கோட்டு வயலிலே புகுந்து இனிது வாழலாமென்று நோக்குகின்றன' வாகப் பொருள் விவரித்திருப்பது அதிசயோக்தியெனினும் மேதையின் மிக்க சிறப்பைக் காட்டுமதென்று கீர்த்திமூர்த்தியான தாக்ஷிணாத்ய கலாநிதி சாமிநாதையரவர்கள் மிகவுகந்து கூறினர்.

4. வாளாலறுத்துச் சுடினுமென்ற நான்காம் பாட்டில், மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளனைத் தமக்கு உவமை கூறுகின்றாராழ்வார். வித்துவக் கோட்டுறையு மிறைவா! நீயே எனக்கு ஸகல விதரக்ஷகன் என்று நான் துணிந்த பின்பு நீ எனக்கு எவ்வளவு துன்பங்களை இந்நிலத்தில் செய்தாலும் அவற்றையெல்லாம் நான் நன்மையாகவே கருதி மிக நன்றியறிவு பாராட்டி மேன்மேலும் அன்பு செய்து வருவனேயன்றி உன்னைச் சிறிதும் குறை கூற மாட்டேனென்பதை மிக ஏற்ற உபமானத்தினால் பெறுவித்தருளுகின்றார், ஸம்ஸார

மாகிற கொடிய நோயைத் தொலைப்பதற்கு ஏற்ற மருத்துவன் திருமாலொருவனே யென்பது நூற் கொள்கை. அதற்குச் சேர வித்துவக் கோட்டம்மானுக்கு மருத்துவனை உவமை கூறினர். "மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா!" என்றார் பெரியாழ்வாரும். "வைத்யோ நாராயணோ ஹரி" என்பர் வடநூலாரும். உலகில் மருத்துவன் நமக்குச் செய்வது அறுத்தல் சுடுதல் ஊசி குத்துதல் முதலியன. அவை நோய் தீர்க்கும் உபாயமாவது போல, எம்பெருமான் நம்மைத் துயரங்களனுபவிக்கச் செய்வது கருமங்களைப் போக்கு முபாயமாமென்பது துணிபு. எம்பெருமானுடைய திருவடி பணிந்து உய்ந்தவரான அருளாளப்பெருமானெம்பெருமானார் தாமருளிச் செய்த ஞானசாரத்தில் "ஆரப் பெருந்துயரே செய்திடினு மன்பர்கள்பால், வேரிச் சரோருகைகோன் மெய்ந்நலமாம்— தேரில், பொறுத்தற்கரிதெனினும் மைந்த னுடற்புண்ணை, அறுத்தற்கிசை தாதையற்று' என்றிட்ட செய்யுள் இங்கே அநுசந்திக்கவுரியது.

5. வெங்கட்டிண்களிறடர்த்தா யென்னும் ஐந்தாம்பாட்டில் "வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே" என்று மரக்கலத்தின் பாய்மரத்து உச்சியிலே தங்கிய பறவை யொன்றைத் தமக்கு உவமை கூறுகின்றாராழ்வார். கடலின் நடுவிலே செல்வதொரு கப்பலின் பாய்மரத்துச்சியில் தங்கிய பறவை அதனைவிட்டு வேறொரு போக்கிடந் தேடித் தனது உடல் வலிவைக் கொண்டு நாலு பக்கத்திலும் விரைவாகப் பறந்து சென்று பார்த்தாலும் எங்கும் கரை காணக் கிடையாமையிலே மீண்டும் அக்கப்பலின் பாய்மரத்து உச்சியிலேயே கால்பாவி நிற்பது போல, வித்துவக் கோட்டம்மானே! உன்னை விட்டு எங்குச் சென்றாலும் "காதம் பலவும் திரிந்துழன்றேற்கு அங்கோர் நிழலில்லை நீருமில்லை, உன்பாத நிழலல்லாமல் மற்றோருயிர்ப்பிடம் நானெங்குங் காண்கின்றிலேன்" என்ற பெரியாழ்வாரருளிச் செயலின்படி வேறு சரணமில்லாமையாலே மீண்டும் உன்னையே அடைதற்கு உரியேன் யான் என்றாராயிற்று. "ஸம்ஸாரஸாகரம் கோரம் அநந்தக்லேசபாஜநம்" என்ற வடநூல் வசனத்தின்படி வரம்பில்லாத பயங்கரமான பிறவித் துன்பத்துக்கு அபாரமாய் அலையெறிந்து கொண்டு அச்சந் தருகின்ற கடலை உவமையாகக் குறிக்கொண்டனர். "புணைவன் பிறவிக் கடல் நீந்துவார்க்கே" என்ற திருவாய்மொழியின்படி பிறவிப் பெருங்கடலைக் கடத்துங் கருவியாகிய எம்பெருமானுக்கு கடல் கடத்தற்குரிய கருவியாகிய கப்பலை உவமையாகக் குறிக்கொண்டனர். நம் போல்வார் பற்றுதற்குரிய அவன்றன் திருவடிக்கு கப்பலில் பற்றுதற்குரிய இடமாகிய பாய்மரத்தை உவமையாகக் குறிக்கொண்டனர். "கழல்களன்றி மற்றோர் களைகணிலம்" என்றபடி எம்பெருமானது திருவடியையயன்றி வேறு தஞ்சத்தைப் பெறாத ஆழ்வார் தமக்கு கப்பலின் பாய்மரத்தையன்றி வேறு பற்றுக் கோட்டைப் பெறாத பறவையை உவமையாகக் குறிக்கொண்டனர்.

6. செந்தழலே வந்தென்னும் ஆறாம் பாட்டில், வெங்கதிரோற்கல்லால் அலராத கமலத்தை உவமை கூறினர். நெருப்பு தானாக அருகில் வந்து வெப்பத்தைச் செய்தாலும் செந்தாமரைகள் வானத்தில் தோன்றுகிற சூரியனுக்கு அலருமேயன்றி நெருப்புக்கு அலரமாட்டாதென்பது இங்கு உவமை. தமது இருதய கமலத்தை மலரச் செய்வதற்கு உரிய குணாதிசயங்களையுடையனை வித்துவக் கோட்டம்மான் தமது தாபத்தை உடனே ஒழித்தருளாமல் உபேக்ஷித்தாலும் அந்த இதய கமலமானது அப்பெருமானது அனந்த கலியாண குணங்களுக்கு மலருமேயன்றி மற்றொரு தெய்வம் தானாக வலியவந்து தனது குணத்தை வெளிக்காட்டி நின்றாலும் அதற்கு நெகிழாது என்ற கருத்து இப்பாட்டிற் காணத்தகும். கீழும் மேலுமுள்ள பாட்டுக்களிற்போல் இப்பாட்டில் "போன்றேன், போல்வேன், போல" என்னும் உவமச்சொற்கள் இல்லையாதலால் உபமான வாக்கியமும் உபமேய வாக்கியமும் தனியே நின்று உவமவுருபு பெறாமையால் த்ருஷ்டாந்தாலங்காரமென்க. எடுத்துக் காட்டுவமையணியாம். தாமரைப்பூ மலருவதானது சூரியனுடைய வெவ்விய கிரணங்களினால் என்றுணர்ந்தவொருவன் உஷ்ணமான கிரணங்கள் தாமரை மலருவதற்குக் காரணமென்று கொண்டு செந்நிறமுள்ள நெருப்பைக் கொணர்ந்து அதனுடைய வெவ்விய ஜ்வாலைகள் தாமரையின்

மேல் உறைக்கும்படி எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் அத்தாமரையானது தன்னை மலர்த்தும் இயல்புள்ள உஷ்ணகிரணனுன சூரியனுடைய ஆயிரங் கிரணங்களைக் கண்ட வளவில் மலருமேயன்றி அக்னியின் வெப்பத்திற்கு மலராதென்பது இங்கு திருஷ்டாந்தம். இப்படியொரு காரியம் உலகத்தில் நடப்பதில்லையாயினும், ஆழ்வார் தமது உறுதிக்கு ஏற்ற உவமையாகத் தமது புத்தி சமத்காரத்தினுல் கற்பனை செய்து கூறினரென்க.

7. எத்தனையும் வான்வறந்த காலத்துமென்னு மேழாம் பாட்டில் சாதக நியாயத்தைக் காட்டுகின்ருரென்று கொள்க. பாசுரத்தில் சாதகப் பறவையைக் கூருது பயிரைக் கூறியுள்ளாரெனினும் அதுவும் இங்கு விவக்ஷிதமேயாகும். வித்துவக்கோட்டுறையுமிறைவா! தாபத்தைத் தணித்துப் பயிரைக் காப்பதற்கு உரிய மேகமானது மழை பொழியாமல் எவ்வளவு உபேக்ஷித்தபோதிலும் பசும்பயிரானது அந்த மேகந்தன்னையே மேன்மேலும் ஆவலோடு எதிர்பார்க்குமேயன்றி மற்ருென்றை நோக்காது; அவ்வாறுபோல, ஸம்சார தாபங்களையாற்றி என்னையடிமை கொள்வதற்கு உரிய நீ தண்ணளி செய்யாது உபேக்ஷித்தாலும் என் மனம் உன் பக்கலிலே ஒரு காலைக் கொருகால் மிகவும் அன்பு கொண்டு ஆழ்கின்றதேயன்றி வேருென்றை எதிர்பார்க்க நினைக்கின்றிலது என்ருராயிற்று. பயிர் இங்ஙனமிருப்பதற்குக் காரணம் வேருெரு நீர் நிலத்தைத் தேடிப்போக மாட்டாமை போலவே ஆழ்வார் தாம் இங்ஙனமாவதற்குக் காரணம் வேருெரு புகலிடத்தைப் பெருமையே யென்பது வெளிப்படை. இப்பாட்டின் முதலடியில் "வான்வறந்தகாலத்தும்" "வான்மறந்த காலத்தும்" என்பன பாட பேதங்கள். பொருள் ஒக்கும்.

8. தொக்கிலங்கியா றெல்லாமென்னு மெட்டாம் பாட்டில் மகாநதிகளைத் தமக்கு உவமை கூறுகின்ருராழ்வார். "நதீநாம் ஸாகரோ கதி:" என்பர் வடநூலார். ஆறுகளான்வை நாடெங்கும் பரந்து பெருகிச் சென்ருலும் முடிவில் தாம் சென்று சேர்தற்குத் தகுந்த இடமாகிய கம்பீரமான கடலையே அடைதல்போல, நான் உலக வியாபாரங்களில் எவ்வளவு அலைந்தாலும் முடிவாகப் பரமகதியான உன்னையே அடைந்திடுவேனென்கிருர். அன்றியும், ஆறு புகுவதனுல் கடலுக்கு ஒரு நிறைவும், புகாவிடில் கடலுக்கு ஒரு குறைவும் இல்லையேயாகிலும் அதுதான் தன் இயல்பால் புறம்பே நின்று தரிக்கமாட்டாமல் அளவிறந்த கடலிற் புகுதல்போல, யான் உன்னையடைந்தால் அதனுல் உனக்கு ஒரு நிறைவும் அடையாவிடில் உனக்கு ஒரு குறைவும் இல்லையேயாகிலும் யானே என் இயல்பால் வேறிடத்தே நிற்கமாட்டாமல் உனது அனந்த கல்யாண குணத்தில் ஆழ்வேன் என்பதும் ஸூசிதமாகிறது. கடலினுட் புகுந்த ஆறு அதிலேயே லயப்பட்டு அதினின்று மீண்டும் வெளிப்படாதாப்போலவே உனது குணக்கடலிலே இறங்கிய நான் அதிலேயே ஈடுபட்டு ஆழ்ந்திடுவனேயன்றி மீளமாட்டேனென்பதும் ஸூசிதமாகும்.

9. நின்னையேதான் வேண்டி யென்னுமோன்பதாவது பாட்டில் அபூர்வமான ஒரு அர்த்தம் தெரிவிக்கப்படுகிறது. உலகில் ஒருவன் எம்பெருமானிடத்திலே அன்பைச் செலுத்தி அதனுல் செல்வத்தை விரும்பாமல் உபேக்ஷித்திருந்தானுகில், அவன் உபேக்ஷிக்க வுபேக்ஷிக்க அவனது நல்வினைப் பயனுல் அச்செல்வம் அவனை விடாமல் விரும்பி வலியத் தொடர்ந்து சேர்தல் இயல்பு. அபேக்ஷிப்பவனுக்குக் கிடையாதொழிதலும் அபேக்ஷியாதவனுக்குக் கிடைத்தலும் பகவத் ஸங்கல்பத்தினுலாயது. அது போலவே, வித்துவக் கோட்டம்மா! நீ உன் உடைமையாகிய என்னை உபேக்ஷிக்க வுபேக்ஷிக்க நான் உன்னையே விடாது நிற்பேன் என்கிருராயிற்று. இப்பாட்டில் 'நீள் செல்வம்' என்றது மோக்ஷலக்ஷ்மியை என்பாருமுளர். இந்நிலத்தில் எம்பெருமானது திருவடி வாரத்திலேயேயிருக்க ஆசைகொண்டு 'வைகுண்டவாஸேபி நமே அபிலாஷ:' [திருநாடு செல்வதிலும் எமக்கு விருப்பமில்லை] என்று மோக்ஷத்தை வெறுப்பவர்களுக்கும் மோக்ஷம் அநிவராயமாக வந்து கூடுவதைச் சொன்னவாறு.

மேல் பத்தாம் பாட்டு "கொற்றவேல் தானைக் குலசேகரன் சொன்ன, நற்றமிழ் பத்தும் வல்லார் நண்ணுர் நரகமே" என்று இப்பதிகம் வல்லார்பெறும் பேறு கூறித் தலைக்கட்டிற்று.

இப்பதிகத்தின் சாரப்பொருள் விளக்கம்

1. **தருதுயரம் தடாயேல்.** தாயினுடைய தானத்தில் பகவானையும் குழந்தையின் தானத்தில் தம்மையும் வைத்துப் பேசியதனால் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமுள்ள தொடர்பு தாய்க்கும் மகனுக்குமுள்ள உறவு முறை போன்றதென விளங்கும். நம்மையெல்லாம் படைத்துக் காப்பவன் பரமனே என்றவாறு.

2. **கண்டாரிகழ்வனவே.** கணவன் தானத்தில் கடவுளையும் மனைவியின் தானத்தில் தம்மையும் வைத்துக் கூறியதனால் பகவானுக்கும் நமக்கு முண்டான உறவு கணவனுக்கும் காதலிக்குமுள்ள வுறவு போன்றதென விளங்கும். அதாவது, பரமாத்துமாவின் தலைமையும் ஜீவாத்துமாவின் அடிமையும்; ஜீவாத்மா பரமாத்மாவைச் சேர்ந்தால் இன்பம் நுகருதலும், பிரிந்தால் துன்புறுதலும்; ஜீவாத்மா தனது கரணங்களெல்லாவற்றாலும் பரமாத்மாவையே அநுபவித்து ஆனந்தித்தலும் முதலியன.

3. **மீனோக்கு நீள்வயல்சூழ்.** இறைவனை அரசனது தானத்திலும், தம்மைக் குடிமக்களது தானத்திலும் வைத்துக் கூறியதனால் பிரபுவுக்கும் பிரஜைகளுக்குமுள்ள ரக்ஷகத்வ ரக்ஷ்யத்வஸம்பந்தம் பரமனுக்கும் நமக்குமுள்ளதென விளங்கும். அரசன் போலவே இறைவனும் காக்குமியல்வின னென்க.

4. **வாளாலறுத்துச் சுடினும்.** எம்பெருமானை மருத்துவன் தானத்திலும் தம்மை நோயாளியின் தானத்திலும் வைத்துப் பேசியதனால்-பரமன் ஜீவனுக்கு ஹிதம் செய்வதிலேயே நோக்குடையானென்பதும், ஜீவன் அவனிடத்து நம்பிக்கைகொள்ள வேண்டியவனென்பதும் தெரிவிக்கப்பட்டதாம்.

5. **வெங்கட்டிண்களிறடர்த்தாய்.** நாவாயின் தானத்திலே நாராயணனையும், பறவையின் தானத்திலே தம்மையும் வைத்துக் கூறுமிடத்து எங்கும் போய்க் கரைகாணமை கூறியுள்ளதனால் ஜீவனுக்குப் பரமனே ஸ்திரமான ஆதாரமென்பது தெரிவிக்கப்பட்டதாம்.

6. **செந்தழலே வந்து.** இரவியின் தானத்தில் எம்பெருமானையும் தாமரையின் தானத்தில் தம்மையும் வைத்துப் பேசியதனால்-பரமனுடைய அருள் நோக்கைப் பெறாதவன்று ஜீவன் வாடியுலருமியல்வினன் என்பது காட்டிற்றும்.

7. **எத்தனையும் வான்மறந்த.** கடவுளைக் காளமேகத்தின் தானத்திலும் தம்மைப் பயிரின் தானத்திலும் வைத்துக் கூறியதனால்— ஜீவன் பரமனது அருள் வெள்ளத்தை எப்போதும் பெற்றே தரித்திருக்கத் தக்கவனென்பது பெறப்பட்டதாம்.

8. **தொக்கிலங்கியாறெல்லாம்.** கடவுளைக் கடலின் தானத்திலும் தம்மை நதியின் தானத்திலும் வைத்துப் பேசியதனால்-பரமனது பெருமையும் ஜீவனது சிறுமையும் புலனும். நதி கடலிற் சேர்ந்த பிறகு தனக்கென்று ஒரு ரஸமில்லையாகி, கடலின் ரஸமேயாயிருப்பதுபோல, ஜீவன் பரமனைச் சேர்ந்த பிறகு அவனது ரஸத்தையே [உவப்பையே] தனக்கு ரஸமாகக் கொண்டிருத்தலும் அறியக்கிடக்கின்றது.

9. **நின்னையே தான்வேண்டி.** செல்வமுடையவன் தானத்தில் திருமாலை வைத்தும், செல்வத்தின் தானத்தில் தம்மை வைத்தும் பேசியதனால்—அவன் உடையவன், நாம் உடைமை என்கிற ஸ்வஸ்வாமி பாவஸம்பந்தம் விளங்கும்.

10. **வித்துவக்கோட்டம்மா.** திருவித்துவக்கோட்டம்மான் திருவடிகளிலே ஆழ்வார் இங்ஙனம் விண்ணப்பம் செய்ததனால் அவனுக்கு ஆழ்வாரிடம் பெருகிய அருள் வெள்ளம் ஆழ்வாரது அருளிச்செயலின் வழியாய் ஆழ்வாரடியார்களான நம்போல்வாரிடத்தும் பரந்து செல்லுமென்பது தெரிவிக்கப்பட்டதாயிற்று.

திருவித்துவக் கோட்டுத் திருப்பதியநுபவம்

முற்றிற்று.

அடுத்த இதழில் திருநாவாய்த் திருப்பதியின் அநுபவம் வெளிவரும்.

தொண்டரடிப் பொடியாழ்வார்

மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற
திருமாலை பாடும்சீர்த் தொண்ட ரடிப்பொடியெம்
பெருமானை எப்பொழுதும் பேசு.

மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயற் றென்னரங்கத் தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த ஊர்.

—திருவரங்கப்பெருமாளரையர்.

"கொண்டல் குமுறும் குடகு இழிந்து, மதகுஉந்தி, அகில்கொண்டு, நுரைமண்டி, வருநீர் தெண்திரை தொறும் தரளமும் கனகமும் சிதறுவதும்," தன்னில் நீராடியவர்க்கும், தன் கரைகளில் வாழ்பவர்க்கும் மாத்திரமே யன்றி, தன்மேற்பட்ட காற்றுச் செல்லுமிடம் அவ்வளவிலும் உள்ளார்க்கும் முத்திதரவல்ல பொன்னிமாநதி என்று புலவரால் போற்றப்பெறும் காவிரியால் வளம்படைத்தது சோழநாடு. அந்நாட்டிலுள்ள ஊர்களில் ஒன்று மண்டங்குடி என்பது. அவ்வூரின்கண் வேதவிசாரதர் என்ற முன்குடுமிச்சோழிய அந்தணர் ஒருவர் இருந்தார். அன்னாருக்கு மார்கழித் திங்களில் கேட்டை நன்னாளில் ஒரு அருந்திரு ஆண்மகவு அவதரித்தது. அதற்கு விப்பிரநாராயணர் என்ற திருநாமம் இட்டு வளர்த்தனர். அவரும் தென்மொழி, வடமொழி நூல்களைக் கற்றுக் கலை அறிவு நிரம்பப் பெற்றுத் திகழ்ந்தனர்.

விப்பிரநாராயணர், கங்கையிற் புனிதமாய காவிரிக்கரையில் பாம்பணையிற் பள்ளி கொண்டருளிய திருவரங்கப் பெருமானுக்குத் தொண்டு செய்யத் திருவுளங் கொண்டார். திருவரங்கம் சென்று திருநந்தவனம் அமைத்தார்; பலவகை மரம், செடி, கொடிகளை வைத்து வளர்த்தார்; நாள்தோறும் திருமாலை கட்டி எம்பெருமானுக்குச் சேர்த்து வந்தார்.

திருக்கரம்பனூரில் தேவதேவி என்று ஒரு பொது மாது இருந்தாள். உறையூரிலிருந்து அரசாண்ட சோழ மன்னன் அவைக்களம் சென்று தன் ஆடல் பாடல்களால் அவனை மகிழ்வித்தனள், தன்னூருக்குத் தன் உடன்பிறந்தாளுடன் மீளும் வழியில் விப்பிரநாராயணரின் திருநந்தவனத்தின் இயற்கை யெழிலைக் கண்டு அங்குச் சற்று இளைப்பாறினர். அங்கு வந்த விப்பிரநாராயணரின் பேரழகில் ஈடுபட்டுத் தேவதேவி மனதைப் பறிகொடுத்தனள். அவரோ இவளைக் கண்ணெடுத்தும் பாராமல் தம் தொண்டில் கருத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். தேவதேவியின் நிலை கண்ட தமக்கை அடியவரின் பெருமையைப் பலவாறு எடுத்துக் கூறினள். தேவதேவி, அவரைத் தனது வசப்படுத்தாவிடில் அக்காளுக்கு வெள்ளாட்டியாய் ஆறு மாதம் வேலை செய்வதாகச் சபதம் செய்தாள். தமக்கையும், தேவதேவி அவரை வயப்படுத்தினால் தானும் தங்கைக்கு ஆறுமாதம் பணிப் பெண்ணாக இருப்பதாக உறுதிமொழி கூறி, அவ்விடத்தைவிட்டுத் தன் ஊர் சென்றாள்.

தேவதேவி சாதாரண உடையுடன் சென்று விப்பிரநாராயணரைத் தன்னை ஆட்கொண்டு பணி கொள்ளுமாறு வேண்டினாள். அவரும் அதற்கிசைந்தார். அதுமுதல் அவள் அவருக்கு உதவியாக நீர்பாய்ச்சல், பாத்தியமைத்தல், மடை மாற்றல், களை பறித்தல் முதலிய தொண்டுகளைச் செவ்வனே செய்து வந்தாள். பணிபுரிதலில் அவளுக்கிருந்த ஆர்வத்தைக்கண்ட ஆழ்வாரும் எம்பெருமானுக்கு ஆராதிக்கும் அடிசிலில் ஒரு பகுதி அவளுக்குக் கொடுத்து மறுபகுதியைத் தாம் உண்டு வருவாராயினர்.

ஒருநாள் பெருமழை பெய்தது. விப்பிரநாராயணர் தம் பர்ணசாலைக்குள்

சென்றார். தேவதேவி அதன் ஓரத்தில் நனைந்துகொண்டு நின்றாள். ஆழ்வார் அவளை உள்ளே வரச்சொல்லித் தமது ஆடையொன்றை அளித்து அவளது ஈர ஆடையை அகற்றிக் கொள்ளச் செய்தார். அவள் அவருடைய திருவடிகளைப் பிடிக்க வேண்டுமென்று விண்ணப்பிக்க அவரும் ஒப்பினர். அவ்வளவில் அவர் இன்பத்துறையில்எளியரானார். அறத்தை மறந்து, திருப்பணியைக்கைவிட்டு அவள் பின்னால் அவள் இல்லம் சென்றார். அவள் மையலில் மயங்கிக் கைப்பொருள் எல்லாவற்றையும் இழந்தார். ஆதலின் அவள் வீட்டுத் திண்ணையே இடமாகக் கிடைத்தது. திருமகள் அவர் நிலைமைக்குக் கழி பேரிரக்கம் கொண்டு, திருவரங்கநாதனை அவர் பால்கருணை பாலிக்கத் திருவுள்ளங் கொள்ள வேண்டினள். திருவரங்கச் செல்வனார் கோயிலில் ஆராதனைக்குரிய பொன் வட்டிகளில் ஒன்றை இரவில் எடுத்துச் சென்று, தேவதேவியின் வீட்டுக் கதவைத் திறக்கச் செய்து, தாம் விப்பிரநாராயணரின் தூதனென்றும் அவர் கொடுத்துவிட்டு வரச் சொன்னதாகச் சொல்லிக் கொடுத்தார். அவளும் அதை மகிழ்ந்து பெற்றுக் கொண்டாள். எம்பெருமான், உறங்கிக்கொண்டிருந்த விப்பிரநாராயணரை எழுப்பித் தேவதேவி வரச் சொன்னதாகச் சொல்லிப் போய்விட்டனர். துயிலெழுந்த ஆழ்வார் உட்செல்ல தேவதேவி வரவேற்று அன்புடன் உபசரித்தாள்.

பொழுது புலர்ந்தது; திருக்கோயில் கதவு திறக்கப்பட்டது; பொன்வட்டில் ஒன்று காணப்படவில்லை; இச் செய்தி அரசனுக் கறிவிக்கப்பட்டது. அரசனும் அர்ச்சகர், பரிசாரகர் முதலியவர்களை அழைத்து விசாரிக்கச் செய்வதுடன் எங்கும் தேடும்படி ஆணையிட்டான். தேவதேவி வீட்டின் பணிப் பெண் ஒருத்தி மூலம் பொன் வட்டில் இருக்கும் செய்தி அரசனுக்கு எட்டியது. ஏவலர் மூலம் அதை எடுத்துவரச் செய்து, தேவதேவியை யழைத்து அரசன் விசாரித்தான். விப்பிரநாராயணரின் தூதன் அவர் கொடுக்கச் சொல்லிப் பெற்றுக் கொண்டதாகச் சொன்னாள். அரசன் அவரை யழைத்துக் காவலில் வைத்தான். அன்றிரவு எம்பெருமான், அரசன் கனவில் தோன்றித் தாமே அவ்வாறு செய்ததாகவும், விப்பிரநாராயணர் குற்றமற்றவர் என்றும் தெரிவித்தருளினன். மறுநாள் காலை அரசன் அமைச்சர்களுடன் வந்து விப்பிரநாராயணரின் திருவடிகளை வணங்கி, அவருடைய மேன்மையறியாது செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டினன். தம்மை ஆட்கொள்ள இறைவனின் திருவருட் செயல் அது என்பதை விளக்கி, முன்புபோல் திருமாலைத் தொண்டு செய்யச் சென்றனர். தொண்டரடிப்பொடி என்ற திருநாமம் பூண்டு, மற்ற ஆழ்வார்களைப் போல் பல திவ்விய தேசங்களுக்குச் செல்லாமல் திருவரங்கச் செல்வனையே சேவித்து வந்தனர். "மாதரார் கயற்கணென்னும் வலையுட்பட்டு அழுந்து வேனைப் போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருக வைத்த" அழகனை வணங்கித் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்ற இரண்டு திவ்வியப் பிரபந்தங்களையும் இயற்றி, உலகத்தை வாழ்வித்தருளினார்.

தொண்டரடிப் பொடியாழ்வார், கலி 289 (கி. மு. 2814) பிரபவ ஆண்டு, மார்கழித்திங்கள், கிருஷ்ண பட்சம் சதுர்த்தசி, செவ்வாய்க்கிழமை, கேட்டை நட்சத்திரத்தில் திருவவதாரம் செய்ததாக மூவாயிரப்படி குரு பரம்பரையில் கூறப்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டுக்குட்பட்ட ஐந்நூறு ஆண்டுகள் என்று ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர். அவர்களே தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் இவர்கள் மூவரும் ஒரு காலத்தவர் என்றும் சொல்லியிருக்கின்றனர். திருமங்கையாழ்வார் வைபவத்தைச் சொல்லுமிடத்து, பின்பழகிய ஜீயர் "திருமங்கை மன்னன் உபக்கிரமித்துத் திருமதிள் கட்டுவிக்கிற செவ்வையிலே ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் பெரிய பெருமாளுக்குத் திருமாலை சேர்க்கிற இடம் நேர்பட அவ்விடத்தைத் தப்பி

ஓதுங்கத் திருமதிள் கட்டுவித்தருள, தொண்டரடிப்பொடியாழ்வார் பார்த்தருளி" என்று எழுதியிருப்பது திருமங்கை மன்னனும் தொண்டரடிப்பொடியாழ்வாரும் சம காலத்தவர் என்பதைக் காட்டும் என்பர் அறிஞர்.

தொண்டரடிப் பொடியாழ்வார், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்ற இரண்டு திவ்வியப் பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார்; திருமாலையில் 45 பாசுரங்களும், திருப்பள்ளி யெழுச்சியில் பத்துப் பாடல்களும் உள்ளன; அவை மிகவும் பக்திச் சுவை விளைப்பன; விழுமிய பொருள்களைத் தன்னகத்தே கொண்டன. எடுத்துக் காட்டாக இரண்டு பாடல்கள் :—

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்
கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம்
கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போ
யிந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டே
னரங்கமா நகருளானே.

வேதநூல் பிராயம் நூறும்
மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

இப்பாடல்களை அறியாதார் இல்லை யென்றே சொல்லலாம். இன்னும், இயற்கை யழகை எடுத்துக்கூறும் பாடல் ஒன்று கீழ்க்காணலாம்:—

வண்டினை முரலும் சோலை
மயிலின மாலும் சோலை
கொண்டல்மீ தணவும் சோலை
குயிலினம் கூவும் சோலை
அண்டர்கோ னமரும் சோலை
அணிதிரு வரங்க மென்னு
மிண்டர் பாய்ந் துண்ணும்
சோற்றை விலக்கி நாய்க் கிடுமினீரே.

கடலுக்கு அணைகட்டி இலங்கை சென்று இராவணனை யழித்த இராமாவதாரச் சிறப்பும், மூவுலகம் ஈரடியால் அளந்த பெருமையும், கோவர்த்தனகிரியைக் குடையாய்ப் பிடித்து பசுக்கூட்டங்களைக் காத்தபான்மையும், அழகுபடக் கூறியுள்ளார். 'ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை", 'மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோர் இன்சொலில்லை', 'விரும்பி நின்றேத்த மாட்டேன் விதியிலேன் மதியொன்றில்லை', 'மாசற்றார் மனத்துளானை வணங்கி நாமிருப்பதல்லால், பேசத்தானுவதுண்டோ பேதை நெஞ்சே நீ சொல்லாய்' என்பன போன்றவை இன்பந்தரும் அறவுரைகள்.

கதிரவன் குணதிசைச்
சிகரம்வந்து அணைந்தான்
கனஇருள் அகன்றது
காலைஅம் பொழுதாய்
மதுவிரிந்து ஒழுகின
மாமலர் எல்லாம்
வானவர் அரசர்கள்
வந்துவந்து ஈண்டி
எதிர்திசை நிறைந்தனர்
இவரொடும் புகுந்த
இரும்களிற்று ஈட்டமும்
பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல்
போன்றுளது எங்கும்
அரங்கத்தம் மாபள்ளி
எழுந்தரு ளாயே.

என்பது திருப்பள்ளி யெழுச்சியில் ஒரு அழகிய திருப்பாசுரம். திருக்கோயில்களில் திவ்வியப் பிரபந்தங்கள் பாடுவதற்காக இறையிலியாக நிலங்கள் விடப்பட்ட செய்திகள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டில் திருவாய்மொழி, திருப்பள்ளியெழுச்சி விண்ணப்பம் செய்ததைக் குறிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு கல்வெட்டில் ஒரு சோழ அரசாங்க அதிகாரியின் பெயர் தொண்டரடிப் பொடி என்று கூறியிருப்பதிலிருந்து இவ்

சம்பந்தசரணாலயர்

தமிழ்நாட்டில் விளங்கும் சைவப்பெருமடங்களில் தருமபுரத் திருமடம் ஒன்று. அவ்வாதீனத்தின்கண் ஆறாவது குருமூர்த்திகளாய் திருஞானசம்பந்ததேசிகர் என்பார் எழுந்தருளியிருந்தார். அக்காலத்தே அடியார் குழாத்துள் ஒருவராக சம்பந்தசரணாலயர் என்பவர் இருந்தார்; கல்வி அறிவு ஒழுக்கங்களால் மேம்பட்டவர்; குருலிங்க சங்கம பத்தியிற் சிறந்தவர். அப்போது மைசூரை கர்த்தர் என்பவர் அரசாண்டு வந்தனர்; கன்னடம், தெலுங்கு, தமிழ் மொழிகளில் வல்லுநர்; முருகப் பெருமானிடம் பேரன்பு பூண்டவர். தமக்கு அறிவு நூல்களில் உள்ள சில ஐயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவா உண்டாயிற்று. பல பக்கங்களிலுள்ள அரசர்களுக்கும், மடாதிபதிகளுக்கும் வித்துவான்களை அனுப்பிவைக்குமாறு திருமுகங்கள் விடுத்தார்.

பல வித்துவான்கள் மைசூரையடைந்தனர். தருமபுரமடத்திலிருந்து சம்பந்தசரணாலயரும் சென்றார். அரசவையினுள்ளே நுழைந்தனர். அப்போது இவரது கருமை பூத்த திருமேனியைக் கண்ட அரசர், 'இவர் ஒரு அண்டங்காக்கையோ' என்று பக்கத்திலுள்ளாரிடம் சொன்னார். அதைக் கேட்டுக்கொண்டு சென்ற அடிகளார் 'அது நானல்ல' என்று பதில் சொன்னார். அரசர் சினங்கொண்டார். சம்பந்தசரணாலயர் 'அண்டத்தைக் காப்பது அரசராகிய நீரேயாதலால் அண்டங்காக்கை நான் அன்று என்றேன்' என்று விளக்கம் கூறினார். அரசரும் அடிகளாரின் கூர்த்த மதிக்கு அகமகிழ்ந்து அருகிருத்தித் தம்முடைய ஐய வினாக்களை எழுப்பினர். மற்றப் புலவர்களினும் தருமையடிகள் சொன்ன விடைகளே சிறந்தனவாக அரசருக்குத் தோன்றின. ஆதலின் அடிகளாரைத் தவிர்த்து மற்றையோருக்கு தகுதிக்கேற்பப்பொருள் அளித்து அனுப்பினார்; அடிகளாரைச் சிலகாலம் தங்கியிருக்கும்படி வேண்டினர்.

அரசர் அனுப்பிய உணவுப்பொருள்களைத் தாம் கொள்ளாது, தனக்கு வேண்டிய அளவு மாத்திரம் இல்லங்களில் சென்று அடிகளார் உணவு பெற்றுவருவராயினர்; அதையறிந்த அரசர், அவர் ஐயமேற்கும் வீடுகளுக்கெல்லாம் உணவுப்பொருள்களை யனுப்பி அவருக்குத் திருவமுது செய்வித்தனர்.

ஒருநாள் அரசர் அடிகளாரிடம் கச்சியப்ப சிவாசாரியர் அருளிய கந்தபுராணம் என்னும் நூல் கடல்போல் பரந்துகிடப்பதாகவும், அதை யாவரும் எளிதில் உணரும்படி சுருக்கித்தரவேண்டுமென்றும் விண்ணப்பித்தனர். அதற்கிணங்க, சம்பந்தசரணாலயரும் ஒரு நன்னாளில் தொடங்கி கந்தபுராணச்சுருக்கம் என்ற நூலை இயற்றி முடித்தனர். அரசர் முதலியோருடன் திருச்செந்தூரையடைந்து முருகக்கடவுளின் திருமுன் அரங்கேற்றம் செய்தார். மன்னர் பெருமகிழ்ச்சியடைந்து ஒரு பொன் தட்டிலே நவமணிகளையும் வைத்து அடிகளாருக்குப் பரிசாகக் கொடுத்தார். புலவர் திலகம் அதை வாங்கி "இது குருவுக்குப் பிரீதியாகுக" என அப்பால் வைத்தார். அரசர் மற்றும் ஒருமுறை அப்படியே செய்ய, அதையேற்று "இது சிவனுக்குப் பிரீதியாகுக" என்று மற்றொரு புறம் வைத்தார். மீண்டும் ஒரு தடவை அரசர் அவ்வாறே அளிக்க, சம்பந்தசரணாலயர் அதைப்பெற்று "இது அடியார்களுக்குப்

வாழ்வாரின் பெருமை நன்கு விளங்குகின்றது.

மண்டங்கு டியதனை
வாழ்வித்தோன் வாழியே
மார்கழியில் கேட்டைதனில்
வந்துதித்தான் வாழியே
தெண்டிரைசூழ் அரங்கரையே
தெய்வமென்றான் வாழியே
திருமாலை ஒன்பதிற்றைந்தும்
செப்பினான் வாழியே

பண்டுதிருப் பள்ளியெழுச்சிப்
பத்துரைத்தான் வாழியே
பாவையர்கள் கலவிதனைப்
பழித்தசெல்வன் வாழியே
தொண்டுசெய்து துளவத்தால்
துலங்கினான் வாழியே
தொண்டரடிப் பொடியெம்மான்
துணைப்பதங்கள் வாழியே.

பிரீதியாகுக'' என்று வேறொரு புறத்தில் வைத்தார். மும்முறையும் தாம் அளித்த பரிசிலை அடிகளார் ஏற்றுக்கொள்ளாமையை நோக்கி மனம் கவன்றார். அங்கிருந்தோர் சுவாமிகள் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்பதை எடுத்துக்கூற அரசரும் மனம் தேறினர். அவரை எப்படியாவது பெருமைப்படுத்தவேண்டி அவரை நகர்வலம் செய்துவித்துக் காண விரும்புவதாகச் சொன்னார். தருமபுரத்திலுள்ள தம் குருமூர்த்திகளின் ஒப்புதலின்றித் தாம் அவ்வாறு செய்துகொள்ள இணங்கவில்லை. அரசர் தம் கருத்தை திருஞானசம்பந்ததேசிகருக்குத் தெரிவித்து அவர் அனுமதிபெற்று சுவாமிகளை நகர்வலம் செய்வித்தார்.

ஒருநாள் அரசர் அடிகளாருடன் அளவளாவிக்கொண்டிருந்தபோது, தருமபுரத்தில் இருக்கும் அடியவர்கள் நாள்தோறும் செய்யும் வேலை என்ன என்று கேட்டார். கேட்டவுடனே சுவாமிகள்,

ஆய்வார் பதிபசு பாசத்தி
　　னுண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்
　　லாங்கல்வி கேள்வியல்ல
லோய்வார் சிவானந்த வாரியுள்
　　ளேயொன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர
　　காசன்மெய்த் தொண்டர்களே

என்னும் பாடலைத் திருவாய்மலர்ந்தருளினர். அடியார்கள் திறத்தையும், குருமூர்த்திகளின் மகிமையையும் அறிந்த மைசூர் மன்னர் குருலிங்க சங்கமங்களுக்கென வாங்கிவைத்த நவரத்தினங்களையெல்லாம் தருமபுரத்திற்கே அனுப்பிவைத்தார். ஆண்டு தோறும் உயர்ந்த கபிலைப்பசுக்களையும் அனுப்பும் வழக்கத்தை ஏற்பாடு செய்தார். அது வெகு காலம் நடந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. சம்பந்தசரணுலயர் பல தலங்களை வழிபட்டுத் தருமபுரம் சென்று, சில காலத்தின் பின் சிவனடி நீழல் எய்தினர்.

அடிகளார் கந்தபுராணச் சுருக்கத்தில்,

தன்க்கிணை தானேயான சம்பந்தன்
　　கமலை வேந்தன்
கனக்கவே யென்பாலன்பாற்
　　கருணைவைத் திடுதலாலே
உனற்கரும் காந்தம்தன்னை
　　உரைத்தனன் சுருக்கிஅல்லால்
எனக்குமிக் கதைக்குநாடி
　　லெத்தனை தூரமாமால்

என்று அவையடக்கமாகக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. கந்தபுராணச் சுருக்கம் எழுதியதற்குக் காரணம் முன்னற் கூறப்பட்டது. கச்சியப்ப சிவாசாரியர் இயற்றிய கந்தபுராணத்தில் மொத்தம் செய்யுட்கள் 10,345. அடிகளார் அருளிய சுருக்க நூலின் மொத்த செய்யுட்கள் 1048. பாயிரம், புராண வரலாறு, உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம் முதலிய பகுதிகளையுடையது. கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாசாரியர் பல பாடல்களில் சொன்னவற்றை ஒரு சில பாடல்களில் செய்திகளையும் விடாமல் அடிகளார் கூறியிருக்கும் அழகு கண்டு இன்புறற்பாலது. சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையைக் கையாண்டிருக்கும் அடிகளாரின் ஆற்றல் போற்றுதற்குரியதாகும். எடுத்துக்காட்டாக இரண்டு மூன்று பாடல்களைப் பார்ப்போம்.

சிவபெருமான் இமய வெற்பில் யோகத்திருக்கிறார். அதைத் தவிர்த்து அம்பிகையை மணம்புரியச் செய்வதற்காகத் தேவர்கள் மன்மதனை மலர்க்கணைகள் எய்யும்படி ஏவுகின்றனர். அவன் அஞ்சுகிறான். பின்னர் சென்று மலர்க்கணை தொடுத்து சிவபெருமான் நெற்றிக்கண் திறக்கச் சாம்பலாகின்றான். அதை,

பின்னிரதி தேற்றவெழீஇப் பொருவாளிற்பப்
　　பிரமன்முத லோர்மதன்செய் பெற்றிகாண்பான்
அன்னகிரிக் கொருபுடைபோய் மருவினர்வே
　　ளைங்கணைவிட் டானவைசென் றரன்பான்மேவ
வன்னிவிழி திறப்பமத னிறப்பத் தேவி
　　வருந்துமது தெரிந்தமரர் வருந்திநாதன்
பொன்னடிநின் றேத்துதலு மியோக நீங்கிப்
　　புந்திதனி னந்திதனைச் சிந்தை செய்தான்

என்று கூறியிருக்கிறார்.

குமரவேள் பிரமனை யழைத்துப் பிரணவப் பொருள் கேட்க அவன் அறியாது மயங்க, அவனைக் குட்டிச் சிறையிலடைத்துத் தான் படைப்புத் தொழிலைச் செய்ததைக் கீழ்க்காணும்

இரண்டு பாடல்களில் கூறியிருக்கும் பான்மை நினைவு கூரத்தக்கது:—

ஏதுபுரி வாயென்ன யான்படைப்பே
னென வருமோ
வேதமென வருமென்ன வியனிருக்கு
விளம் பென்ன
ஆதியினிற் குடிலையெடுத் தறைகுதலு
மதன் பொருளை
ஓதியபின் ஓதெனவே ஓதினன்
உமை பாலன்.

மன்னுகுடி லைப்பொருளை யறியாமல்
மயங்குதலும்
கொன்னுடைய நரசிங்கக் குட்டிதலைக்
குட்டியுதைத்
தின்னலுறக் கந்தவெற்பிற் சிறையிடு
வித் ததிலேகி
யன்னநடை யுமைபாலன் ஆவிகள்பன்
னுட் படைத்தான்.

தனக்கென ஒன்றும் வேண்டாத அடிகளார் போன்ற முற்றத்துறந்த முனிவர்களுக்கே இத்தகைய நூல்களை எழுதச்சாலும் என்பதைக் கந்தபுராணச் சுருக்கத்தைக் கூர்ந்து படிப்பவர்க்குப் புலனாகும். கந்தசஷ்டி விரதமிருப்பவர்கள் கந்தபுராணச் சுருக்கத்தை ஆறு நாட்களிலும் படித்தும், படிக்கக் கேட்டும் வரும் வழக்கம் நம் நாட்டிலிருப்பது இந்நூலின் பெருமையை விளக்கும். ஆதலின் இந்நூலை ஒவ்வொருவரும் ஓதுவது அவசியம்.

துய்யதா மறைகளாலுந் துதித்திட வரியதான
செய்யவே ளடிகள் வாழ்க சேவலு மயிலும்வாழ்க
வெய்யசூர்மார்புகீண்ட வேற்படைவாழ்கவன்னுன்
பொய்யில்சீ ரடியார்வாழ்க வாழ்கவிப் புவன
மெல்லாம்.

—சம்பந்தசரணுலயர்.

செய்திகள்

அம்பாசமுத்திரம் ஸ்ரீ காசிபநாதர் மரகதாம்பாள் கோயிலில் பங்குனித் திருவிழா 5-4-59 முதல் 15-4-59 முடிய நடைபெற்றது.

திருமருகல் ஸ்ரீ ஆமோதள நாயக சமேத ஸ்ரீ இரத்தினகிரீசுவரசாமி பிரம்மோற்சவம் 12-4-59 முதல் 25-4-59 முடிய நடைபெற்றது.

சென்னை ஸ்ரீ சென்ன மல்லீசுவரர் ஸ்ரீ சென்ன கேசவப்பெருமாள் கோயிலில் 5-4-59 அன்று ஸ்ரீ சென்னை மல்லீசுவரர் திருநடன உற்சவம் நடைபெற்றது.

திருவீழிமிழலை ஸ்ரீ சுந்தரகுசாம்பிகா சமேத ஸ்ரீ தேஜிநீவநேசுவரசாமி பிரம்மோற்சவம் 11-4-59 முதல் 24-4-59 முடிய நடைபெற்றது.

அரியக்குடி ஸ்ரீ திருவேங்கடமுடையான் கோயில் பிரம்மோற்சவம் 14-5-59 முதல் 26-5-59 முடிய சிறப்பாக நடைபெறும்.

பரமக்குடி ஸ்ரீ விசாலாட்சியம்பிகா சமேத ஸ்ரீ சந்திரசேகரசாமி பிரம்மோற்சவம் 11-4-59 முதல் 23-4-59 முடிய நடைபெற்றது.

கும்பகோணம் ஸ்ரீ மங்களாம்பிகா சமேத ஸ்ரீ ஆதிகும்பேசுவரசாமி சப்தஸ்தான உற்சவம் 23-4-59, 24-4-59 தேதிகளில் நடைபெற்றது.

மதுராந்தகம் ஸ்ரீ கோதண்டராமசாமி ஸ்ரீ ராம நவமி உற்சவம் 9-4-59 முதல் பத்து நாட்கள் நடைபெற்றது.

வேலைமாநகர் சைதாப்பேட்டை, ஸ்ரீ சித்தி புத்தி சமேத சுந்திர விநாயகர் கோயிலில் 30 ஆண்டுகளாக நடைபெறுமலிருந்த பிரம்மோற்சவம் 15-3-59 முதல் 24-3-59 முடிய மிகச் சிறப்பாக நடைப்பெற்றது.

சென்னை, முத்தியாலுபேட்டை ஸ்ரீ சௌந்தராம்பிகை சமேத ஸ்ரீ கச்சபேசுரசாமியின் பிரம்மோற்சவம் 12-4-59 முதல் 23-4-59 முடிய நடைபெற்றது.

செட்டிகுளம் ஸ்ரீ வள்ளி தேய்வயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணியசாமி, ஸ்ரீ பாலதண்டாயுதபாணிசாமி கோயிலில் பங்குனி உத்திர உற்சவம் 15-3-59 முதல் 28-3-59 முடிய நடை பெற்றது.

திருக்கழுக்குன்றம் ஸ்ரீ திரிபுரசுந்தரியம்மை இடங்கொண்ட ஸ்ரீ வேதகிரிசுவரரின் பிரம்மோற்சவம் 12-4-59 முதல் 23-4-59 முடிய நடைபெற்றது.

திருப்போரூர்

சீரு லாவிய வோதிம
　　மான மாநடை மாமயில்
　　சேய சாயல்க லாமதி　　முகமானார்

தேனு லாவிய மாமொழி
　　மேரு நேரிள மாமுலை
　　சேலு லாவிய கூர்விழி　　குமிழ்நாசி

தாரு லாவிய நீள்குழல்
　　வேய ளாவிய தோளியர்
　　சார்பி லேதிரி வேனை நின்　　னருளாலே

சாம வேதியர் வானவ
　　ரோதி நாண்மலர் தூவிய
　　தாளில் வீழவி னுமிக　　அருள்வாயே

காரு லாவிய நீள்புன
　　வேடர் மால்வரை மீதுறை
　　காவல்மாதினொடாவல்செய் தணைவோனே

காரண வாகம் வேதபு
　　ராண நூல்பல வோதிய
　　கார ணுகரு ணுகர　　முருகோனே

போரு லாவிய சூரனை
　　வாரி சேறெழ வேல்விடு
　　பூப சேவக மாமயின்　　மிசையோனே

போதன் மாதவன் மாதுமை
　　பாதி யாதியு மேதொழு
　　போரி மாநகர் மேவிய　　பெருமாளே

—*அருணகிரிநாதர்.*

சோமகிரணப் பெருங்கருணை
　　சுரந்தமுகங்க ளோராறுஞ்
சுருதிவழுத்தும் பன்னிரண்டு
　　தோளுநீபத் தொடைமார்புங்
காமர்நிறச்செம் பட்டாடைக்
　　காட்சிமருங்குஞ் சிறுசதங்கை
கலித்தவுபயத் திருத்தாளுங்
　　கடையேன்றுதிக்கப் பணிப்பாயே
சேமநிதியே சுரர்பதியே
　　தெய்வத்தருவே மலர்மருவே
செறிபூரணமே யாரணமே
　　சிறியேனுயிருக் கோருயிரே
பூமனறியாப் பிரணவத்தின்
　　பொருளைப் பகரும் பூங்கிளியே
போற்றுமடியார்க் கோரருளே
　　போரூர்முருகப் பெருமாளே.

—*சிதம்பர சுவாமிகள்.*

நீர்க்கு ளேதிரி வாளை பாய்விரி
　　தாழை நீள்கமு கோதி சூழ்வளம்
ஆர்க்கும் வேதகிரி யர னூர்தி ருச்சேயே
　　பார்க்கு ளேதிரி யேழை யேன்வினை
　　பாற வேயருள் பாடு வார்துயர்
　　தீர்க்கு நாயகனே திருப் போரூ ரம்மானே.

—*பாம்பன்-குமரகுருதாச சுவாமிகள்.*

தொண்டை நாட்டில் தேவாரப்பாடல் பெற்ற 32 சிவத்தலங்களும், மங்களசாசனம் பெற்ற 22 திவ்விய தேசங்களும், முருகப்பெருமான் திருப்பதிகள் 33-ம் இருக்கின்றன. குமரக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியவற்றில் சிறந்த ஒன்று திருப்போரூர். செங்கல்பட்டு இரயில் நிலையத்திலிருந்து வடகிழக்கே 16 கல் தொலைவிலுள்ளது; சென்னையிலிருந்து மோட்டார் மூலம் 36 கல் தூரம்; திருவான்மியூருக்கு அடுத்த பார்ப்பான்சாவடியிலிருந்து படகு வழியே சென்றால் 18 கல் தொலைவு.

திருப்போரூருக்கு, திருப்போரியூர், யுத்தபுரி, சமரபுரி, செருவூர், போரிநகர், சமதளவூர்

என்ற வேறு பெயர்களும் உண்டு. போரியூர் என்பது கல் வெட்டுக்களிலும், போரி நகர் என்பது திருப்புகழிலும், திருப்போரூர், சரம புரி என்பன திருப்புகழ், திருப்போரூர்ச் சந் நிதி முறை முதலிய நூல்களிலும் ஆளப்பட் டிருக்கின்றன. இறைவன் திருநாமம் கந்த சுவாமி என்பது.

திருப்போரூர் மிகப் பழைய பதி என்பது கோயிலிலுள்ள கல் வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. தெய்வயானை யம்மையின் சந் நிதி முன் மண்டபத்திலுள்ள இரண்டு தூண் களில் பல்லவ மன்னனான இராஜசிம்மன் அல் லது இரண்டாம் நரசிம்மவர்மனின் மெய்க் கீர்த்தி கிரந்தத்தில் பொறிக்கப்பட்டிருக் கிறது. இவ்வரசன் கி. பி. ஏழாம் நூற்றாண் டிலிருந்தவன். இன்னும் பன்னிரண்டு, பதின் மூன்றாம் நூற்றாண்டுக் கல் வெட்டுக்களும் இக்கோயிலில் காணப்படுகின்றன. அவை கோப்பரகேசரிவர்மன், விக்கிரமசோழன், விஜயகண்ட கோபாலன் என்ற மன்னர்களின் காலத்தவை; நிலம், பொன், பசுக்கள் முதலிய வற்றைத் தானமாக அளித்த விவரங்களைக் குறிக்கின்றன. ஜயங்கொண்ட சோழ மண்ட லத்து ஆமூர்க் கோட்டத்துக்குமிழா நாட்டி லுள்ள திருப்போரூர் என்று கல் வெட்டுக் களிலிருந்து தெரிகிறது.

பல்லவ, சோழ மன்னர்கள் காலத்தில் பெருமை பெற்றிருந்த இந்த திருக்கோயில் பின்னர் அழிந்து போய்விட்டது. பின்னர், பதினேழாம் நூற்றாண்டின் நடுவில் திருப்போ ரூரை வந்தடைந்த சிதம்பர சுவாமிகளால் திருப்பணி செய்யப்பட்டது. அவர் பரம்பரை யில் வந்த மடத்துத் தலைவர்கள் மேலும் பல திருப்பணிகள் செய்து இப்போதைய நிலைக்கு வந்தது. ஆதி சிதம்பர சுவாமிகளால் இத் தலத்தின் பெருமை நாட்டில் பரவி விளங்கிற் றென்று கூறலாம்.

திருக்கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி யுடையது. கர்ப்பக்கிரகத்தில் புற்றுமூர்த்தி யாக கந்தசுவாமி வள்ளி தெய்வானையுடன் விளங்குகிறார். இம்மூர்த்திகளுக்கு அபிஷே கம் இல்லை; புனுகு சட்டம், கவசம், ஆபர ணங்கள் மாத்திரமே சாத்தப்படுகின்றன. அங்கேயே ஒரு பீடத்தில் கந்தப்பெருமான், இரு தேவியார் இவர்களின் சிலை உருவங் களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிதம்பர சுவாமிகளால் அபிஷேகாதிகளுக் காக அமைக்கப்பட்டன என்று கூறுகின்ற னர். இந்த மூலமூர்த்தியின் திருக்கரங்களில் ஜபமாலையும், கமண்டலமும் காணப்படுவது, பிரமனைக் குட்டிச் சிறையிலடைத்து முருகப் பெருமான் படைப்புத் தொழிலைச் செய்யும் போது கொண்ட திருக்கோலம் என்பர்.

உட்பிரகாரத்தை விட்டு வெளிவந்தால் தெய்வயானையம்மையாரின் திருக்கோயில் இருக்கின்றது; தெற்கு நோக்கிய சந்நிதி. இங் கிருந்து தெற்கேயுள்ள பெருவாயில் வழியா கச் சென்றால் வள்ளியம்மையார், உற்சவ மூர்த்தி இவர்களின் சந்நிதிகளையடையலாம். பெரிய பிரகாரத்துள் வலம் வந்தால் வடக்கில் சிதம்பர சுவாமிகள் ஆலயம் இருக்கிறது. இன்னும் வான்மீகேசுரர், புண்யகாரினி அம் மையார், விசுவநாதர், விசாலாட்சியம்மையார் இவர்களுடைய சந்நிதிகளும் இருக்கின்றன. வன்னிமரமும் தீர்த்தக் கிணறும் உள்ளன. இருபத்து நான்கு கால்களுடைய பெரிய மண் டபம் ஒன்றில் தூண்களில் நவவீரர்கள் முதலி யோர் உருவங்கள் காணப்படும். இவை திருப்போரூர் என்ற பெயர் குறிப்பதற்கு அமைத்தவை போலும்.

இத்தலத்தில் மூன்று தீர்த்தங்கள் இருக்கின்றன. கோயிலுக்குத் தெற்கில் வள் ளையாரோடையென்றும், சரவணப் பொய்கை யென்றும் சொல்லப்படும் திருக்குளம் இருக் கின்றது. மலையின்மேல் பிரணவாமிர்தம் என்ற தீர்த்தமும், கண்ணுவப் பேட்டையில் சிதம் பர சுவாமிகள் மடத்திற்கு வடகிழக்கே வேலா யுத தீர்த்தமும் இருக்கின்றன.

மாசி மாதத்தில் நடைபெறுவதே இப் பதியில் சிறந்த திருவிழா. வைகாசி விசாக நட்சத்திரத்திலும் பெரிய அபிஷேகம் நடை பெறும். புரட்டாசியில் நவராத்திரியும், ஐப் பசியில் கந்த சஷ்டியும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாத கார்த்திகையிலும் ஆயிரக் கணக்கான மக்கள் வந்து வழிபடுகின்றனர்.

இக்கோயிலில் இரண்டு யந்திரங்களிருக் கின்றன. ஒன்று கர்ப்பக் கிரகத்தின் வட கிழக்கில் அறுமுகனார் வள்ளி தெய்வயானை யுடன் எழுந்தருளியுள்ள இடத்தில் இருக் கிறது. சிதம்பரசுவாமிகளால் அமைக்கப்பட் டது. இதற்கு கந்தசஷ்டி ஆறு நாட்களிலும்

சிறந்த அபிஷேகமும் பூஜையும் நடைபெறு கின்றன. மற்றொரு யந்திரம் கர்ப்பக் கிரகத்தி லிருக்கிறது. அதற்கு நாள்தோறும் பூஜை செய்யப்படுகின்றது.

சிதம்பரசுவாமிகள் சிதைந்து கிடந்த இக்கோயிலைத் திருப்பணி செய்ததைப்பற்றிய வரலாறு அறிந்துகொள்ள வேண்டியது. மதுரையில் சங்கப் புலவர் மரபில் வந்தவர் சிதம்பர கவிராயர். திருமுதுகுன்றத்துக்கருகி லுள்ள ஓரூர் செல்வர் தம் மக்களுக்குக் கல்வி புகட்ட சிதம்பர கவிராயரை அமர்த்தினர். அவிநாசியிலிருந்த சாந்தலிங்க அடிகளாரின் மாணவரான குமாரதேவர், சிதம்பர கவிராய ரின் கல்வி அறிவு ஒழுக்கங்களைக் கண்டு தம் குருவிடம் அழைத்துச் சென்றார். அவர், குமாரதேவரே கவிராயரை ஆட்கொள்ள வேண்டுமென்று பணித்தார். அவ்வண்ணமே கவிராயருக்கு குமாரதேவர் உபதேசம் முதலி யன செய்தார். அதுமுதல் சிதம்பரசுவாமி கள் என்றழைக்கப்பட்டார். ஒருநாள் மயில் தோகை விரித்தாடுவதாக தியானத்தில் கண்ட சிதம்பரசுவாமிகள் தம்முடைய குருவை அதைப்பற்றி வினவினர். திருப்போ ரூரில் மறைந்து கிடக்கும் முருகனாலயத்தைச் சென்று செப்பனிட வேண்டுமென்று குமார தேவர் சிதம்பரசுவாமிகளிடம் சொன்னார். (இப்படிக் கூறியது சுவாமிகளின் வழிபடு கடவுளாகிய மீனாட்சியம்மையே உணர்த்திய தாகவும் ஒரு வரலாறு சொல்லப்படுகிறது).

சிதம்பரசுவாமிகள் திருப்போரூர் வந் தார்கள். வேம்படி விநாயகர் கோயிலின் பக்க லில் சிலநாட்கள் தங்கி யிருந்து, தேடி, முரு கன் திருவருளால் மூலமூர்த்தியின் திருவுரு வம் பனையடியின் கீழ் இருப்பதைக் கண்டார் கள்; கோயில் திருப்பணியைத் தொடங்க எண்ணினார்கள். பல அற்புதங்கள் நிகழ்த்தி யும், நோய் நீக்கம் செய்தும் மக்களை வயப் படுத்தினார்கள். செல்வர்கள் தாமே பொருள் களைக் கொண்டுவந்து சேர்ப்பித்தார்கள். திருப்பணியும் நடைபெற்று முடிந்தது. திருப் போரூரின் ஒரு பகுதியான கண்ணுவப்பேட் டையில் தமக்கு மடம், ஒடுக்கவறை முதலி யன அமைத்துக்கொண்டு, கந்தசுவாமி ஆல யத்தில் பூசை நைமித்திகங்கள் நன்முறையில் நடைபெற ஏற்பாடுகள் செய்தார்கள்:

அருணகிரிநாதர் • இத்தலத்தைப்பற்றி ஆறு திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார். ஒன்றில் "திருத்தேர் சூழ் மதிளேரார் தூபிக ளடுக்கார் மாளிகையே நீளேருள திருப்போரு ருறை தேவாதேவர்கள் பெருமாளே" என்று கூறியுள்ளார். மற்றொன்றில் "போதன் மாத வன் மாதுமை பாதியாதியுமேதொழு போரிமா நகர் மேவியபெருமாளே" என்று பாடுகிறார். இன்னுமொரு பாடலில் "சகல லோகமு மாசறு சகல வேதமுமேதொழு சமராமாபுரி பெருமாளே" என்று சொல்கிறார்.

சிதம்பர சுவாமிகள் அருளிய திருப்போ ரூர்ச் சந்நிதி முறையென்ற நூல் பக்திச்சுவை நனி சொட்டுவது; பாட்டுக்களைப் பாடுவோ ரைப் பரவசம் படுத்தும் பான்மையவை.

புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் திருப்போரூர்ப் புராணம், கலம்பகம், அலங் கார பஞ்சகம், யமகவந்தாதி, பதிற்றுப்பத்தந் தாதி, பிரணவாசல வெண்பாமாலை, திரிபந் தாதி, நான்மணிமாலை, இரு சொல்யமகமாலை, சதகம், பிரணவர்சலசதகம், வெண்பாமாலை, சிதம்பரசுவாமிகள் வரலாற்று உரைநடை யுடன் கூடிய பதிற்றுப்பத்தந்தாதி, புராண சரித்திர வசன காவியம், குறவஞ்சி, புராண கீர்த்தனை முதலியவைகளைப் பாடி யுள்ளனர்.

கந்தப்பெருமான் கோயிலுக்குப் பின் புறம் ஒரு மலை யிருக்கிறது. அதற்குப் பிர ணவ மலை என்று பெயர். அக்குன்றின் மேல் கைலாசநாதர் பாலாம்பிகையுடன் எழுந்தருளி யுள்ளனர். அதன் சாரலில்தான் வேம்படி விநாயகர் வீற்றிருக்கின்றார். இங்குதான் சிதம்பரசுவாமிகள் முதலில் வந்து தங்கி னார்கள்.

உலகளித்தாய் உடலளித்தாய்
உயர்பிறவி யுள்ளம்
உவந்தளித்தாய் அப்பிறவி
உறுபயனைக் காண
அலைகின்றேன் அலைவெல்லாம்
ஆண்டவனே அறிவாய்
அலைந்தொழிந்தே அகங்குழைய
அழுதுகிடக் கின்றேன்
பலகலைகள் கற்றாலும்
பன்னெறிசேர்ந் தாலும்
பற்றுநெறி கூடவில்லை
பரம நினதருளே
நிலையளிக்கும் என்றடைந்தேன்
நீயுமெனை விட்டால்
நிலைப்ப தெங்கே திருப்போரூர்
நீலமயி லரசே

—திரு. வி. கலியாணசுந்தரனார்.

— — விரதம் — —

[திருமயிலை ஜே. வெ. ஐம்புலிங்கம் பிள்ளை]

உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்
அற்றே தவத்திற் குரு [யாமை
—திருக்குறள்.

விரதமாவது ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு இன்ன தருமஞ் செய்யவேண்டிய தென்றும், இன்னபாவம் ஒழிக்க வேண்டிய தென்றும், தத்தம் சக்திக்குப் பொருந்தும்படி வரையறுத்துக் கொள்ளப்படுவதாம். விரதம், நோன்பு என்பன ஒருபொருட் சொற்கள். விரதத்தால் மனம் புத்தி முதலான உட்கருவிகள் பரிசுத்தமடையும்; அவை பரிசுத்தமாய வழி பிறவிப் பெருங்கடலை நீந்த ஏது உண்டாகும். அதனால் இறுதியில் முத்தியும் சித்திக்கும். ஆதலால், ஞானங் கைகூடுவதற்குச் சாதனம் விரதம் என்பது சொல்லாமலே யமையும்.

விரதம் இருவகைத்து

இனி விரதம், நித்தியம், நைமித்தியம் என இருவகைப்படும். நித்திய விரதங்களாவன:—அருளுடைமை, இன்னாசெய்யாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, வாய்மை, கூடாவொழுக்கமின்மை, கோபமில்லாமை, தவம் முதலியன. மேற்கூறியவற்றுள் அருளுடைமையே மிகச் சிறந்தது; இது மற்றைய விரதங்களுக்கெல்லாம் அடிப்படையாயுமுள்ளது. அருளுடைமையாவது யாதென்று ஆராயப்புகின் அது சுயநலங் கருதாமல் இயல்பாகவே எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய இரக்கத்தையும் அன்பையுமுடைமை என்பது பெறப்படும். இக்கருணையை நாம் வளர்க்கும் நிமித்தம் அதனைக் கெடுப்பது யாதென்று முதலில் ஆராயவேண்டும். ஆராய்ந்து அதனை அறவே ஒழிக்க உபாயந் தேடவேண்டுவது அவசியம். எம்மாராய்ச்சியில் புலாலுண்ணல், கூடாவொழுக்கம், கோபம் ஆகிய மூன்றுமே அருளுக்குச் சத்துரு என்று கண்டோம். இதன் உண்மை பின்வரும் வாக்கியங்களாலும் தெளியப்படும். "அருளாட்சி யாங்கில்லை ஊன்தின் பவர்க்கு", "நோன்பென்பது கொன்று தின்னாமை", "கொல்லா விரதம் குவலயமெல்லா மோங்க" "பூசையென்பது... ஆசை கோபம் அகந்தை அடக்கியே-நீச ஐம்பொறி நெஞ்சுள் நிறுத்தியே-ஈசனைத் தன் இதயத்துக் காண்டலே". ஆதலால் நாம் மேற்கூறிய பாவங்களை விலக்க முயலல் வேண்டும். அப்படிச் செய்யாவிடின் இறைவனது திருவடிகளாகிய கருணைமா கடலில் நாம் திளைப்பது யாங்ஙனம்?

உபவாச விரதம்

நைமித்திய விரதங்களாவன: உபவாச விரதங்களாம். உபவாசமாவது மனம் பெற்றி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதலாம். சில காலங்களிலே திருவருள் நுகர்ச்சி அதிகமுண்டு. இக்காலங்கள் தாம் விரத காலங்கள் என்று கொள்ளப்படுவன. நித்திய விரதம் நைமித்தியத்திற்கு இன்றியமையாதது. நைமித்தியத்தை மாத்திரம் கைக்கொண்டு நித்தியத்தைப் புறக்கணிப்பது பேதைமையாகும். சில மனுஷர்கள் உபவாச காலங்கள் மாத்திரம் மச்சமாமிசம் புசித்தலை ஒழித்து மற்றக்காலங்களில் பழையபடி உண்கின்றார்கள். தீயதென்று கண்டறிந்து தானே அவ்வுணவை உபவாச காலங்களில் விலக்குகிறார்கள். அக்காலங்களில் ஆகாதது மற்றக் காலங்களில் ஆவது எங்ஙனம்? இதைச் சிறிதேனும் சிந்திப்பாராக. நிற்க.

உபவாச விரதங்களுடன் சிவபூசை, ஆலய வழிபாடு, மகேசுரபூசை, திருவிளக்கேற்றல், சிவாலயத் தொண்டு, சிவனடியார் தொண்டு, அவ்வவ் விரதமூர்த்தியின் மூல மந்திர செபம், பஞ்சாட்சர செபம், திருவருட்பாப் பாராயணம் முதலியன செய்வது விசேஷம். "நன்று நோக்கிலென் பட்டினியாகிலென், குன்ற மேறி யிருந்தவஞ் செய்யிலென், சென்று நீரிற் குளித்துத் திரியிலென், என்று மீசன் என்பார்க்கன்றி யில்லையே" என்னுந் தேவாரம் இங்கு கவனித்துத் தக்கது. உப

வாச விரதங்கள் உபாசனுமூர்த்தத்திற் கேற்பச் சிவவிரதம், தேவிவிரதம், விநாயகவிரதம், சுப்பிரமணிய விரதம், வைரவ விரதம், வீரபத்திர விரதம் எனப் பல வகைப்படும்.

சிவவிரதமாவன :—திங்கட்கிழமை விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூலவிரதம், இடபவிரதம் என எட்டாம். பிரதோஷ விரதமும் இதில் அடங்கும்.

தேவிவிரதம் :—வெள்ளிக்கிழமை விரதம், ஐப்பசியுத்தர விரதம், நவராத்திரி விரதம் என மூன்றும்.

விநாயகவிரதம் :—வெள்ளிக்கிழமை விரதம், விநாயக சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம் என மூன்றும்.

சுப்பிரமணியவிரதம் :—வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் என மூன்றும்.

வைரவவிரதம் :—செவ்வாய்க்கிழமை விரதம், சித்திரைப் பரணிவிரதம், ஐப்பசிப் பரணி விரதம் என மூன்றும்.

வீரபத்திர விரதம் :—செவ்வாய்க்கிழமை விரதமென ஒன்றேயாம்.

அனுஷ்டிக்கும் முறை

விரதம் நோற்பவர் காமங் கோபம் முதலிய குற்றங்களைப் பற்றறக் களைதல் வேண்டும். ("காப்பது விரதம்" என்பது ஔவையார் வாக்கு). தவருது விடியுமுன் நித்திரை விட்டு எழல் வேண்டும். எழுந்து புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்த பின்பு, தியானம், செபம், பூசை, ஆலய தரிசனம் புராண படனம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும். திருக்கோயிலிலே இயன்றமட்டும் நெய்விளக்கேற்றல் வேண்டும். அபிடேக திரவியம் நைவேத்திய திரவியங்கள் கொடுத்தல் வேண்டும். போசனம் பண்ணும்போது சிவனடியார் ஒருவரோடாயினும் உடனிருந்து உண்ணல் வேண்டும். இரவிலே நித்திரை செய்யும்போது மிகப் பரிசுத்தராய்க் கடவுளைச் சிந்தித்தவண்ணம் தரையிலே படுத்துறங்கி அதிகாலையில் எழுந்து விடல் வேண்டும். உபவாச தினத்திற்கு முந்தின தினத்திலே ஒருபொழுதுதான் போசனம் செய்தல் வேண்டும். உபவாச தினத்திற்குப் பிந்தினநாட் காலையிலே மகேசுர பூசை செய்து இனத்தவர்களோடு பாரணம்பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரை செய்யாது சிவ புராணங்களைக் கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். விரத காலத்தில் உபவாசமிருப்பது உத்தமம். அது கூடாத விடத்து ஒருபொழுது போசனஞ் செய்யலாம். மற்றைப் பொழுது பாலேனும், பணிகாரமேனும் உட்கொள்ளலாம்.

விரதத்தைக் கிரமப்படி அனுசரிப்பதே தகுதி. ஏனென்ருல் தம்மளவுக்கு மீறித் தேகத்தை வருத்தப்படுத்த நேரிடின் அவர்களுக்கு விரதத்தில் வெறுப்புத் தோன்றும். இதனுல் விரதபலன் இல்லாமற் போய்விடும்.

பலன்

விரதத்தால் அடையும் பலன் காமியம், நிஷ்காமியம் என இருதிறப்படும். காமியமாவது இம்மைப் பிரயோசனங் கருதி அனுஷ்டிப்பது. அதாவது விரதம் நோற்பதால் தாம் தாம் வேண்டியவற்றைப் பெறுவது. விரதத்தால் கடன், வறுமை, நோய், பயம் முதலான நீங்கப்பெறுதல் உலகப்பிரசித்தம். "வேண்டிஞர் வேண்டியதே *யீவான் கண்டாய்" "வாயானை மனத்தானை மனத்துணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னை" என்னும் திருப்பாசுர அடிகள் "தம்மடியவர் குறைவு தீர்த்தாண்டருள்வதே விரதமாகப் பூண்டுள்ளார் சிவபிரான்" என்பதை நன்கு விளக்கும். இம்மைப் பயன்கள் அநித்தியமும் மேலும் மேலும் ஆசையை உண்டாக்குவனவுமாதலால் நிஷ்காமியமே சிறந்தது. ஆதலின், யாதொரு பயனுங் கருதாது நோற்கப்படும் விரதமே மிகச் சிறந்ததாகும்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்டவரும்"

"வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்

---

* (ஆன்ம ஈடேற்றத்துக்குத்) தேவையான பொருள்.

வேண்டி நீயா தருள்செய்தாய்
யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே"

"விரதமெலாமாண்ட மனத்தார்மனத்தான்
கண்டாய்"

"இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போது உன்னடியின்
கீழிருக்க வென்றார்"

என்னும் திருவருட்பாக்கள் இங்கு உற்று நோக்குதற்குரியன. விரதம் அனுஷ்டிப்போர் நல்லொழுக்க முடையராய் இருத்தல் வேண்டும். உலக இன்பங்களைச் சிறிது சிறிதாக விட முயற்சி செய்தல் வேண்டும். உலக ஆசை ஒழிந்த விடத்துத் தான் பிறப்பு நீங்கும். பிறப்பு நீங்கியவழியே முத்தி சித்திக்கும். "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்ப தறிவு" என்பது பொய்யாமொழி. "பிறவி வேரறுத் தென் குடி முழுதாண்ட பிஞ்ஞகா" என்னும் மணிவாசகமும் இக்கருத்தையே விளக்கா நிற்கும். ஒவ்வொருவரும் தாம் தாம் என்னென்ன தீச்செய்கைகளுக்கு உறைவிடமாக இருந்து வாழ்நாளை வீணாகக் கழிக்கிறார்களென்பதைத் தம்முள்ளே காரண காரியத்துடனே ஆராய்ந்தறிந்து அக்குற்றங்களினின்றும் விலக உபாயந் தேடவேண்டும்.

முடிவுரை

விரதத்துக்கு முக்கிய அமிசம் அருளுடைமையென்று மேலே கண்டறிந்தோமாதலால் நாம் அதை நன்றாக வளர்க்க முயற்சி செய்யவேண்டியது பெருங்கடனாம். பண்டைக் காலத்தில் விளங்கிய இரந்தி தேவர் என்னும் அரசர் நாற்பத்தெட்டு நாள் விரதம் அனுட்டித்து அருளுடைமையாகிய இவ்வரத்தையே சிவபிரானிடம் வேண்டிப் பெற்றார்.

"அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

திருச்சிற்றம்பலம்

—சித்தாந்தம்.

சென்னை ஸ்ரீகந்தஸ்வாமி கோயில் வசந்த மண்டபம் டிரஸ்டு அறிக்கை

சென்னை கந்தகோட்டம், கந்தஸ்வாமி கோயிலென வழங்கும், ஸ்ரீமுத்து குமாரஸ்வாமி தேவஸ்தானத்தில், விகாரி ஆண்டு, சித்திரைத் திங்கள், 30-ஆம் நாள் முதல் (13—5—1959 முதல் 31—5—1959 வரை) வைகாசித் திங்கள் 17உ வரையில், ஸ்ரீ கந்தஸ்வாமி கோயில் வசந்த மண்டபத்தில் 19 நாட்கள் தொடர்ச்சியாக வசந்த உத்ஸவம் நடைபெறும். அவ்வமயம் மாலை 6 மணி முதல் 8 மணி வரையில் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களால் "ஸ்காந்த புராணம்" விரிவுரைகள் தொடர்ச்சியாய் தினசரி நடைபெறும். தவிர, பிரதி செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மாலை 6-30 மணி முதல் 8 மணி வரையில், சைதை. ரா. பாலசுந்தரம் அவர்களால் தேவாரம், திருப்புகழ் பாராயணமும் வழக்கம்போல் தொடர்ச்சியாக நடந்து வருகிறது.

திருப்பதிகம்

[திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு, கிழக்கு மருதூர்]

இதுவரை வெளிப் போந்துள்ள கல்வெட்டு நூல்களால் நமக்குத் திருப்பதிகம் குறித்து கிடைத்த சாசனங்களை தொகுத்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். பல வெட்டுக்களின் மூலம் வெளியிடாததால் அவற்றிலும் பின்வரும் குறிப்புகள் காணக் கூடுமாயினும், இதுவரைப் போந்த சாசன சாலை அறிக்கையைப் பெரும்பாலும் தழுவியும், தென்னிந்திய சாசன நூலில் வேண்டுவன ஆண்டும், இவற்றை நேரில் கண்டும் கிடைத்ததை ஈண்டு தொகுத்துரைப்பாம்.

பதிகம் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று. அது பெரும்பாலும் பத்து அல்லது பதினொரு செய்யுட்கள் கொண்டு தெய்வத்தைப் புகழ்ந்துரைக்கும் பாடற்றொகை; புத்தரின் அருமைபெருமைகளைப் பாராட்டும் நூலுக்குப் பெயர் பதிகமே. "பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதறுனே என்பவாகலின், மேல் வகுக்கும் ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பல்வகைப் பொருளையுந் தொகுத்துச் சொல்லுதலிற் பதிகம்" என்ற சிவஞான சுவாமிகள் நன்னூல் விருத்தியுரையும் காண்க. இவ்வுரை, பாயிரத்திற்குப் பதிகமென்ற மறுபெயர் தந்தமைக்குள்ள காரணம் காட்டுகிறது. மணிமேகலை, சிலப்பதிகாரக் காவியங்களின் எழுவாயில் பயின்றிருப்பது பதிகமென்பதை ஈண்டு கவனிக்க. நூல் வகைக் குறிக்கும் **பதிகப் பதமே பதிய**மென்று கல்வெட்டில் வந்துளது. பதியமென்பது பதிகத்தினும் வேறுயதொன்றோவெனின் அற்றன்று.

அன்னவயல் புதுவை யாண்டாள் அரங்கற்குப்
பன்னுதிருப் பாவைபல் பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

என்ற திருப்பாவை தனியனை கவனிக்க. சில சேதுக்கில் திருப்பதிகத்திற்கு [1]**திருப்பாட்டு** என்றுளது. சாசனத்தில் '[2]இவ்வுடையார் (இறைவன்) திருமுன்பு **திருஞானம் ஓத**' என்று வருமிடத்துள்ள 'ஞானம்' பதிகத்தைக் குறிக்குமோவென்ற ஐயம் பின் ஆராய்ச்சியாளர்க் குரியது.

திருவல்லத்து வில்வநாதசாமி கோயில் 'திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்' படியில் விஜயநந்தி விக்ரமன் 17-ஆம் ஆண்டு சாசனத்தில் '[3]திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் **திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பலபணி செய்வார்க்கு நெல்லு நூற்றுக் காடியும்**' என்று வருகிறது. இச்சாசனமே பதிகம்பற்றி வந்துள்ள ஏனைச் சாசனங்களிலும் காலத்தால் முந்தியது. பி. தி. ஸ்ரீநிவாச ஐயங்கார்[4] பல்லவர் சரித்திரத்தில் இந்நந்தி விக்ரமன் காலம் கி. பி. 830 முதல் 854 வரை என்றதால் இச்சாசன காலம் கி. பி. 847. இது திருப்பதிகம் குறித்துப் பொதுவாகவும் சுருக்கமாகவும் கூறுகிறது. இதற்கு அடுத்து வருவது [5]மதுரையும் ஈழமும் கொண்ட பரகேசரிவர்மரான முதற் பராந்தகனது 41-ம் ஆண்டில் அல்லூர் பசுபதீஸ்வரர் கோயில் தென்சுவரில் சேதுக்

---

[1] 57 (1924;; 10 (1918).

[2] No 420&421. S I I. VolV.

[3] S. I. I. Vol 3 No 43.

[4] பாகம் 3 பக்கம் 60.

[5] 373 (1903). A.S. I. 1905-06 P. 72. The three great Saiva Saints of the Tamil Counury and their hymns known as the Devaram, which forms part of the scriptures of the Tamil Saivas, were not forgotten in the time of Parantaka I. is evident from an inscription of his forty first year found in the பசுபதீஸ்வரர் temple at அல்லூர் in the Trichy Dt. Provision is here made for the singing of the திருப்பதியம் hymns (every day). This reference to தேவாரம் is important.

கியது. இதன் மூலம் வெளியாகவில்லை. இதில் பதிகம் குறித்து வந்திருப்பதாக சாசன ஆராய்ச்சி வல்லுநரான வெங்கைய்யா கூறியதை அடிக்குறிப்பு [5]ல் காண்க. இவ்வெட்டின் காலம் கி. பி. 948. முன்னதின்பின் நூறாண்டுகள் கழிந்து இச்சாசனம் பயின்றுளது கவனிக்கத் தகுந்தது. இதன்பின் மதுராந்தக உத்தம சோழன் காலத்தில் திருப்பதிக விண்ணப்பத்திற்கு இரண்டு சிலாலேகை பொறித்துளது. அவற்றில் முன்னது கோனேரி ராஜபுரத்தில் (திருநல்லம்) [6]கண்டராதித்தர் மனைவி செம்பியன் மாதேவி செய்தது. இதன் காலம் கி. பி. 976. இச்சாசனத்தின் வரி 61-ல் '**திருப்பதியம் பாடுவார் இருவர்க்கு நிசதம் தூணி பதக்காக ஓராட்டைக்கு நெல்லு நூற்றெண்பதின் கலத்துக்கு பூங்குடியில் ஒன்றே யெழுமாகாணி யரைக்காணி முந்திரிகை**' யென்றும், வரி 88-ல் '**திருப்பதிகம் பாடுவாரிருவருக்கு மனை முந்திரிகைக்கி** * * *' என்றும் நடை செல்கிறது. இவ்வெட்டில் தான் காலத்தால் முதலாக இருவர் ஏற்பட்டதும், அவ்விருவர்க்கு ஆண்டுக்குரிய உணவிற்கும் இருக்க இடத்திற்கும் வசதி ஏற்படுவது காண்கிறோம். [7]இதன் பின்னது கி.பி. 983-வது ஆண்டில் வெட்டியது. இதில் குறிப்பிடத்தக்கது ஒன்றுமில்லை. இவ்வுத்தமச் சோழன் பிதாமகன் முதற்பராந்தகன். இவர்கட்கு இடையில் நாட்டின் நிலை சீர்குலைந்திருந்ததால் சமய சம்பந்தமான கல்வெட்டுக்கள் அதிகம் பயிலவில்லை போலும்!

உத்தமச் சோழனுக்குப் பின் அரியணை ஏறியவன் தஞ்சை இராஜ ராஜன். இச்சிவபாத சேகரன் ஆட்சியில் தான் முதன் முதலாகத் திருப்பதிகத்திற்கு ஒரு சிறப்புக் கல்வெட்டு கிடைத்திருக்கிறது. இச்சாசனம் ஒன்றே பதிக விண்ணப்பத்திற்கென ஏற்பட்ட சிறப்புடையது. இதன் முக்கியப் பகுதி வருமாறு:—

* * **ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது** வரை உடையார் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரம் உடையார்க்குத் **திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய** உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் குடுத்த **பிடாரர்கள் நாற்பத்தெண்மரும்** இவர்களிலே நிலையாய் **உடுக்கை** வாசிப்பான் ஒருவனும், இவர்களிலே நிலையாய்க் **கொட்டி மத்தளம்** வாசிப்பான் ஒருவனும், ஆக ஐம்பதின்மர்க்குப் **நிசதம் நெல்லு முக்குறுணி** நிவந்தமாய் ராஜ கேசரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும் இவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனார்க்குந் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யவும் அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் **யோக்யர் அல்லாவிடில் யோக்யராயிருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து** அந்நெல்லுப் பெறவும்; அவ்வவர்க்கு அடுத்தமுறை கடவாரின்றி யொழியில் அந்த நியாயத்தாரே யோக்யராயிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு, இட்ட அவனே அவ்வவர்பெறும் படி நெல்லுப் பெறவும் ஆக இப்படி உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது.

கி.பி. 1014-ல் ஏற்பட்ட இச்சாசனத்தில் விண்ணப்பிக்க ஐம்பதின்மருள்ள குழு அமைத்ததும் இவர்களில் ஒலிக்கருவியாகிய உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிக்க இருவரும், இவர்கட்குப் பின் வருவார் இன்னாரென்பதும், அவர்கட்குரிய யோக்கியதையை வற்புறுத்திக்கூறுவதும், அவர்கட்கு தினவேதனம் முக்குறுணி என்பதும் தெரிகிறது. இதில் எத்தனை சந்தி விண்ணப்பித்தார்கள் என்பதும் பிறவும் தெரியவில்லை. சமீபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழக சரித்திர ஆசிரியர் ச. க. கோவிந்தசாமிப்பிள்ளை, M. A அவர்கள் தஞ்சைப் பெரியகோயிலில் சுவர்ச் சித்திரங்கள் கண்டு பிடித்தனவற்றில் ஒன்று இராஜ ராஜன் யானையின்மேல் தேவாரம் ஓதும்போது வைத்திருக்கும் தாளங்களோடிருப்பது. இவ்வோவியத்தால் இவன் எவ்வளவு அளவில் திருப்பதிகங்களை நேசித்தான் என்பது அறியலாம்.

திருப்பதிகம் ஓதுதற்கு [8]விண்ணப்பித்தல் என்று கல்வெட்டு கூறுகிறது. இவ்

[6] S. I. I. Vol III No 151 A.
[7] S. I. I. Vol III No 139 & 13

[8] 433 (1903); S. I. I. Vol II No 65;. 128 (1912).

விண்ணப்பமும் [9]இரண்டு அல்லது [10]மூன்று சந்தியும் செய்ததாக அறிகிறோம். மற்றும் பாடலை [11]அனுபவத்தின்படி பாடியதாகத் தெரிகிறது. இறைவன் முன்பு ஓத ஆண் மக்கள் பெற்ற உரிமைபோல் பெண் மக்களும் பெற்றிருந்தது [12]திருவொற்றியூர் சாசனம் **முன்பு நிமந்தமுடைய தேவரடியார் மேல் ஏற்ற மாக திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய பெண்கள் பன்னிருவர்க்கும்** என்று கூறுவது காண்க. பதிகம் குருடர்களுக்கு உய்வளித் தமை பின்வரும் வரிகளால் அறிக.

[13] ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு இரண்டாவது இராஜ ராஜ வளநாட்டுப் பனையூர் நாட்டு வாவலூர் நாட்டுத் தேவ தானம்: திருவாமாத்தூர் ஆளுடைய அழகிய தேவர் கோயிலில் திருபதிகம் பாடிவரும் குருடர்களைத் தவித்து நம் **தேவாரத்து திருப் பதியம்** பாடும் பொய்யாத சேவடி தேவர் கண நாதனை இராஜ ராஜ பிச்சனுக்கும் இவன் வர்க்கத்தார்க்கும் இக்கோயிற் திருப்பதியக் காணியான இவ்வூர் முதல் காணியாக குடுத் தோம். இவன் வர்க்கத்தாரையும் மெய் இட்டுத் திருப்பதியம் பாடுவித்துக் கொண்டு குருடர்களுக்கு விட்டுவரும் நிவந்தப்படி இவர் களுக்கும் விட்டுக் கல்வெட்டுகவென்று திருவாய் மொழிந்து திருமுகம் பிரசாதஞ் செய்து வந்தமையில் இக்குருடர்கள் முன்பி லாண்டுகள் **அனுபவத்தின்படி பாடிவருங் குருடர்கள் பேர்பதனறுவரும்** இவர்களுக்கு கண் காட்டுவார் இருவரும் ஆகப் பேர்பதினெண் மர்க்கு பேரால் நெல்லு பதக்காக, நாளொன் றுக்கு நெல்லு முக்காலாக, நாள் முன்னூற் றறுபதுக்கு நெல்லு ஆயிரத்தெண்பதின் கலமும், புடவை முதலுக்கு பேரால் காசு ஒன்றாக காசு பதினெட்டுக்கு காசு ஒன்றுக்கு நெல்லு இருபதின்கலமாக வந்த நெல்லு ஆயிரத்து நானூற்று நாற்பதின் கலத்திற்கு, வேலி ஒன்றுக்கு நெல்லு நூற்றிருபதின்கல மாக இத்தேவர் தேவதானம் கடுவனூரில் விட்ட நிலம் பன்னிரு வேலி. இந்நிலம் பன்னிரு வேலியும் காணியாக இவ்வூர் நிலங் கலந்தபடியே கைக்கொண்டு இத்திருப்பதியம் பாடுவார் பேர்பதினெண்மரும் **மூன்று சந்தியும்** வந்து திருப்பதியம் விண்ணப்பஞ் செய்து முன்பிலாண்டுகள் இக்குருடர்கள் நிலங் கைக் கொண்டு செய்து வரும்படியே இத்திருப் பதியம் விண்ணப்பஞ் செய்வாரும் செய்து வரக் கடவார்களாக.

இச்சாசனத்தில் துணிக்கும் ஏற்பாடு இருப்பது கவனிக்க உரியது. இறைவனது பல்வகைத் திருமேனி பற்பல நிலைகளுக்கு உரித்தாயதுபோல தஞ்சை இராஜராஜனுக்கு ஒரு மேனி தேவாரம் கேட்பதற்கென அமைந் தது காண்க.

[14]பெரிய பெருமாளுக்கு **தேவார தேவராக** எழுந்தருளுவித்த தேவர் பதாதிகேசாந் தம் ஐவிரலே இரண்டு தொரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையராகக் கன மாகப் பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திர சேகர தேவர் திருமேனி ஒன்று.

பக்க ஒலிக்கருவி (1) உடுக்கை. (2) கொட்டிமத்தம், (3) தாளம் முதலியன வரு கின்றன. "**திருமுறை தேவாரச் செல்வன்**" என்று இரண்டு [15]இடங்களில் காணப்படுவ திலிருந்து திருமுறை அக்காலத்திற்குமுன் வகுத்தது தெரியவரும். இவ்விரு பட்டயங் களால் தேவாரம் திருமுறை யென்பதும் அறி கிறோம். கோயில்களில் (4) அர்த்தமண்டபம், (4) மகாமண்டபம், (5) வியாக்யான மண்ட பம், (6) புராணமண்டபம் இருப்பது போன்று திருமுறை மண்டபம் இருந்தமை 'எந்தை கோயிலுள் திருமுறை மண்டப மெடுத்து' என்ற உபதேசகாண்ட அடி களைக் காண்க. இதற்கு சிதம்பரத்தில் ஒரு வெண்பா, சாசனமாக இருக்கிறது.

[16] **நட்டப்பெருமான் நாம் ஞானங்குழைத்தளித்த**
சிட்டப்பெருமான் திருப்பதியம் முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்
தேவ வேந்தர்கெட
வாட்டிக்கும் தொண்டையர் கோன்மன்.

---

[9] 280 (1917).
[10] 433 (1903); 96 (1925).
[11] 433 (1903)
[12] 128 (1912).
[13] பூமேவுவளர்-மெய்க் கீர்த்திவுடையது; 433 (1903).

[14] S. I. I. Vol II
[15] 158 (1911); 10 (1918)
[16] S. I. I. Vol IV, No. 225 L 15
(1) S. I. I. Vol. II No 65; 129 (1914.) (2) S. I. I. Vol. II No. 65. (3) 129 (1914.) (4) 420 (1924.) (5) 110 (1912). (6) நீடூர் கல் வெட்டு.

நிற்க, தென்னிந்தியசாசன இரண்டாம் பதுமம் 20-ம் சாசன 121-வது வரியில் 'கோப்பரகேசரிவன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு ௰௬-ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து **தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில்** தானஞ் செய்தருளா இருந்து' என்று செல்கிறது. இதில்வரும் 'தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி' யென்பது தேவாரக் கல்லூரியா என்பது பின் ஆராய்ச்சிக்குரியது.

தேவார ஏடுகளைப் பார்த்துப் புதுப்பிக்க வேண்டியவைற்றைப் புதுப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டதாக [17] சீர்காழிக் கல்வெட்டு கூறுகிறது. செப்பேடு செய்தது சிதம்பர சாசன வெண்பாவொன்றில் வருகிறது.

[18]முத்திறத் தாரீசன் முதற்றிறத்தை பாடியவர்
ஒக்கமைத்த செப்பேட்டி னுள்ளின்—எழுதி
தலக்கிலெல்லைக் கிரிவாயிசை யெழுதினுன்
கூத்தன்தில்லைச் சிற்றம் பலத்தே சென்று.

இவ்வெண்பாவில் முத்திறத்தினர் தேவாரம் பாடியதாகக் கூறுவது கவனிக்க உரியது.

திருக்குகூர் [19] அமரனீஸ்வரர் கோயில் வடசுவரில் அதிராஜேந்திர தேவன் மூன்றும் ஆண்டில் ஒரு சாசனம் அரசர்க்காக இரண்டு சந்தியும் திருப்பதியம் விண்ணப்பித்தமை தெரிகிறது. இதில் அரசர்க்காக வென்பது அரசர் உடல் நலத்திற்கென சாசனக்காரர் கூறுதலின், பதிக விண்ணப்பம் நலம் பயக்குமென்ற நம்பிக்கை அற்றை நாளில் ஏற்பட்டமை அறிகிறோம். மற்றும் நமக்கு இற்றை நாள்வரை கிடைக்கப்பெறாத திருவிடைவாய் சம்பந்தர் தேவாரம் கல்வெட்டாகக் கிடைத்தது சாசன ஆராய்ச்சியின் அவசியத்தை நிலை நாட்டுகிறது.

[17] 281 (1918).
[18] S. I. I. Vol. IV No 225 L. 21.
[19] 280 (1917).).
(1) 219 (1917); (2) 137 (1912); S. I. I. Vol IV No. 233 திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பம் செய்வார்க்கு.

ஆறும் மதியும் பொதிவே ணியனூரா
மாறில் பெருஞ்செல் வம்மலி விடைவாயை
நாறும் பொழிற்கா ழியர்ஞா னசம்பந்தன்
கூறுந் தமிழ்வல் லவர்குற் றமற்றாரே.

இப்பதிகங்களில் சிறப்பாகப் பாராட்டக் கூடிய (1) தாண்டகம், (2) திருத்தொண்டத் தொகை முதலியவற்றைக் குறித்தும் சாசனங்கள் கூறுகின்றன. விண்ணப்பித்தார் பெயர்களை இராஜராஜன் கல்வெட்டு கூறுகிறது. அவை வருமாறு:—

பாலன் திருவாஞ்சியத்தடிகளான இராஜராஜ பிச்சன், திருவெண்ணுவல் செம்பொற்சோதி, தக்ஷிணமேரு விடங்கப்பிச்சன், அம்பலத்தாடி, பொற்சுவரன் திருநாவுக்கரையன், மாதேவன் ஞானசம்பந்தன், கயிலாயன், ஆரூரன், செட்டி எடுத்த பாதம், இராமன் சம்பந்தன், அம்பலவன் பக்தர், கம்பன் திருநாவுக்கரையன், நக்கன்சீராளன், அப்பிநாவுக்கரையன், சிவக்கொழுந்து சீராளன், ஐந்நூற்றுவன்வெண்காடன், திருமறைக்காடன், அம்பலக்கூத்தன், ஆரூரன் நாவுக்கரையன், கூத்தன் மிழலைச் சிலம்பன், சம்பந்தன் ஆரூரன், பிச்சன், காசிபன், சுப்ரமண்யன், கூத்தன் அமரபுஜங்கன், திருவாய்மூரான், திருமலைக்கூத்தன், தில்லைக்கரசன், காளிசம்பந்தன், காபாலி கவாலி, நமசிவாயன், சிவன் ஆனந்தன், சிவக்கொழுந்து சம்பந்தன் [20] நம்பி ஆரூரன், சோமன், ஐயாறன் பெண்ணோர்பாகன், ராஜாதித்தன், செல்வன் கணவதி-என்பன.

இப்பெயர்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பெயர்களிலொன்றால் முடிபுறுகிறது.

சதாசிவன், ஞானசிவன், மனோத்தமசிவன், பூர்வசிவன், தர்மசிவன், கவச்சசிவன், சத்தியசிவன், வாமசிவன், நேத்திரசிவன், ஓங்காரசிவன், தத்புருஷசிவன், உருத்திரசிவன், அகோரசிவன், யோகசிவன், ஈசானசிவன், இருதயசிவன்.

இப்பெயர்கள் தீக்கை நாமமாயென்பது பின் ஆராய்ச்சிக்கு விடப்பட்ட ஐயப்பாடு.

திருமுறை ஓதிச்செல்வதின் காரணமாகப் பூசல் விளைந்து ஒருவன் உயிர் துறந்

[20] S. I I. Vol. 6. No 33.

திருக்கடல்மல்லை

(மகாபலிபுரம்)

பாராயதுண்டுமிழ்ந்த பவளத்தூணைப்
படுகடலிலமுதத்தைப் பரிவாய்கீண்ட
சீரானை, எம்மானைத் தொண்டர்தங்கள்
சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பினை,
போரானைக் கொம்பொசித்த போரேற்றினைப்
புணர்மருதமிற நடந்த பொற்குன்றினை,
காரானை யிடர்கடிந்த கற்பகத்தைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே

—திருமங்கையாழ்வார்.

இந்திய நாட்டினரும் பிற நாட்டினரும் வந்து பார்த்துப் போகிற அதியழகிய அற்புதச் சிற்பங்கள் நிறைந்த ஊர் மகாபலிபுரம். இது செங்கல்பட்டு இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே சுமார் 20 கல் தொலைவில் கடற்கரை யருகே அமைந்திருக்கிறது. இவ்வூரின் பழம் பெயர் **கடல்மல்லை** (திருக்கடன்மல்லை) என்பது. கடலருகே இருப்பதால் கடல்மல்லை யென்ற பெயர் வந்தது. கடலருகே மலையும் இருப்பதால் கடல் மலை என்ற பேர் உண்டாகிப் பின்னர் கடல்மல்லை என்றாயிற்றென்றும் சிலர் கூறுகின்றனர். பல்லவ மன்னனான நரசிம்ம வர்மன் காலத்தில் இங்குள்ள கல் தேர்கள் முதலியன அமைக்கப்பட்டன. அவனுக்கு **மகாமல்லன்** என்ற சிறப்புப் பெயருண்டு. அதனால் இவ்வூருக்கு **மகாமல்லபுரம்** என்றும், **மாமல்லபுரம்** என்றும் பெயர்கள் வழங்கலாயிற்று. பிற்காலத்தில் ஆண்ட குறுநில மன்னர்கள் தாங்கள் மகாபலிச் சக்கரவர்த்தியின் வழி வந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டதால் **மகாபலிபுரம், மாவலிவரம்** என்ற பேர்கள் உண்டாயிற்று என்றும் கூறுகின்றனர். ஆங்கிலத்தில் Seven Pagodas (ஏழு கோயில்கள்) என்ற பேரால் அழைக்கப்பட்டு வருகிறது.

திருக்கடன்மல்லை தொண்டை நாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற திவ்விய தேசங்களில் ஒன்று. முதலாழ்வார் மூவருள் பூதத்தாழ்வார் அவதாரம் செய்த பெருமை யுடையது. இவ்வூரில் கடல் அலைமோதும் கோயிலில் சிவலிங்கமும், அதையடுத்து பள்ளிகொண்ட பெருமாள் விக்கிரகமும் இருக்கின்றன. ஆனால் பூசை வழிபாடு இல்லை. ஆழ்வார்கள் பாடிய கோயில் கடற்கரைக்கோயில்தான் ஆதி சந்நிதி யென்றும், பழுதுநேர்ந்த பின்னர் ஊரிலுள்ள இப்போதுள்ள கோயில் கட்டப்பட்டதென்றும் கூறுகின்றனர். சிவனும் திருமாலும் அருகருகே விளங்குவதை,

பிணங்களிடு காடதனுள் நடமாடு
பிஞ்ஞகனோடு
இணங்கு திருச்சக்கரத்து எம்பெருமானார்க்கு
இடம் விசும்பில்
கணங்கள் இயங்கும் மல்லைக்கடன்
மல்லைத்தல சயனம்
வணங்கு மனத்தாரவரை வணங்கு
என்றன் மடநெஞ்சே

என்று திருமங்கை மன்னன் பாடியருளியிருப்பது ஈண்டு குறிக்கத்தக்கது. ஊர்க்கோயிலைத் **தலசயனம்** என்றும், கடற்கரைக் கோயிலை ஜலசயனம் என்றும், இரண்டும் திவ்விய தேசங்களே யென்றும் சில அறிஞர் கூறுகின்றனர்.

இப்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள எம்பெருமானின் திருநாமம் தல

தை வெண்ணெய்நல்லூர் [21] சாசனம் கூறுகிறது. இனிப் பதிகத்திற்கு முன்னும் பின்னும் திருச்சிற்றம்பலம் தீட்டும் வழக்கம் உண்டோவென்பது நன்றாகத் தெரியவில்லை. ஆனால் பதிகம் குறித்துவாராத கல்வெட்டொன்று திருச்சிற்றம்பலம் என்று முடிவதைக் காட்டிக் கட்டுரையை முடிப்பாம்.

[22] ஸ்ரீ பாதம் என் தலை மேலது ஹர திருச்சிற்றம்பலம்.

—சித்தாந்தம்-1932.

[21] 437 (1921).

[22] 118 of S. I. I. Vol. VI.

சயனப் பெருமாள். நாச்சியார் திருப்பெயர் நிலமங்கைத் தாயார் என்பது. இறைவன் கிழக்கே திருமுக மண்டலம்; சயனத்திருக் கோலம். இங்குள்ள விமானத்தை ககநாக்ருதி விமானம் என்பர். தீர்த்தம் கருடநதி. அமாவாசையில் கடலில் மூழ்கிப்பின் இறைவனை வழிபடுதல் நன்று என்பர். தலசயனப் பெருமாள் கோயிலிலிருந்து அரைக்கல் தூரத்தில் ஞானப்பிரான் (ஆதிவராகமூர்த்தி) கோயில் இருக்கிறது. வலது திருத்தொடையில் தேவியை அமர்த்திக்கொண்டு வராகமூர்த்தி நிற்பதால் இத்தலத்துக்கு வலவெந்தை என்ற மற்றொரு பெயரும் வழங்கியதாகத் தெரிகிறது.

இந்த திருப்பதிக்கு, திருமங்கையாழ்வார் 20 பாசுரங்கள் (இரண்டு பதிகங்கள்) தனியாகவும், வேறு ஆறு பாடல்களில் குறிப்பிட்டும் அருளியுள்ளார். பூதத்தாழ்வார் ஒரு பாசுரம் பாடியுள்ளார். 'பிணங்களிடு காடதனுள்' என்று தொடங்கும் மேலே கூறியுள்ள பாடலைக் கடற்கரைக் கோயிலிலும், 'ஏனத்தினுருவாகி' என்ற பாடலை வராக சுவாமி கோயிலிலும், மற்றவற்றை ஊர்க் கோயிலிலும் சேவிக்க வேண்டுமென்று அறிஞர் கூறுகின்றனர். திருமங்கையாழ்வார் பாசுரங்களில் கண்ணன் திருவிளையாடல்களையும், இராமவதாரச் சிறப்பையும் புகழ்ந்து பாடி யருளுகிறார். 'சங்குதங்கு தடங்கடல் கிடந்தாய்', 'கள்வாகடன்மல்லை கிடந்த கரும்பே வள்ளாலுன்னை எங்ஙனம் மறக்கேனே', 'கச்சிக்கிடந்தவனூர் கடல்மல்லைத் தல சயனம்', 'வங்கத்தால் மாமணிவந்துந்து முந்நீர் மல்லையாய்' என்றெல்லாம் அழகுபடச் சொல்லி யிருக்கிறார்.

இத்தலத்தில் அவதரித்த பூதத்தாழ்வார், இயற்பா இரண்டாம் திருவந்தாதியில்,

தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தண்கால்
தமருள்ளும் தண்பொருப்பு வேலை—தமருள்ளும்
மாமல்லை கோவல் மதிட்குடந்தை யென்பரே
ஏவல்ல வெந்தைக்கிடம்

என்ற திருப்பாசுரத்தை யருளியுள்ளார்.

இவ்வூரிலுள்ள கற் சிற்பங்களைப்பற்றி விரிவான ஒரு கட்டுரையில் தான் எழுத முடியும். எனினும் அவைகளைப்பற்றிய விவரங்கள் இங்கு சுருக்கமாகத் தரப்படுகின்றது. கி. பி. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றி, காஞ்சியம் பதியைத் தலை நகராகக் கொண்டு பல்லவமன்னர் ஆளத்தொடங்கினர். கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசாண்டவன் மகேந்திரவர்ம பல்லவன். தென்னாட்டில் முதன் முதலில் கற்கோயில்கள் அமைக்கத் தொடங்கியவன் அவனே. மலைகளைக்குடைந்து கர்ப்பக்கிரகம், முன் மண்டபம் முதலியவற்றை அழகுற வகுத்தான். குடை கோயில் என்பதே நாளடைவில் குகைக்கோயில் என்று மருவி வழங்கலாயிற்று. அவன் காலத்தேதான் கடன்மல்லை ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது. கச்சிமாநகர் கடன்மல்லைவரையிலும் பரவியிருந்ததென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். திருமங்கையாழ்வார்,



பழைய கலங்கரை விளக்கம்

புல்ன்கொள் நிதிக்குவையொடு புழைக்கமா
    களிற்றினமும்
நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்தெங்கும்
    நான்றொசிந்து
கலங்களியங்கும் மல்லைக் கடல்மல்லைத்
    தலசயனம்
வலங்கொள் மனத்தாரவரை வலங்கொள்
    என்மட நெஞ்சே

என்று அருளியிருக்கும் திருப்பாசுரத்திலிருந்து கப்பல்கள் வந்து தங்கியிருந்த துறைமுக நகர் என்று அறிகிறோம். கலங்கரை விளக்கம் (Light House) ஒன்று அக்காலத்தே இருந்தது. அது இருந்த இடத்திற்கருகே இப்போதும் ஒரு கலங்கரை விளக்கம் இருக்கிறது.

மகேந்திரவர்மனின் மகன் நரசிம்மவர்மன். வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரையன் எனப்படுவான்; மாமல்லன் என்ற சிறப்புப் பெயருடையவனும் அவனே. மகாபலிபுரத்தின் பெருமைக்குக் காரணமாக இருந்தான். அற்புதக் கற்சிற்பங்கள் அமைத்துத் தமிழ் நாட்டிற்கே பெரும் புகழைத் தேடி வைத்தான்.



கல்தேரும் யானையும்



புதிய கலங்கரை விளக்கம்

மாமல்லன் குடைவித்த கோயில்கள் இருவகைப்படும். மலைகளைக் குடைந்து கர்ப்பக்கிரகம், மண்டபம் முதலியவைகளுடைய குகைக் கோயில்கள் ஒருவகை. பெரிய பாறைகளையே தேர்களைப்போல்செய்து ஒற்றைக் கற்கோயில்களாக இருப்பவவை மற்றொருவகை.

இங்கு ஒற்றைக் கற்கோயில்கள் விமானங்களுடன் விளங்குவதைப் பஞ்சபாண்டவ ரதங்கள் என்று வழங்கலாயினர். மிகவும் பெரிதாக இருப்பதைத் தருமராஜ ரதம் என்கின்றனர். இதற்கு மூன்று நிலைகள் உண்டு; இரண்டாவது அடுக்கின் நடுவில் சோமாஸ்கந்தர் உருவம் வெகு அழகாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. பீமசேன இரதம் என்றகோயி

லின் முன் பின் மண்டபங்கள் இருக்கின்றன. அர்ஜுன இரதம், திரௌபதி இரதம் இவைகளை ஒரு மண்டபம் ஒன்ருய் இணைத்திருக்கிறது. இவற்றிற்கெதிரே தனித் தனியே ஒரே கல்லால் யானை, சிங்கம், நந்தி இவைகளின் உருவங்கள் உயிருள்ளவை போலக் காட்சியளிக்கின்றன. திரௌபதி இரதத்தின் மூலத்தானத்திற்குள் காணப்படும் படிமம் துர்க்காதேவி என்பது தெளிவு. நகுல சகாதேவர் இரதங்கள் முற்றுப் பெருத ஒற்றைக் கற்கோயில்கள். முற்காலத்தே இக்கோயில்களிலிருந்த சிவலிங்கங்களைப் பிற்காலத்தே அகற்றப்பட்டு வழிபாடு முதலியன இல்லாது போயினமையால் இரதங்கள் என்று மக்கள் தவருக அழைக்கலாயினர்.

மற்றும் இவ்வூரில் பார்க்கத்தக்கவை, தலசயனப் பெருமாள் கோயிலின் அருகேயும் பின்புறமும் உள்ள பகீரதன்தவம், கோவர்த்தனேத்தாரணம், மகிடாசூரவதம், சேஷசயனம், வராக அவதாரம், வாமனவதாரம் என்ற ஆறு சிற்பங்களேயாம். பகீரதன் தவம் என்பதை முன்னர் அர்ஜுனன் தவம் என்று ஆராய்ச்சியாளர் கருதியிருந்தனர். இரண்டாயிரத்து நானூறு சதுர அடிபரப்பில் ஒற்றைக் காலில் தவம் செய்யும் பகீரதன், கந்தர்வர்கள், பூதகணங்கள், நாககன்னியர், வேடர், யானை, பூனை, குரங்கு முதலிய உருவங்களமைத்திருப்பது கண் கொள்ளாக் காட்சியாகும்.

பசுக்களும், கோபிகைகளும், கோபாலர்களும் தன்னைச் சூழ்ந்திருக்க, கண்ணன் மலையைக் குடையாகப் பிடித்திருக்கும் வனப்புப் பார்ப்பவர் மனத்தைவிட்டு என்றும் அகலாது. ஆயுதங்கள் தாங்கிய எட்டுத் திருக்கரங்களுடைய மகிடாசூரமர்த்தனி வீரத் திருமுகத்துடன் பாயும் சிங்கத்திலேறி சூரனை வதைக்கும் அழகிய சிற்பம் கண்ணையும் கருத்தையும் கவரும். இந்த சிற்பத்துக் கெதிரிலுள்ள பாம்பணையில் பள்ளி கொண்ட பரமன் திருக்கோலம் மிக்க எழிலுடையதாக விளங்குகிறது.

பகீரதன்தவம் (அர்ஜுனன் தவம்) என்ற சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த பாறைக்குச் சற்று அப்பால் வராகசுவாமி கோயிலைக் காணலாம். ஆதிசேஷன் தலைமீது ஒருகாலை வைத்து, பூதேவியை வராகமூர்த்தி வலது தொடையில் அமர்த்தியிருக்கிருர். திருமால் அசுரரிடமிருந்து பூமாதேவியை மீட்டு வந்த காட்சியைத்தான் இங்கே சிற்பி சித்தரித்திருக்கிருன். இந்தக் குகைக் கோயிலிலேயே திருமால் குறள் வடிவெடுத்து மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டுப் பெற்று, அவன் முடிமிசைத் திருவடிவைத்த திரிவிக்கிரமத் திருக்கோலத்தைச் சிற்பிசிலையிலே கண்கவர்வனப்பினதாக வடித்தெடுத்துள்ளான்.

கடைசியாகக் காணவேண்டியது கடற்கரைக்கோயில். கடலலைகள் வந்து மோதுகின்ற இக்கோயிலில் சிவலிங்கம் இருக்கிறது. இச்சிவாலயத்தையடுத்து, ஸ்தலசாயியாகப் பள்ளி கொண்டெழுந்தருளிய திருமாலின் விக்கிரகமும் இருக்கின்றது. இங்கே சிவனும் திருமாலும் ஒருங்கே எழுந்தருளியுள்ள பான்மையைத் திருமங்கையாழ்வார் பாடியுள்ள "பிணங்களிடு காடதனுள்" என்ற திருப்பாசுரத்தில் விளக்கியிருப்பதை முன்னரே கண்டோம். மகாபலிபுரத்தின் மாட்சியும், அற்புதச் சிற்பக்காட்சியும் நேரே கண்டு களிக்கத் தக்கவை.

ஏனத்தினுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான்
வானத்தி லவர்முறையால் மகிழ்ந்தேத் திவலங்கொள்ள
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத் துறைகின்ற
ஞானத்தின் ஒளியுருவை நினைவாரென் நாயகரே

—திருமங்கையாழ்வார்.

பரமக்குடி, ஸ்ரீ சுந்தரராஜப்பெருமாள் 'கோடைத்திருநாள்' உற்சவம் 18-4-59 முதல் 29-4-59 முடிய நடைபெற்றது.

அழகர்கோயில் ஸ்ரீ கள்ளழகர் தேவஸ்தானம் ஸ்ரீ சௌந்திரராஜப் பெருமாளின் சைத்திரோத்சவம் 19-4-59 முதல் 27-4-59 முடிய நடைபெற்றது.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

வையநிகழ் பல்லவர்தங்
குலத்துவந்த மாமணிமா
நிலமுழுது மகிழ்ந்து காக்கும்
ஐயடிகள் காடவர்கோ
னருளானூல்க ளறிந்தரசு
புரிந்திடுத லமையு மென்றே
பொய்யனைய வுடல்வாழ்வு
கழியுமாறு பொருந்தியிடும்
புகழ்வெண்பாப் புலியூர் மேவும்
செய்யதிரு வடிமுதலாப்
பதிகடோறுஞ் செப்பிறு
ரென்வினைக டப்பினரே.

—உமாபதி சிவனார்.

சைவத் திருமுறைகளைப் பன்னிரண்டாக ஆன்றோர் வகுத்துள்ளனர். முதல் ஏழு திருமுறைகள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் இவர்கள் அருளியவை; எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும திருக்கோவையாரும்; திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது அடியார்கள் பாடிய திருவிசைப்பாக்கள் ஒன்பதாம் திருமுறை; திருமூலருடைய திருமந்திரம் பத்தாம் திருமுறை; சிவபெருமான், காரைக்காலம்மையார் முதலிய பன்னிருவர் அருளிய பாடல் தொகுதி பதினோராந்திருமுறை; சேக்கிழாரின் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறை. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இறைவனுக்குப் பாமாலை சூட்டியவர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் நாயனார், திருமூல நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் என்பவர்களே. நாயன்மார்களுள் இருவர் பல்லவ மன்னர்கள்; 'கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் கழற்சிங்க' நாயனார் ஒருவர்; ஐயடிகள் காடவர்கோன் மற்றொருவர்.

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவ மன்னர்கள் கி. பி. நான்காம் நூற்றுண்டு முதல் ஒன்பதாம் நூற்றுண்டு முடிய ஆட்சி புரிந்தனர். அவர்கள் நாட்டிற்குப் பல நன்மைகள் செய்தனர்; அவைகளுள் காட்டைத் திருத்தி நாடாக்கியதும், குகைக் (குடை) கோயில்களமைத்ததும் மிகச் சிறந்தவை. காடுகளை அழித்து விளை நிலன்களாகப் பயன்படுத்தச் செய்தகாரணத்தால் அவர்கள் காடுவெட்டி, காடவர், காடவராயர், காடவர்கோன் என்ற பட்டப்பெயர்களைக் கொண்டார்கள். பல்லவ மன்னர்களில் ஒருவர் இருவர் நீங்கலாக மற்றையோர் சிறந்த சிவபக்தர்கள்; பல கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் தங்களை அவ்வாறே சொல்லிக் கொள்கின்றனர். இடபம் அவர்களின் அரசுரிமை முத்திரை. அத்தகைய மன்னர்களில் ஒருவர் ஐயடிகள் காடவர்கோன் என்பவர். சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் 'ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்' என்று கூறியிருக்கிறார். இவர் காஞ்சிபுரத்தில் திருவவதாரம் செய்தவர். பல்லவ அரசுரிமை யேற்றனர். 'கன்னி மதில்சூழ் காஞ்சிக் காடவர் ஐயடிகளார்' என்று சேக்கிழார் கூறுகின்றனர். வறுமை பகை இவைகளை நீக்கிச் 'சைவத் திருநெறியால்' அரசாட்சி செய்து வந்தார். மகுடந் தரித்திடும் மன்னவர்க்கின்னலே என்பதை யுணர்ந்தார். ஆதலின் அரசுரிமையை மைந்தனிடம் ஒப்படைத்துவிட்டுத் துறவு பூண்டு பல தலங்களுக்குச் சென்று வழிபட்டார். ஒவ்வொன்றைப்பற்றியும் ஒரு வெண்பாப் பாடினார். சிதம்பரத்தில் வந்து சிலகாலம் தங்கித் திருச்சிற்றம்பலத்து இறைவன் திருநடனம் கண்டு மகிழ்ந்திருந்தார். பன்னெடுநாள் திருப்பணிகள் பலசெய்து பரமர்திருவடிநீழல் எய்தினர்.

ஐயடிகள் காடவர்கோன் கி. பி. ஆறும் நூற்றுண்டினராக இருக்க வேண்டுமென்று ஆராய்ச்சி யறிஞர்கள் கருதுகின்றனர். எப்படியாயினும் திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரர் காலத்துக்கு முந்தியவர் என்பது தெளிவு. இந்நாயனார் 24 வெண்பாப் பாடல்களைப் பாடியுள்ளனர்; அதற்கு 'க்ஷேத்திரத் திருவெண்பா' என்று பெயர்; பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது; குடந்தைக் கீழ்க்கோட்டம், திருஐயாறு, திருவாரூர், திருத்துருத்தி, திருக்கோடிக்கா, திரு இடைவாய், திருநெடுங்களம், தண்டலை,

ஆனைக்கா, திருமயிலை, உஞ்சேனை மாகாளம், திருச்சாய்க்காடு, சிராமலை, பாச்சிலாச் சிரமம், மழபாடி, திருவாப்பாடி, கச்சி ஏகம்பம், திருப் பனந்தாள், ஒற்றியூர், திருமயானம் முதலிய பதிகளைப் பாடியுள்ளார். யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை இவைகளைப் பற்றியே உணர்த்தியிருக்கிறார்.

தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்
டெஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன்-நஞ்
சரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி [சங்
இரந்துண் டிருக்கப் பெறின்

என்ற பாடலால் இம் மன்னரின் வாழ்க்கைக் குறிக்கோளை யறிலாம். ஆட்சியை நீத்துச் சிவத்தொண்டில் தம் வாழ்க்கையை முற்று வித்தவராகவே சேக்கிழார் இவரைப் புகழ்ந்து கூறுகிறார். துறவு பூண்டு தமது தவவாழ்க் கையில் ஐயமேற்று பக்தி செலுத்தினரென்று ஊகிக்க நம்பியாண்டார் நம்பிகளின் திரு வாக்கு இடம் தருகிறது. திருத்தொண்டர் திருவந்தாதியில்,

சத்தித் தடக்கைக் குமரனற்
றாதைதன் தானமெல்லா
முத்திப் பதமோரோர் வெண்பா
மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மைநன்று லரற்காவைய
மேற்ற லென்னும்
பத்திக்கடல் ஐயடிக ளாகின்ற
நம் பல்லவனே

என்று கூறியிருப்பதிலிருந்து ஐயமேற்ற கார ணத்தால் இவர் (ஐய அடிகள்) ஐயடிகள் என நம்பிகள் கூறாமல் கூறுவதுபோல் தோன்று கிறது. அப்படியாயின் ஐயடிகள் என்பது கார ணப் பெயராக இருத்தல் வேண்டும்; இயற் பெயர் யாதோ தெரியவில்லை.

'இருமி ஏங்கி நுரைத்தேறி வந்துந்தி ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே ஐயாறு வாயால் அழை' என்ற இந்த நாயனார் பாடல், 'புலன் ஐந்தும் பொறிகலங்கி அறி வழிந்திட்டு ஐம்மேலுந்தி...திருவையாறே' என்ற சம்பந்தர் பாடலை நினைவுக்குக் கொண்டு வருகிறது.

'தொட்டுத் தடவித் துடிப்பொன்றுங் காணாது பெட்டப் பிணம் என்று பேரிட்டு' என்று ஐயடிகள் கூறியிருப்பது, திருமூலர் 'ஊரெலாம் கூடி ஒக்க அழுதிட்டுப் பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு' என்று கூறி யிருப்பதுடன் ஒப்பநோக்கி மகிழத்தக்கது.

'இல்லும் பொருளும் இருந்த மனை யளவே' என்ற காடவர் கோன் கூற்றும், 'அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே' என்ற பட்டினத்தடிகள் வாக்கும் கண்டின்புறற் பாலது.

'தஞ்சாகமூவுலகும் ஆண்டு தலையளித் திட்டெஞ்சாமை பெற்றிடினும் யான் வேண் டேன்', 'வெண்குடைக்கீழ் வீற்றிருந்த செல் வம் விழையாதே' என்ற அடிகளாரின் வெண் பாப் பகுதிகளை 'வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்', 'வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ் மன்னவர்தம் கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறி யேன்' என்ற குலசேகர ஆழ்வார் திருவாக்குட னும், 'வானேயும் பெறில் வேண்டேன் மண் ணாள்வான் மதித்துமிரேன்' என்று மாணிக்க வாசகர் அருளியிருப்பதோடும் ஒருங்கே எண்ணி மகிழவேண்டியது.

'என்னெஞ்சே உன்னை இரந்தும் உரைக் கின்றேன்...காலத்தால்...கச்சிஏகம்பத்தானை இறைஞ்சு' என்று ஐயடிகள் மிகவும் பரிந்து கூறியிருப்பது நம்மைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தி விடுகிறது.

ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றுருங்
கோடுகின்றார் மூப்புங் குறுகிற்று—நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நன்னுமுன் நல்நெஞ்சே
தில்லைச்சிற் றம்பலமே சேர்.

—ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

மூவலூர் ஸ்ரீ மார்க்கசகாயசுவாமி கோயிலில் வார வழிபாட்டு விழா 19—4—1959 துவக்கப்பட் டது. திருநெல்வேலி சமயச்சொற்பொழிவாளர் குமாரி க. கோமதி அவர்களால் சிவநெறியிற் சில மகளிர் என்ற பொருளைப்பற்றி சொற்பொழிவு நடைபெற்றது.

அறநிலைய ஆணையாளர் திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்கள் கீழ்க் கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள்.

9—4—59

1.	ஸ்ரீமுல்லைவனநாதசுவாமி கோயில், திருக்கருகாவூர்.	கல்லில்பொறித்த தேவாரத் திருப்பதிகத் திறப்பு விழா.
2.	ஸ்ரீசாக்ஷிநாதசுவாமி கோயில், அவளிவணல்லூர்.	ஷை
3.	ஸ்ரீபாதாளேஸ்வரர் கோயில், அரித்வாரமங்கலம்.	கோயில் திருப்பணி வேலை துவக்கம்.
4.	ஸ்ரீஆபத்சகாயேஸ்வரசுவாமி கோயில், ஆலங்குடி.	கல்லில்பொறித்த தேவாரத் திருப்பதிகத் திறப்பு விழா.
5.	ஸ்ரீவில்வவனேஸ்வரசுவாமி கோயில், திருக்கொள்ளம்புதூர்.	ஷை பன்னிரு திருமுறை விழா.
6.	ஸ்ரீஆதிகும்பேசுவரர் தேவஸ்தானம், கும்பகோணம்.	கல்லில் பொறித்த தேவாரத் திருப்பதிகத் திறப்பு விழா.

10—4—59

1.	ஸ்ரீகைலாஸநாதசுவாமி கோயில், திங்களூர்.	கோயில் திருப்பணி துவக்கம். அப்பூதி அடிகள் தண்ணீர்ப்பந்தல் திறப்பு விழா.
2.	ஸ்ரீதயாநிதீஸ்வரசுவாமி கோயில், வடகுரங்காடுதுறை.	கோயில் திருப்பணி துவக்கம்.
3.	ஸ்ரீ வாஞ்சிநாதசுவாமி கோயில், ஸ்ரீவாஞ்சியம்.	கல்லில் பொறித்த தேவாரத் திருப்பதிகத் திறப்பு விழா. நூல் நிலையத் திறப்பு விழா.
4.	ஸ்ரீதியாகராஜசுவாமி கோயில், திருவாய்மூர்.	குடி தண்ணீர் திறப்பு விழா.
5.	ஸ்ரீசுப்ரமண்யசுவாமி கோயில், எட்டிகுடி.	கல்லில் பொறித்த திருப்புகழ் திருப்பதிகத் திறப்பு விழா.
6.	ஸ்ரீமனத்துணைநாதசுவாமி கோயில், வலிவலம்.	கல்லில் பொறித்த தேவாரத் திருப்பதிகத் திறப்பு விழா
7.	ஸ்ரீநீலாயதாக்ஷி காயாரோகணசுவாமி கோயில், நாகப்பட்டினம்.	ஷை

11—4—59

1.	ஸ்ரீமணிகண்டேஸ்வரசுவாமி கோயில், செங்கிலாந்தி—திருத்துறைப் பூண்டி	கோயில் திருப்பணி தொடக்கம்.
2.	ஸ்ரீவரதராஜபெருமாள் கோயில், தி. து. பூண்டி.	கோயில்கடைகள் திறப்பு விழா.
3.	ஸ்ரீகற்பகநாதசுவாமி தேவஸ்தானம், கற்பகநாதர்குளம்.	கல்லில் பொறித்த தேவாரத் திருப்பதிகங்கள் திறப்பு விழா.
4.	ஸ்ரீசத்குணநாதசுவாமி தேவஸ்தானம், இடும்பாவனம்.	ஷை
5.	ஸ்ரீகொழுந்தீஸ்வரசுவாமி தேவஸ்தானம், கோட்டூர்.	கோயில் திருப்பணி தொடக்கம்; வில்வமரம் நடுவிழா.
6.	ஸ்ரீபுஷ்பவனேஸ்வரர் தேவஸ்தானம், பூவனூர்.	கல்லில் பொறித்த தேவாரத் திருப்பதிகத் திறப்பு விழா.

12—4—59

ஸ்ரீதியாகராஜசுவாமி தேவஸ்தானம், திருவாரூர்.	திருவாரூர் கமலாலயம் குளத்திருப்பணி அமைச்சர் திரு. M. பக்தவத்ஸலம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆணையாளரும் விழாவில் கலந்துகொண்டார்கள்.

13—4—59

ஸ்ரீ(நாக கணபதி) விஞயகர் கோயில்—	கோயில் திருப்பணி தொடக்கம்.
ஸ்ரீநாகநாதசுவாமி கோயில் ,, தஞ்சை.	ஷை
ஸ்ரீ ஹரசாபவிமோசனப்பெருமாள் கோயில், கண்டியூர்.	தேவஸ்தான காரியாலயம் திறப்பு விழா. கோவில்குளம் செப்பனிட ஆரம்பித்து வைத்தல்.
ஸ்ரீஸௌந்திரராஜப்பெருமாள் கோயில், பெரும்புலியூர்.	திருமழிசை ஆழ்வார் அருளிய பாசுரம்—கல்லில் பொறித்தது—திறப்பு விழா,

✳ திருக்கழுக்குன்றம் ✳

கீழ்க்கோயில் கோபுரமும் மலைக்கோயில் தோற்றமும்

வெள்ளமெல்லாம் விரிசடை
மேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ்
சிறுத்தொண்டர்
உள்ளமெல்லாம் உள்கி
நின்றுங்கே உடனுடும்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே.

—திருஞானசம்பந்தர்.

மூவிலைவேற் கையானை மூர்த்தி தன்னை
முதுபிணக்கா டுடையானை முதலா னானை
ஆவினிலைந் துகந்தானை அமரர் கோனை
ஆலால முண்டுகந்த ஐயன் தன்னைப்
பூவின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வரிய பெருமானைப் புனிதன் தன்னைக்
காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.

—திருநாவுக்கரசர்.

பிழைகள் தீரத்தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன் தானுறை யும்மிடம்
மழைகள் சாலக் கலித்து நீடுயர் வேயவை
குழைகொண் முத்தஞ் சொரியுந் தண்கழுக்
குன்றமே

—சுந்தரர்.

மலங்கி னேன்கண்ணில் நீரை மாற்றி
மலங்கெடுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவடிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காமலே வந்து
காட்டி னய்கழுக் குன்றிலே

—மாணிக்கவாசகர்

திருக்கழுக்குன்றம் தொண்டைநாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்று. அது செங்கல்பட்டு இரயில் நிலையத்திற்குத் தென் கிழக்கில் ஒன்பது கல் தொலைவிலுள்ளது. இந்த பதிக்கு வேதகிரி, வேதவெற்பு, வேதா சலம், பட்சிதீர்த்தம், ஆதிநாராயணபுரம், உருத் திரகோடி என்ற பல பேர்கள் உண்டு. தக்ஷண கைலாசம் என்றும் கூறுவர். கல்வெட்டுக் களில் உலகளந்த சோழபுரம் என்று குறிக்கப் படுகிறது.

இன்னும் பிரமபுரி, இந்திரபுரி, ஆதித்த புரி, குமாரபுரி, வசுபுரம், முனிகணநாதபுரம், நந்திபுரி என்ற பல பேர்கள் அவ்வத் தெய் வங்கள் பூசித்த காரணத்தாலும் ஏற்பட் டிருக்கின்றன.

கழுகுகள் பூசித்ததால் இத்தலத்திற் குத் திருக்கழுக்குன்றம் என்ற பேர் உண்டா

யிற்று. நான்கு வேதங்களும் நான்கு மலையாக இங்குள்ளன என்றும், அதர்வண வேத மலை யுச்சியில் சிவபெருமான் எழுந்தருளி யிருப்ப தால் வேதகிரி என்ற பேர் வந்தது என்று புராணம் கூறுகிறது. கழுகுகள் வழிபட்ட காரணத்தினல் பட்சிதீர்த்தம் என்ற பேரைப் பெரும்பாலும் வடநாட்டினர் வழங்கி வருகின்றனர். திருமால் பூசித்ததால் ஆதி நாராயணபுரம் என்ற பேரும், கோடி உருத்தி ரர்கள் தொழுத காரணத்தால் உருத்திர கோடி என்ற நாமமும் ஏற்பட்டன.

நம் நாட்டிலுள்ள மிகப் பழைய தலங் களில் இது ஒன்று. கி. பி. ஏழாம் நூற்றுண் டிலேயே இது சிறப்புற்று விளங்கியதென் பது கல்வெட்டுக்களிலிருந்தும், தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களிலிருந்தும் அறி யக் கிடக்கின்றது. இவ்வூர் நடுவில் மரங்கள் நிறைந்த அழகிய மலைமேல் வேதகிரீசுவரர் கோயில் இருக்கிறது. மலைசுமார் 500 அடி உயரமுள்ளது. ஏறுவதற்குப் படிக்கட்டுகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. சுமார் 200 படிகள் ஏறியவுடன் அவை இரண்டு பிரிவு களாகச் செல்கின்றன. ஒன்றின் வழியாக ஏறியும், மற்றொன்றின் வழியாக இறங்கியும் வரும் வழக்கம் இருக்கிறது. மலை உச்சியில் உள்ள கோயில் மூன்று பாறைகளால் ஆக்கப்பட்டது. ஒரே பிரகாரம்தானுண்டு. சிவலிங்கப்பெருமான் வாழைப்பூக் குருத்துப் போல் சுயம்பு மூர்த்தி யாய்க் காட்சி யளிக் கிறார். கர்ப்பக் கிரகத் தின் உட்புறச்சுவர்க ளில் சோமாஸ்கந்தர், பிரமன், திருமால், யோக தக்ஷிணமூர்த்தி, மார்க்கண்டேயர், நந்தி கேசுவரர், சண்டிகேசு வரர் முதலியோர் உரு வங்கள் செதுக்கப்பட் டிருக்கின்றன. வடக்கு நோக்கி, சொக்கம் மாள் கோயில், விநாய கர்கோயில் இவைகள் இருக்கின்றன. வேத கிரீசுவரர் சந்நிதி கிழக்கு முகமாக அமைந்திருக்கிறது.

இறைவன் திருநாமம் வேதகிரீசுவரர்; தேவி பெண்ணினல்லாளம்மை.

தேவேந்திரன் மலையீசரை பன்னிரண் டாண்டுகளுக்கு ஒருமுறை பூசிப்பதாகவும், அதை இடியபிஷேகம் என்றும் கூறுவர். 18—9—1901-ல் விமானத்தில் இடிவிழுந்த தென்றும், பின்பும் ஒருமுறை பிரகாரத்தில் இடிவிழுந்ததென்றும் தெரிகிறது.

இரண்டு முனிவர்கள் சாபத்தினல் கழுகு உருவம் அடைந்து வேதகிரிப் பெரு மானை நாள்தோறும் வந்து வழிபடுகின்றனர் என்று புராணம் கூறுகிறது. பட்சிப் பாறை என்ற இடத்திற்கு இரண்டு கழுகுகள் ஒவ் வொரு நாளும் பகல் சுமார் 11-மணிக்கு வரு கின்றன. பட்சிப்பண்டாரம் என்பவர் கொடுக் கும் சர்க்கரைப் பொங்கலையும் நெய்யையும் உண்டு செல்கின்றன. ஊன் உண்ணும் வகையைச் சேர்ந்த பறவைகளாயினும் இவைகளின் அமைதியான சாயலும், கம் பீரமான நடையும் பார்ப்பவர் மனத்தைக் கவர்கின்றன. காசிக் கங்கையில் காலையில் நீராடி, நடுப்பகலில் திருக்கழுக்குன்றத்தில் உணவுண்டு, மாலையில் இராமேச்சரத்தில் வழிபட்டு, இரவில் சிதம்பரத்தில் தங்குகின் றன என்று பரம்பரையாய்ச் சொல்லப்பட்டு வருகிறது. குடியாத்தத்திற்குக் கிழக்கில் உள்ள மகாதேவ மலையிலும் இவை தங்கிவரு

கழுகுகள் உணவு அருந்தல்

வதாகக் கூறுகின்றனர். பட்சிதீர்த்தம் அல்லது சம்பாதி தீர்த்தம் மலைமேல் இருக்கிறது. பட்சி தரிசனம் பாபவிமோசனம் என்ற பழமொழியுண்டு.

வேதகிரீசுவரர் கோயிலுக்கு 100 அடி கீழே, இறங்கிவரும் படிக்கட்டுகளின் பக்கத்தில் **ஒருக்கல்மண்டபம்** என்ற குகைக்கோயில் இருக்கிறது. இது அற்புத சிற்ப வேலைப்பாடமைந்தது. கர்ப்பக்கிரகமும், முன் மண்டபமும் குடையப்பட்டிருக்கிறது. நரசிம்ம வர்ம பல்லவன் இதை அமைக்கச் செய்தவன். உள்ளே சிவலிங்கமும், வாயிலின் இருபுறம் துவாரபாலகர்களும், கர்ப்பக்கிரகச் சுவர்களில் பிரமன், திருமால் முதலியோரின் உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

மலையடிவாரத்திலுள்ள கோயில் **பக்தவத்சலர்** ஆலயம்; நான்கு கோபுரங்களையும் இரண்டு பிரகாரங்களையும் உடையது. உள்ளே ஆமை மண்டபம் என்பது காணத்தக்கது. இதிலுள்ள மேடையை ஆமையுருவம் தாங்கி நிற்கிறது. கோயிலின் வடமேற்கு மூலையில் **திரிபுரசுந்தரியம்பாள்** கோயில் கொண்டெழுந்தருளியுள்ளாள்; மிகவும் மகிமையுடைய தேவி. தர்முக்கோயிலின் தென்மேற்கே **வண்டுவனப் பிள்ளையார்** கோயில் இருக்கிறது. கோயிலை ஆதியில் சுரகுரு என்ற சோழமன்னன் கட்டியதாக வரலாறு. **ஆதி பேரம்பலத் தம்பிரான்** என்ற துறவி நான்கு கோபுரங்களையும் கட்டினர் என்று தெரிகிறது. இக்கோயிலிலுள்ள வீரபத்திரரின் திருவுருவம் அவசியம் பார்க்கவேண்டியது.

திருமலைக்குத் தென்கிழக்கே **சங்குதீர்த்தம்** என்ற பெரிய திருக்குளம் இருக்கிறது. அதன் நடுவே அழகிய நீராழி மண்டபம் காட்சியளிக்கிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இக்குளத்தில் சங்கு பிறக்கின்றது. இப்படிக்கிடைத்த பல சங்குகள் கோயிலில் இருக்கின்றன. இக்குளத்தின் தண்ணீர் தாமிரசத்து உடையது; இதில் நீராடுவது உடல் நலம் தருகிறது என்பது அனுபவ வாயிலாக யாவரும் அறிந்ததொன்று. இதன் கரையில் மார்க்கண்டேசுவரர் கோயில் இருக்கிறது. மார்க்கண்டேயர் இங்கு வழி பட்டதாகச் சொல்லப்படுகிறது.

சங்கு தீர்த்தத்தில் அதிகாலையில் நீராடிய பின்னர் திருமலையை மக்கள் வலம் வருகின்றனர். மலையச்சுற்றிவருவது 2¼ கல் தொலைவுள்ளது. அப்படி வரும்போது மலையிலுள்ள மூலிகைகளினூடே வரும் சஞ்சீவிக் காற்று (Ozone) உடல் நலத்தைக் கொடுக்கிறது. மருந்துமலை என்ற ஒரு இடத்தில் சற்று எல்லோரும் தங்கிச் செல்வது வழக்கம். காசம் முதலிய நோய்கள், சித்தபிரமை, பேய், பிசாசு முதலியன பிடித்தோர் இத்தலத்தில் தங்கி மலைவலம் செய்து தங்களது நோய் முதலியவைகளைப் போக்கிக்கொள்கிறார்கள். மலை சுற்றுவதற்கு செவ்வாய்க்கிழமையையே சிறந்த நாளாகக் கொண்டிருக்கிறார்கள். மலைவலம் வரும் வழியில் மாணிக்கவாசகர் கோயில் இருக்கிறது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவருக்கும் மலை வீதியில் கோயில் இருக்கிறது. இதை மூவர் கோயில் என்பர். வேதமே மலையாக இருப்பதால் அதை மிதித்து மேலே ஏறி சிவபெருமானை வழிபடாமல் கீழே இருந்தபடியே வணங்கிப் பாடல்களை அருளினார்கள். இந்த இடத்தை **மூவர்பேட்டை** என்றும் வழங்குகின்றனர்.

சங்கு தீர்த்தத்திற்குத் தென்கிழக்கே சற்று தூரத்தில் **உருத்திரன் கோயில்** இருக்கிறது; இது ஆதி கோயில் என்றும், மிகப்பழைமையானதென்றும் கூறுவர். இறைவன் திருநாமம் உருத்திரகோடீசுவரர்; தேவியின் திருப்பெயர் அபிராம்சுந்தரி. இது தேவார வைப்புத்தலம்.

திருக்கழுக்குன்றத்தைப்பற்றித் தேவார முதலிகள் மூவரும் பாடியருளியுள்ளனர். **திருஞானசம்பந்தர்**, பதினொரு பாசுரங்களுடைய ஒருபதிகம் பாடியுள்ளார். ஒருபாடலில், 'பெண்ணின் நல்லாளை யொருபர்கம் இணையல் செய்யா இலங்கெயின் மூன்றும் எரியுண்ணக் கணையல் செய்தான் காதல் செய் கோயில் கழுக்குன்றே' என்று கூறுகிறார். **திருநாவுக்கரசர்** இரண்டு திருத்தாண்டகச் செய்யுள்கள் அருளியுள்ளார். ஒன்றில் 'காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே' என்று பேசுகிறார். திருப்புகலூரில் அவர் கடைசியாகப் பாடிய தேவாரப் பாடல் ஒன்றில் 'கழுக்குன்றத்துச் சியாய் கடவுளே நின் பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்' எனவும் கூறியிருக்

கிறார். சுந்தரர் பத்துப் பாக்களையுடைய ஒரு பதிகம் செய்திருக்கிறார். 'பாவம்வினைகள் தாம்' பல நீங்கவே, சென்று சென்று தொழுமின், 'நீளநின்று தொழுமின் நித்தலும்', 'புலைகள் தீரத்தொழுமின்', 'பிழைகள் தீரத்தொழுமின்' என்றெல்லாம் புகல்கிறார். மாணிக்கவாசகர், திருக்கழுக்குன்றப் பதிகம் என்பதில் ஏழு பாடல்களை யருளியுள்ளார்; 'கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்று குருதரிசனம் பெற்ற அநுபவத்தைக் கூறியிருக்கிறார்; இன்னும் கீர்த்தித் திருவகவலில், 'கழுக்குன்றதனில் வழுக்கா திருந்தும்' என்றும் குறித்திருக்கிறார். பட்டினத்தடிகள்,

> 'காடோ செடியோ கடற்
> புறமோ கனமே மிகுந்த
> நாடோ நகரோ நகர்
> நடுவோ நலமே மிகுந்த
> வீடோ புறந்திண்ணையோ
> தமியேனுடல் வீழுமிடம்
> நீடோய் கழுக்குன்றிலீசா
> வுயிர்த்துணை நின்பதமே'

என்ற பாடலைப் பாடியிருக்கின்றனர்.

அருணகிரிநாதர், திருக்கழுக்குன்றம், கதலிக்கானம், கதலிவனம், வேதவெற்பு, தமிழ் வேதவெற்பு என்ற பெயர்களமைத்து ஐந்து திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியுள்ளனர். பாலாற்றங்கரையிலுள்ள பூதூரில் பிறந்து, பொன்விளைந்தகளத்தூரைத் தமது இருப்பிடமாகக் கொண்டிருந்த புலவர் திலகமான அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவர் கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்றமாலை என்ற அரிய நூல்களை இயற்றியிருக்கிறார். தலபுராணம் 21 அத்தியாயங்களில் 843 பாடல்கள் உடையது. கழுக்குன்றமாலை என்னும் பக்திச்சுவை மிகுந்த நூலின் அருமையை 'கந்தரந்தாதியைப் பாராதே; கழுக்குன்றத்து மாலையை நினையாதே' என்ற பழமொழி விளக்கி நிற்கின்றது.

இத்தலத்தின் விருட்சம் கதலி (வாழை). இங்கு பன்னிரண்டு முக்கியமான தீர்த்தங்கள் உள்ளன. சங்கு தீர்த்தம், பட்சி தீர்த்தம் மேலே சொல்லப்பட்டுள்ளது. அடிவாரக் கோயிலில் நந்தி தீர்த்தம் இருக்கிறது. மூவர் கோயிலுக்கு அண்மையில் இந்திர தீர்த்தம் உள்ளது. இன்னும் சம்பு தீர்த்தம், உருத்திர கோடி தீர்த்தம், வசிட்ட தீர்த்தம் விசுவாமித்திர தீர்த்தம், வருண தீர்த்தம், மெய்ஞான தீர்த்தம், அகத்திய தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், அகலிகை தீர்த்தம், கோடி விநாயக தீர்த்தம் முதலியன மலையைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் இருக்கின்றன.

சித்திரைத் திருவிழாவில் மூன்றாம் திருநாளில் காலை அதிகாரநந்தி சேவையன்று பஞ்சமூர்த்திகள், 63 நாயன்மார்களோடு மலை வலம் வருதல் சிறந்த காட்சி. கோதாவரி புஷ்கரம், கும்பகோணம் மகாமகம் போன்று இத்தலத்திலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை சங்குதீர்த்தபுஷ்கரம் வெகு சிறப்பாக நடைபெறும்; அப்போது இலட்ச தீபக்காட்சியும் உண்டு. கடைசியாக இப்படி நடந்தது 20—10—1956-ல். கார்த்திகை மாதம் ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் 1008 சங்காபிஷேகமும் நடைபெறுகிறது.

இத்தலத்தில் கழுகுகள் வந்து உணவு உண்ணுதல் பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. 'கழுகு தொழு வேதகிரி' என்று திருப்புகழ் கூறுகிறது. 'முள்வாய்க்கங்க வடிவெடுத்திருவர் நோற்கு மலையிது' என்று திருவிளையாடற் புராணம் குறிக்கிறது. ஹாவர்ட் (Havart) என்ற டச்சுக்காரர் தாம் எழுதிய நூல் ஒன்றில், 3—6—1681-ல் தாம் நேரில் கழுகுகள் உணவருந்தும் காட்சியைக் கண்டதாகச் சொல்லியிருக்கிறார்,

மலைக்கோயிலிலும், அடிவாரக் கோயிலிலும் பல கல் வெட்டுக்கள் இருக்கின்றன. அவை பல்லவர், சோழர், பாண்டியர், இராஷ்டிரகூடர், விஜயநகரமன்னர் முதலியவர் காலத்தவை. அவை கோயில் திருப்பணிகள், தானங்கள் முதலியவைகளைப்பற்றிக் கூறுகின்றன. களத்தூர் கோட்டத்து களத்தூர் நாட்டிலுள்ள உலகளந்த சோழபுரம் என்று திருக்கழுக்குன்றம் குறிக்கப்பட்டிருக்கிறது. இறைவன் பெயர் திருக்கழுக்குன்றமுடைய நாயனார், மூலத்தானத்துப் பெருமானடிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மலைப்படிக் கட்டுகளும், மலைமீது விநாயகர் ஆலயமும் பூவினூர் சூரியதேவர் என்பவரால் ஆக்கப் பட்டவையென்றும் தெரிகிறது. நமிநந்தியடி

திருவரங்கம்
அரங்கநாதசுவாமி கோயில்

28—3—59

அன்புடையீர்,

ஸ்ரீ ரங்கநாதசாமி கோயில் மூலஸ்தானத்தில் மார்ச்சு திங்கள் 22-ம் நாள் காலை ஏற்பட்ட தீ விபத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். மூலவருக்கும் உபய நாச்சிமார்கள் உற்சவ உருவங்களுக்கும் மற்றும் 'பேரங்கள்' முதலிய உருவங்களுக்கும் எவ்வித சேதமும் இல்லை. ஆதிசேஷனுக்கு மாத்திரம் சேதம் உண்டு. ஆடி பிரம்மோற்சவம் நடந்து கொண்டிருந்தபடியால், அர்ச்சகர்கள் பெரியவர்களின் அபிப்பிராயப்படி, இளங்கோயில் கட்டுவதற்கும் உற்சவத்திற்கு எவ்விதத் தடையும் இல்லாமல் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டன. மூலஸ்தான கட்டிடங்களுக்கும் ஆதிசேஷருக்கும் திருப்பணி செய்வதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. ஷை திருப்பணிகள் சீக்கிரம் முடிக்கப்பெறும் என்று நம்பப்படுகிறது. மூலவரின் முக்கியத்துவத்திற்கும் மேன்மைக்கும் ஏற்ற விதத்தில் சிறப்பாக விஷ்வமங்கள மகா சம்பிரோக்ட்சணம் செய்யவேண்டியதாக இருக்கிறது. மக்களிடமிருந்து ஷை திருப்பணிக்கு தாராளமான நன்கொடைகள் வேண்டப்படுகின்றன. நன்கொடைகளை அருள் கூர்ந்து நேராகக் கோயில் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. நிதியோ வேறு நன்கொடைகளோ வசூலிப்பதற்கு வேறு யாரும் அனுமதிக்கப்படவில்லை.

கே. கே. மேனன்
28—3—59
நிர்வாக அதிகாரி

கள் நாயனார் மடம் இருந்ததை ஒரு கல்வெட்டு அறிவிக்கிறது. மலைமேல் ஒருக்கல் மண்டபத்தில் உரோம எழுத்துக்களால் பொறிக்கப் பெற்ற பல டச்சுக்காரர்கள் பெயர்கள் காணப்படுகின்றன; அவை கி. பி. 1664 முதல் 1687 வரை உள்ள காலத்தவை.

திருவரங்கம் கோயில் திருப்பணி
நன்கொடை வேண்டுகோள்

24—4—'59

ஸ்ரீ ரங்கநாத சாமி கோயிலின் மூலஸ்தான கட்டிடத் திருப்பணி வேலைகள் முடிக்கப் பெற்றிருக்கின்றன. திருவெள்ளறை ஸ்ரீ புண்டரிகாட்சப் பெருமாள் கோயிலிலும், சமயபுரம் மாரியம்மன் கோயிலிலும் மூலவர் பழுது பார்த்தல் முதலிய வேலைகளைச் செய்திருப்பவருமான ஸ்தபதியிடம் திருவரங்கம் கோயிலின் மூலவர் பழுது பார்க்கும் வேலை ஒப்புவிக்கப்பட்டு ஸ்தபதி வேலையைத் துவக்கியிருக்கிறார். ஸ்தபதி சுமார் ஒரு மாத காலத்தில் வேலையை முடிப்பார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

விஷ்வமங்கள மகா சம்பிரோக்ட்சணம் பற்றி ஆலோசிப்பதற்காக பெரியோர்கள், ஆகம சாஸ்திரத்தில் புலமை பெற்றவர்கள் முதலியவர்களுடைய மாநாடு ஒன்று கூட்டப் படும். பழைய திருவாச்சி, சிம்மாசனம் இவைகளுக்குப் பதிலாக 500 தோலா எடையுள்ள தங்கத் திருவாச்சியும், 300 தோலா எடையுள்ள சிம்மாசனமும் செய்யப் படுகின்றன. மூலஸ்தான தூண்களுக்கும் சுதை வகையறுக்களுக்கும் தங்கத் தகடு செய்யப்பட்டு வருகிறது. ஆதிசேஷன் படத்திற்குத் தங்க அங்கி செய்வதற்கும் உடலுக்கு வெள்ளி அங்கி செய்வதற்கும் ஒரு திட்டமிருக்கிறது. இதற்கு சுமார் 750 தோலா தங்கமும், 5000 தோலா வெள்ளியும் தேவைப்படும். மற்றும் பல திருப் பணி வேலைகளும் செய்யப்பட்டு வருகின்றன. மூலவரின் முக்கியத்துவத்திற்கும் மேன்மைக்கும் ஏற்றாற்போல் மகா சம்பிரோக்ட்சணம் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவைகளுக்கெல்லாம் சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இதுவரை ரூ. 14,000 நன்கொர்டையாக வரப்பெற்றிருக்கிறது.

ஷை வேலைகளை விரைவில் முடிக்க இயலும் வகையில் தாராளமாக நன்கொடை அளித்து உதவுமாறு பொது மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே தெரிவித்தபடி நன்கொடைகளை நேராக கோயில் நிர்வாக அதிகாரிக்கு (Executive Officer) அனுப்பவேண்டுகிறேன். வேறு யாருக்கும் இது சம்பந்தமாக நன்கொடைகள் வசூலிக்க அனுமதி கொடுக்கப்படவில்லை.

கே. கே. மேனன்
24—4—59
நிர்வாக அதிகாரி

பாலி நதி

[வித்துவான் திரு. வி. திருஞானசம்பந்த முதலியார்]

பாலிநதி என்பது தென்றமிழ் நாட்டு நதிகளில் சீரும் சிறப்பும் பழமையும் வாய்ந்து விளங்குவதாகும். இது பாலாறு என இப்போது வழங்குகின்றது. ஏறக்குறைய முந்நூறு மைல் நீளமும் ஒரு மைல், முக்கால் மைல் பரப்பும் உடையது. பாலிநதிக்கரைகளில் பல பிரபல நகரங்களும், ஊர்களும் கிராமங்களும் இருக்கின்றன. பழைய காலத்தில் இதன் வெள்ள நீர் மைசூர் முதல் செங்கற்பட்டு ஜில்லாவரையுள்ள நிலங்களுக்குப் பெரிதும் பாய்ச்சல் வளம் தந்து விளை பொருள்களால் மிக்குவிளங்கியது. தற்காலத்தில் வெள்ளம் வருவது அநேகமாக இல்லை. முப்பது வருடங்களாக வெள்ளம் குறைந்தமையால் செழிப்பும் குறைந்து விட்டது.

தெண்ணீர் வயற்றொண்டை நன்னாட்டில் சிறப்புற்ற நதிகள், சேயாறு, பாலாறு, வேகவதி, மஞ்சள்நீர் நதி, கம்பாநதி, பழைய பாலாறு, கல்லாறு, பொன்முகலி முதலியனவாகும். இவற்றுள் தொன்மையும், புகழும் வாய்ந்தது பாலிநதியே யாகும். தற்காலத்திலும் இதன்நீர் பால்போலும் வெண்மை கலந்த நிலைமையில் நீரிருக்கும் தன்மைபற்றியும் இதற்குப் பாலாறு எனப் பெயர் வழங்குகின்றதென்னலாம். மற்றும் வசிட்ட முனிவரின் பசுவர்கிய காமதேனு பொழிந்த பாலானது நீராக மாறிப் பெருக்கெடுத்து வந்த காரணம்பற்றிப் பாலிநதி எனப் பெயர் பெற்றதென்பதைத் தெய்வச் செந்தமிழ்ச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்துக் கூறு மாற்றானுமறியலாகும்.

"துங்கமாதவன் சுரபியின்
திருமுலை சொரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால்
வரைமிசைப் பொலிந்தே
அங்கணித்திலஞ் சந்தன
மகிலொடு மணிகள்
பங்கயத் தடம் நிறைப்பவந்
திழிவது பாலி"

என்பது திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்.

பொருனை நதி பாயும் காரணத்தால் பாண்டி நாட்டுக்குப் "பொருனை நாடு" என்றும், காவிரிநதி பாயுங் காரணத்தால் சோழ நாட்டுக்குக் "காவிரி நாடு" என்றும் பெயர் வழங்குவன போலத் தொண்டை நாட்டுக்கும் பாலிநதி பாய்கின்ற காரணம்பற்றிப் பாலி நாடு எனப் பெயர் வழங்குகின்றது. எனவே பாலிநதி தொண்டை நாட்டில் சிறப்புற்று விளங்குவதென்பதை அறியலாகும். வெள்ளம் வற்றிய காலங்களிலும் மக்கள் கசக்கால் தோண்டி அதன் மூலம் ஊறிவரும் நீரால் வயல்களைச் செழிக்க வைக்கும் பெருமிதம் இன்றும் பாலிநதிக்கு இருந்து வருகின்றது. இதன் சிறப்பை,

"பிள்ளை தைவரப் பெருகுபால்
சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணற்றிடர்
பிசைந்து கைவருட
வெள்ளநீரிரு மருங்குகால்
வழிமிதந் தேறிப்
பள்ளநீள்வயற் பருமடை
யுடைப்பது பாலி"

எனக்குன்றை நகர்க்குலக் கவியின் திருவாக்கால் அறிந்தின்புறலாகும்.

இப்பாலிநதி ஒரு காலத்தில் ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்கு முன் வேலூருக்குக் கிழக்கில் இரண்டாகப் பிரிந்திருக்கிறதெனத் தெரிகின்றது. பிரிந்த புதுப் பாலிநதியே இப்போது காஞ்சிமா நகர்க்குத் தெற்கே இரண்டரை மைல் தூரத்தில் ஓடுகின்றது. இது செங்கற்பட்டு வழியாகத் திருக்கழுக்குன்றம் சதுரங்கபட்டினத்தில் சென்று கீழ்க்கடலோடு கலந்து விடுகின்றது. விருத்தட்சீலநதியென இன்று வழங்கும் பழைய பாலாறு காவிரிப்பாக்கம், திருமாற்பேறு, தக்கோலம், கூவம் (திருவிற்கோலம்) வழியாகச் சென்று, கூவநதி எனப் பெயர்

பெற்றுச் சென்னையிற் கடலோடு கலந்து விடுகின்றது. செம்பரப்பாக்கம் குன்றத்தூர் ஏரிக்கு இதுவே பாய்கின்றது.

தொண்டை நாட்டிற்குப் பெருமை கூற வந்த புலவர் பெருமக்கள் யாவரும் பாலி நதியைப்பற்றிக் கூறாமலில்லை. காஞ்சிக் குமரகோட்டத்து அருச்சகர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிய கந்தபுராணத்துள் "ஆற்றுப்படலம்" என ஒரு படலம் அமைத்துப் பாலிநதியின் சிறப்பையும் வளத்தையும் முப்பத்தொன்பது செய்யுட்களால் கூறுகின்றார். மற்றும் காஞ்சிப்புராண ஆசிரியர் மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிய காஞ்சிப்புராணத்தில் பாலிநதியின் உற்பத்தியையும், மலைபடு பொருள்களைக்கொண்டு வருகின்ற நிலையையும், அது வயல்களை விளைவிக்கும் முறையையும் அழகழகாக எடுத்துக் கற்பனை செய்யும் முறை படித்தின்புறத்தக்கது.

பாலிநதியின் இருகரைகளிலும் எண்ணிறந்த திருக்கோயில்கள் அமைந்துள்ளன. பாலாற்றில் "திருவூறல் உற்சவம்" என்னும் விழா பல தலங்களிலும் நடைபெறுகின்றது. காஞ்சி ஏகாம்பரநாதர் காமாட்சியம்மையார் மாசிமகந்தோறும் செட்டித் தாங்கல் என்னும் ஊருக்கெழுந்தருள அவ்வூராரால் திருவூறலுற்சவம் கொண்டாடப் பெறுகின்றது. காஞ்சி வரதராசப் பெருமாள் சித்திரைப் பூரணைதோறும் பாலாற்றுக் கெழுந்தருளித் திருவூறல் உற்சவம் கொண்டருளுகின்றார். மற்றும் சித்திரையில் ஏகாம்பரநாதர், இளையனார் வேலூர் முருகப்பெருமான் உற்சவங்கள் பாலாற்றில் நடைபெறுகின்றன. பாலாற்று நீரைப் பல திருக்கோயில்களிலும் மேளவாத்தியங்களுடன் யானைமீது திருமஞ்சன நீர்கக் கொண்டு சென்று திருமுழுக்காற்றிச் சிறப்பெய்துகிறார்கள். ஆகவே பாலிநதி ஒரு தெய்வீக நதி என்பதும், பல்கோடி மக்களை ஊற்று நீரால் உண்பிக்கின்றதென்பதும், பல திருக்கோயில்கள் இதனிருகரைகளிலும் உள்ளன என்றும், விழாக்கள் பல நிலாக் காலங்களில் நடைபெறுகின்றன என்றும், சோழ நாட்டுக் கொள்ளிட நதிக்குப் பரப்பில் இணையானதென்பதும் மற்றும் பலவும் கண்டு இன்புறலாம்.

வாலிதாகிய குணத்தினன் வசிட்டனென்
றுரைக்கும்
சீலமாமுனி படைத்ததோர் தேனுவின் தீம்பால்
சாலநீடியே தொல்லைநாட் படர்ந்திடு தன்மைப்
பாலிமாநதிப் பெருமையான் பகர்வதற் கெளிதோ

—கந்தபுராணம்.

வாழ்க பாலிநதி.

அறிக்கை

மாயூரம் தாலுகா மூவலூர் ஸ்ரீ மார்க்க சகாய சுவாமி கோயில் கும்பாபிஷேகம்.

மாயவரம் ஜங்ஷனிலிருந்து மாயவரம்-கும்பகோணம் வழியில் முக்கால் கல் தூரத்தில் அமைந்துள்ளதும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் இம்மூவராலும் பூஜிக்கப் பட்டதுமான மூவலூர் ஸ்ரீ மார்க்க சகாயீசுவரருக்கு நிகழும் விகாரி ஆண்டு வைகாசித் திங்கள் 15-உ (29-5-59) வெள்ளிக்கிழமை சதய நட்சத்திரத்தில் உதயாதி நாழிகை 2¾க்குள் (காலை 6 மணிக்குமேல் 7 மணிக்குள்) ரிஷப லக்கணத்தில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதால் சிவனேசச் செல்வர்களான பக்தகோடிகள் அனைவரும் ஷை கும்பாபிஷேகத்திற்கு வந்து தரிசனம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

N. சுப்பிரமணியப்பிள்ளை
நிர்வாக தர்மகர்த்தா

டாக்டர் N. V. இரத்தினசபாபதிப்பிள்ளை
C. அய்யாத்துரை
தர்மகர்த்தர்கள்

K. G. இராஜன்
நிர்வாக அதிகாரி

சிவ விஷ்ணுத்தல அட்டவணை

சிவத்தலங்கள்

சோழ நாடு

தஞ்சாவூர் மாவட்டம்

	தலம். (1)	இறைவன், இறைவி. (2)	பாடல். (3)	ரயில் நிலையம். (4)	குறிப்பு. (5)
27	திருக்கடவூர் மயானம்.	பிரமபுரீசுரர். மலர்குழல் மின்னம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	திருக்கடவூர் ...	இங்குள்ள கிணற்றிலிருந்து திருக்கடவூர் ஈசுவரருக்குத் திருமஞ்சனம் போகிறது. சிவபெருமான் பிரமதேவரை நீருக்கி அவரை மறுபடி உயிர்ப்பித்து அவருக்கு சிருட்டித்தொழிலைக் கொடுத்தருளிய தலம், மேற்குப் பார்த்த சந்நிதி.
28	கடிக்குளம் (கற்பகனூர் கோயில்).	கற்பகேசுவரர், சௌந்தரநாயகி.	சம்பந்தர் ...	திருத்துறைப் பூண்டி. ...	கற்பகப் பிள்ளையார் சிவபெருமானைப் பூசித்து மாம்பழம் பெற்ற தலம்.
29	திருக்கடுவாய்க்கரைப் புத்தூர் (ஆண்டாள் கோயில்)	சுவர்ணபுரீசுவரர், சிவாம்பிகை.	அப்பர் ...	நீடாமங்கலம் ...	காசிப முனிவர் பூசித்த தலம்.
30	திருக்கடைமுடி (கீழையூர்)	கடைமுடிநாதேசுவரர், அபிராமி அம்மை.	சம்பந்தர் ...	ஆனதாண்டவ புரம்.	பிரமன் பூசித்த தலம். மேற்குப் பார்த்த சந்நிதி.
31	திருக்கண்டியூர் ...	வீரட்டேசுவரர், மங்கள நாயகி.	சம்பந்தர், அப்பர் ...	தஞ்சாவூர் ...	மேற்குப் பார்த்த சந்நிதி. அட்டவீரட்டானங்களில் ஒன்று. (பிரம்மாவின் தலையைக் கொய்த தலம்.) சப்த ஸ்தான தலங்களில் ஒன்று.

	(1)	(2)	(3)	(4)	(5)
32	திருக்கண்ணார் கோயில் (குருமாணக்குடி).	கண்ணாயிரேசுவரர், முருகுவளர் கோதை அம்மை.	சம்பந்தர்	... வைத்தீசுவரன் கோயில்.	தேவேந்திரன் சாபம் நீங்கி ஆயிரம் கண் பெற்ற தலம்.
33	கரவீரம் ...	கரவீரேசுவரர். பிரத்தியட்ச மின்னம்மை.	சம்பந்தர்	... திரு ஆரூர்	... கௌதம முனிவர் பூசித்த தலம்.
34	திருக்கருகாவூர் ...	முல்லைவனேசுவரர், கரும்பனையாள் அம்மை.	சம்பந்தர், அப்பர்	... பாபநாசம்	... தேவியார் ஆதரவற்ற ஒருத்திக்கு கருவைக் காத்ததாகச் சொல்லப்படுகிறது. அம்மைக்குக் கர்ப்பரட்சகி என்றும் பெயர். கற்பக விநாயகர் விசேஷம்.
35	திருக்கருக்குடி (மருதாந்தநல்லூர்)	சற்குணலிங்கேசுவரர், சர்வாலங்கிருதமின்னம்மை.	சம்பந்தர்	... கும்பகோணம்	... பிரமனும், சற்குணன் என்ற அரசனும் பூசித்த தலம். இராமர் பூசித்ததாகவும் சொல்லப்படுகிறது. மணல் லிங்கம்.
36	கருப்பறியலூர் ...	குற்றம்பொருத்தநாதேசுவரர், கோல்வளை அம்மை.	சம்பந்தர், சுந்தரர்	... வைத்தீசுவரன் கோயில்	தேவேந்திரன் குற்றத்தைப் பொறுத்ததால் குற்றம் பொறுத்தநாதர் என்று சொல்லப்படுகிறது.
37	கருவிலி ...	சற்குணநாதேசுவரர், சர்வாங்கநாயகி.	அப்பர்	... கும்பகோணம்	... இந்திரனும் தேவர்களும் பூசித்த தலம்.
38	திருக்கலயநல்லூர் (சாக்கோட்டை).	அமிர்தகலேசுவரர், அமிர்தவல்லி.	சுந்தரர்	... ,,	......
39	கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை).	சுந்தரேசுவரர், அழகம்மை.	சம்பந்தர்	... சீர்காழி	... பராசர முனிவர் பூசித்த தலம்.
40	திருக்களர் ...	களர்முளைநாதேசுவரர், அழகேசுரி அம்மை.	சம்பந்தர்	... திருஆரூர்	... பராசரரும், காளவ முனிவரும் பூசித்த தலம். துருவாச முனிவருக்கு இங்குள்ள நடராசர் தரிசனம் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

(1)	(2)	(3)	(4)	(5)
41 கன்றாப்பூர் ...	நடுதறியப்பர், மாதுமை அம்மை.	அப்பர் ...	திரு ஆரூர் ...	சுவாமி கன்றுக்குட்டி கட்டும் ஆப்பி லிருந்து தோன்றியதாகச் சொல்லப்படு கிறது ஒரு சைவப் பெண் வைணவ னுக்கு வாழ்க்கைப்பட்டு அவ்வீட்டி லுள்ள ஆப்பை சிவலிங்கமாகக் கருதி வழிபட அவள் புருஷன் கோடரியால் வெட்ட அவ்வாப்பிலிருந்து சிவபெரு மான் வெளிப்பட்டார். கோடரி காயம் சுவாமிமேல் தெரிகிறது.
42 கீழைத் திருக்காட்டுப் பள்ளி.	ஆரண்யசுந்தரேசுவரர், அகிலாண்டநாயகி.	சம்பந்தர் ...	சீர்காழி ...	மேற்குப் பார்த்த சந்நிதி.
43 மேலைத் திருக்காட்டுப் பள்ளி.	தீயாடி அப்பர், வார் கொண்ட முலை அம்மை.	சம்பந்தர், அப்பர் ...	பூதலூர் ...	......
44 காவிரிப்பூம் பட்டினம் (பல்லவனீச்சுரம்.	பல்லவனேசுரர், சௌந் திர நாயகி.	சம்பந்தர் ...	சீர்காழி ...	பல்லவராஜன் பூசித்த தலம். இயற்பகை நாயனாரும் பட்டினத்துப் பிள்ளையாரும் அவதாரம் செய்த தலம். மாடக் கோயில்.
45 சீர்காழி ...	பிரமபுரீசுவரர், திருநிலை நாயகி.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	,, ...	திருஞான சம்பந்தர் அவதாரம் செய்த தலம். கணநாத நாயனாரும் இவ் வூரில்தான் அவதரித்தார். இத் தலத்தை முக்கியமாக பிரமபுரம் என் றும், தோணிபுரம் என்றும் சொல்லு வார்கள்.
46 திருக்காறாயில் ...	கண்ணாயிர நாதேசுவரர் கைலாய நாயகி.	சம்பந்தர் ...	திருஆரூர் ...	சப்த விடங்க தலங்களில் ஒன்று. தேவேந்திரன், முசுகுந்த சக்ரவர்த்தி முதலியோர் பூசித்த தலம். ஆதிவிடங் கர்—குக்குட நடனம்.
47 திருக்காறூர் ...	செம்மேனி நாதேசுவரர், சிவயோகநாயகி.	சம்பந்தர், அப்பர் ...	பூதலூர் ...	கோயில் பூமி மட்டத்திற்குத் தாழ்ந்திருக் கிறது. உமாதேவியாருக்குச் சிவபெரு மான் அக்கினி ரூபமாய் தரிசனம் கொடுத்தருளிய தலம்.

(1)	(2)	(3)	(4)	(5)
48 கீழ்வேளூர்	கேடிலியப்பர், வனமுலை நாயகி	சம்பந்தர், அப்பர்	கீவளூர்	மாடக்கோயில், சுப்பிரமணியசுவாமி பூசித்த தலம். அஞ்சுவட்ட அம்மை சன்னிதி விசேஷம். அகத்தியர் பூசித்த லிங்கம் இருக்கிறது. சத்தி நாயனாருடைய அவதார தலமான வரிஞ்சையூர் 2 மைலில் இருக்கிறது.
49 திருக்குடந்தைக் காரோணம்.	காசி விஸ்வநாதர், காசி விசாலாட்சி.	சம்பந்தர்	கும்பகோணம்	மகாமகக்குளம் பக்கத்தில் இருக்கிறது நவநதிகளும் நவகன்னிகைகளால் பூசித்த தலம். நவகன்னிகை மண்டபம் கட்டப்பட்டு இருக்கிறது.
50 திருக் குடந்தைக் கீழ் கோட்டம்.	நாகேசுவரர், பெரிய நாயகி.	அப்பர்	,,	சூரியன் பூசித்த தலம். கங்கைக்கணப விசேஷம்.
51 திருக்குடமூக்கு	கும்பேசுவரர், மங்கள நாயகி.	சம்பந்தர், அப்பர்	,,	மங்களாம்பாள் சந்நிதி விசேஷம்.
52 திருக்குடவாயில்	கோணேசுவரர், பெரிய நாயகி.	சம்பந்தர்.	,,	திருணபிந்து முனிவர் பூசிக்க சுவாமி திருக்குடத்திலிருந்து வெளிப்பட்டார்.
53 குரக்குக்கா	கொந்தளேசுவரர், கொந்தள நாயகி.	அப்பர்	வைத்தீசுவரன் கோயில்.	அநுமார் பூசித்த தலம்.
54 வடகுரங்காடுதுறை	அழகு சடைமுடி நாதர், அழகு சடைமுடி அம்மை.	சம்பந்தர்	அய்யம்பேட்டை.	வாலி பூசித்த தலம்.

வைணவத் தலங்கள்

	ஊரின் பெயர். (1)	பிரயாண வசதி. (2)	பெருமாள், தாயார் திருநாமம் (3)	மங்களா சாஸனம் செய்த ஆழ்வார்கள். (4)	குறிப்பு. (5)
	பாண்டிய நாடு				
	திருச்சி மாவட்டம்.				
18	திருமெய்யம் ...	திருச்சி-மானாமதுரை மதுரை லைன், திருமயம் ஸ்டேஷன்.	சத்தியகிரிநாதன், உய்யவந்தாள் நாச்சியார்.	திருமங்கையாழ்வார்.	பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை இம்மலைக் குகையில் தங்கியிருந்தனன்.
	சோழ நாடு				
	தஞ்சாவூர் மாவட்டம்.				
16	திருக்கண்ணங்குடி ...	தஞ்சாவூர்-நாகூர் லைன், கீவளூர் ஸ்டேஷன்.	சியாமளமேனிப் பெருமாள், உலோகநாதன், அரவிந்தவல்லி உலோகநாயகித் தாயார்.	திருமங்கையாழ்வார்.	......
17	திருக்கண்ணபுரம் கண்வபுரம் என்று இதற்கு மறுபெயர் உண்டு.	மாயவரம் - அரந்தாங்கி லைன், நன்னிலம் ஸ்டேஷன்.	சௌரிராஜப்பெருமாள், கண்ணபுரநாயகி.	நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார்.	இங்குள்ள விமானம் வலம் வருபவருக்கு கண்ணிற்படாதவாறு அமைந்துள்ளதாம், இவ்வூர் எம்பெருமான் திருங்கரத்தில் பிரயோக சக்கரம் உள்ளது. திருமங்கையாழ்வாருக்கு இவ்வூரில் அதிக ஈடுபாடு உண்டு.
18	திருக்கண்ணமங்கை. ...	ஷை லைன், திருவாரூர் ஸ்டேஷன்.	பக்தவத்ஸலன், பக்தராவிப்பெருமாள், அபிஷேகவல்லித் தாயார்.	திருமங்கையாழ்வார்.	தேன் கூடு பூஜை பெறுவது இத்தலத்தின் சிறப்பு. திருக்கண்ணமங்கையாண்டாள் என்னும் பெரியார் வைணவர்களுக்கு வழிகாட்டியாய் இவ்வூரில் விளங்கினர் என்று சொல்லப்படுகிறது.

	(1)	(2)	(3)	(4)	(5)
19	திருச்சேறை ...	கும்பகோணம் ஸ்டேஷன்.	சாரநாதன், சாரநாயகி.	திருமங்கையாழ்வார்.	இத்தலத்தில் பெருமாள், தாயார், விமானம், தீர்த்தம், நிலம் என ஐந்தும் சாரமுள்ளவையாய் இருத்தலின் இதற்குப் பஞ்ச ஸார க்ஷேத்ரம் என்று பெயர் கூறுவர்.
20	திருத்தெற்றியம்பலம்.	சீயாழி ஸ்டேஷன் ...	செங்கண்மால், செங்கமலவல்லித்தாயார்.	,,	திருநாங்கூர்த் திருப்பதிகளிலிதுவுமொன்று. பெருமாள் திருநாமம் ஆழ்வார் குறித்தது.
21	திருத்தேவனார்தொகை. இஃதைச் சாலை தெய்வநாயகப்பெருமாள் சந்நிதி என்பர்.	சீயாழி ஸ்டேஷன் ...	மாதவப்பெருமாள், தெய்வநாயகன், கடல்மகள் நாச்சியார்.	,,	மாதவன் என்னும் பெயர் ஆழ்வார் குறித்தது.
22	திருநறையூர். வடமொழிப்பெயர் "ஸுகந்தகிரி" என்பது. "நாச்சியார் கோயில்" என வழங்கும்.	கும்பகோணம் ஸ்டேஷன்.	நம்பி, நம்பிக்கை நாச்சியார்.	,,	திருமங்கை மன்னன், திருவாழி, திருச்சங்கு, திருவிலச்சினை பெற்ற தலம். இவ்வூரில் கற்கருடன் சேவை விசேஷம்.
23	திருமணிக்கூடம் ...	சீயாழி ஸ்டேஷன் ...	மணிக்கூட நாயகன், திருமாமகள் நாச்சியார்.	,,	......
24	திருவழுந்தூர், தேரழுந்தூர் என்பர்.	சென்னை - திருச்சி மெயின் லைன்.	ஆமருவியப்பன், செங்கமலவல்லித்தாயார்.	,,	......
25	திருவாலி, திருநகரி. வடமொழியில் இது "ஆலிங்கன க்ஷேத்ரம்" எனப்படுகிறது.	சீயாழி ஸ்டேஷன்	நரஸிம்மப் பெருமாள், வயலாலி மணவாளன் அம்ருதகடவல்லித் தாயார்.	குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார்.	நரஸிம்மப்பெருமாள் கோயில்கொண்ட திருவாலியும், மணவாளன் கோயில் கொண்ட திரு நகரியும் வெவ்வேறு ஊர்களாயினும் இரண்டும் சேர்ந்து ஒரே திருப்பதியாகக் கணக்கிடப்படுகிறது. திருமங்கையாழ்வார் அவதார ஸ்தலம்.

	(1)	(2)	(3)	(4)	(5)
26	திருவிந்தளூர். ஸுகந்தவன க்ஷேத்ரம்.	சென்னை-திருச்சி மெயின் லைன், மாயவரம் ஸ்டேஷன்.	பரமளரங்கநாதன், மருவினிய மைந்தன். ஸுகந்தவன நாதன், சந்த்ரசாப விமோசன வல்லித்தாயார், புண்டரீகவல்லித் தாயார்,	திருமங்கையாழ்வார்.	......
27	திருவிண்ணகர் உப்பிலியப்பன் சந்நிதி என வழங்கும்.	கும்பகோணத்தை யடுத்த திருநாகேஸ்வரம் ஸ்டேஷன்.	உப்பிலியப்பன், பூமிதேவி நாச்சியார்.	பேயாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார்.	இது சிறந்த பிரார்த்தனை ஸ்தலம். இவ்வெம்பெருமான், உப்பில்லாத ப்ரஸாதமே அமுது செய்வர். ஆதல்பற்றியே "உப்பிலியப்பன்" என்ற திருநாமம் என்பர். "ஒப்பிலியப்பன்" என்றலுமுண்டு. தன்னொப்பாரில்லப்பன்" என்பது நம்மாழ்வார் திருவாக்கு.
28	திருவெள்ளக்குளம் "அண்ணன் கோயில்" என்பர்.	சீயாழி ஸ்டேஷன் ...	கண்ணன், நாராயணன், பூவார் திருமகள் நாச்சியார்.	திருமங்கையாழ்வார்.	......
	திருவெள்ளியங்குடி. "பார்கவபுரி" என்பது வடமொழிப் பெயர்.	சென்னை-திருச்சி மெயின் லைன், திருவிடைமருதூர் ஸ்டேஷன்.	கோலவல்லி ராமன், மரகதவல்லித் தாயார்.	"	இவ்வூரில் கருடன், சங்கு, சக்ரமேந்தி வீற்றிருக்கின்றனன்.
30	நந்திபுர விண்ணகரம். "நாதன் கோயில்" என வழங்குகிறது.	கும்பகோணம் ஸ்டேஷன்.	விண்ணகரப் பெருமாள், ஜகந்நாதன், நாத நாதன், செண்பக வல்லித்தாயார்.	"	......
31	நாகை (நாகப்பட்டணம்).	தஞ்சாவூர்-நாகூர் லைன். நாகப்பட்டினம் ஸ்டேஷன்.	ஸௌந்தர்ய ராஜன், ஸௌந்தர்யவல்லி.	"	.....
32	பார்த்தன் பள்ளி ...	சீயாழி ஸ்டேஷன் ...	தாமரையாள் கேள்வன், தாமரை நாயகி.	"	......

	(1)	(2)	(3)	(4)	(5)
33	புள்ளம் பூதம்குடி ...	சென்னை-திருச்சி மெயின் லைன், சுவாமி மலை ஸ்டேஷன்.	வல்விராமன். பொற்ருமரையாள்.	திருமங்கையாழ்வார்.	......
34	மணிமாடக் கோயில்.	சீயாழி ஸ்டேஷன் ...	நந்தாவிளக்குப் பெருமாள், நரநாராயணன், புண்டரீகவல்லி.	,,	இதுவே திருநாங்கூர் எனப்படுவது. இத்தலத்திலேயே வைகுந்த விண்ணகரம், அரிமேய விண்ணகரம். வண்புருடோத்தமம், செம்பொன் செய்கோயில், திருத்தெற்றியம்பலம் என்னும் திருப்பருகளும் உள்ளன.
35	வண்புருடோத்தமம்.	,,	புருஷோத்தமன், புருஷோத்தம நாயகி.	,,	திருநாங்கூர்த் திருப்பதிகள் ஆறனுள் இது ஒன்று.
36	வைகுந்த விண்ணகரம்.	,,	வைகுந்த நாதன், தாமரைக்கண்ணுடைய பிரான், வைகுந்தவல்லி.	,,	.....
37	அன்பில் ..	சென்னை-திருச்சி கார்ட் லைன், லால்குடி ஸ்டேஷன், ஷி மெயின் லைன் பூதலூர் ஸ்டேஷனுமாம்.	வடிவழகிய நம்பி. அழகியவல்லித் தாயார்.	திருமழிசையாழ்வார்,	இந்தக் கோயிலில் கல்வெட்டுக்கள் நிறைய உள்ளன.
38	உறையூர். வடமொழியில் "நிசுளாபுரி" தமிழ் நூல்கள் "கோழி" என்று இவ்வூரைக் கூறும்.	திருச்சி ஜங்ஷன் ...	அழகிய மணவாளன், உறையூர் வல்லி, வாஸலக்ஷிமி (வடமொழியில்).	திருமங்கையாழ்வார்.	வரலாற்றுப் பிரசித்திபெற்ற திருப்பதி இது. திருப்பாணழ்வார் அவதரித்த தலமும் இதுவே. குலசேகரர் "கோழிக்கோன்" என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்கின்ருர்.
39	கரம்பனூர். உத்தமர் கோயில் எனவும் வழங்கும்.	சென்னை-திருச்சி கார்ட் லைன், உத்தமர் கோயில்.	புருஷோத்தமப் பெருமாள், பூர்வாதேவித் தாயார்.	,,	உத்தமன் என்பது ஆழ்வார் குறித்த திருநாமம். பிரமன் ஆலயம் இக்கோயிலில் உள்ளது. சிவன் கோயிலுமுள்ளது.